படைப்பு
ஊற்று-4 | நதி-6 | அக்டோபர்-2021 | திங்களிதழ்
ISSN : 2582-4015
www.padaippu.com

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

இந்தச் சமூகத்தில் நான் சந்தித்த சவால்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக யுவ புரஸ்கார் விருதை எதிர்கொண்டேன்..

- எழுத்தாளர் மலர்வதி அவர்களுடனான நேர்காணல்

- சில்வியா பிளாத்தின் 'பெண் லாசரஸ்'

- தங்கேஸ்

- மினுமினுத்த விமான நிலையங்களே!

- தமிழன் சங்கர்

- கன்னி மயில்

- நிலாகண்ணன்

படைப்பு
தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-6 | அக்டோபர் 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
ஸ்டெல்லா தமிழரசி
கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **“இந்தச் சமூகத்தில் நான் சந்தித்த சவால்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக யுவ புரஸ்கார் விருதை எதிர்கொண்டேன்..”**
  - எழுத்தாளர் மலர்வதி அவர்களுடனான நேர்காணல் -பக். 05
- **மனநிலைக் குறிப்புகள் 13**
  - ஆதிரன் -பக். 16
- **வன்மம் பெருகிய வாழ்வு**
  - கவிஜி -பக். 21
- **வலி மிகுந்த கவிதைகள்**
  - ஜெயா நவி -பக். 27
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 38
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 44
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 49
- **தூர வீச வேண்டிய விதிகள்**
  - மா. பார்த்திபன் -பக். 52
- **இயற்கை தந்த முதல் இசைக்கருவி**
  - கோ.லீலா -பக். 58
- **சில்வியா பிளாத்தின் ‘பெண் லாசரஸ்’**
  - தங்கேஸ் -பக். 61

சிறுகதைகள்

- **மினுமினுத்த விமான நிலையங்களே!**
  - தமிழன் சங்கர் -பக். 30
- **அப்பாவின் வாசம்!**
  - வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் -பக். 55

கவிதைகள்

- **ஆழி. சத்தியன்** -பக். 15
- **ராம் பெரியசாமி** -பக். 25
- **கி.சரஸ்வதி** -பக். 25
- **ந.சிவநேசன்** -பக். 26
- **கதிரவன் வீ** -பக். 26
- **ஊர்மிளை**
  - கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் -பக். 36
- **நிலாகண்ணன்** -பக். 48
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 14**
  - ஜின்னா அஸ்மி -பக். 54

தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' நாற்பத்திரண்டாம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

அதிகார நாக்குகளின் வன்மங்கள் பின்தொடர்ந்து கொண்டிருந்தாலும் 'மனுசங்க' படும் துயரங்களை எழுத்தில் வடித்துக்கொண்டே இருந்தவர் கவிஞர் இன்குலாப். யார் மறைக்க நினைத்தாலும் நிரந்தரமான பதிவுகளாய் அவரது கவிதைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கேள்வி கேட்டபடியே இருக்கும். அதிகாரங்கள் தரும் பரிசுகளை இறந்தும் நிராகரித்தவர் அவர். மக்களுக்காக மட்டுமே எழுதிய கவிஞர் இன்குலாப் குறித்து மு.முருகேஷ் இந்த இதழில் எழுதியிருக்கும் கட்டுரை மிக முக்கியமானது. அவர் எந்தப் புள்ளியில் நமக்கான அடையாளமாகிப்போகிறார் என்பதைத் துல்லியமாகச் சித்தரித்துள்ளார். யாருக்காக எழுதப்படுவது கவிதை.. என்ற தவிர்க்க முடியாத கேள்விக்கு அவரது கவிதை வாழ்வே விடையாகிப்போகிறது.

கற்பனை கலந்த வெற்றுப் புனைவுகள் அந்தந்த நேரத்துப் பொழுதுபோக்குகளாய் உதவுமே அன்றி அசலான படைப்புகளாய் வரலாற்றில் எஞ்சுவதில்லை. சமகாலத்தைப் பதிவு செய்தாலே போதும், சமகாலத்தின் நிகழ்வுகள் மீதான ஒற்றைப் பார்வை, விமர்சனப் பார்வை என இவற்றை மீறிக் கொதித்தெழுந்த குரல் கவிஞர் இன்குலாப் உடையது.

சமகாலத் தன்னுணர்ச்சிக் கவிதைகளை உற்றுநோக்கும் ஆண்டன் பெனியின் வினவல் 'எல்லாருக்குமான கவிதையை நாம் எப்போது எழுதப்போகிறோம்.:' என்பது.. கற்பதுவே கேட்பதுவே பகுதியில் வெளியாகியிருக்கிறது. ஆம்.. மனநிலைக் குறிப்புகளில் ஆதிரன் கூறியிருக்கும் உலகாயுதப் பார்வை கவிதையில் தொனிக்க வேண்டியதும் அவசியமாகிறது.

சமகாலத்தை எப்படிப் பேசுவது, எதைப் பேசுவது என்பதிலும் கலைப் படைப்புகள் கவனம் செலுத்த வேண்டியுள்ளன. சமகாலத்தைக் கொரானா பாதிப்புகள், நீட் தேர்வுக் குளறுபடிகள்வழி அணுகும் கவிஞர் பூபாலனின் தீ நுண்மிகளின் காலம் என்னும் கவிதைத் தொகுப்பு மிக முக்கியமானதாகிறது. இந்த இதழில் விமர்சனமாகியிருக்கும் இந்நூலின் கவிதைகள் முகமூடிகளின் பின்னால் மறைந்திருக்கும் காலத்திற்கான சாடல்களாகின்றன.

தேநீர் சாலையில் எழுத்தாளர் கரிகாலன் லிஃப்ட் என்ற திரைப்படத்தின் பின்னால் கண்டறிய வேண்டிய சமகால அரசியலை வெளிப்படுத்துகிறார். தாராளமயமும் வலதுசாரித் தத்துவமும் பின்னிப் பிணைந்து ஐடி இளைஞர்களின் மனநிலை உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ள சூழல் அப்பத்திகளில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இப்படி சமகாலத்தையும் படைப்புகளையும் இணைக்கும் புள்ளியில் தகவு இயங்குவது அதன் சரியான திசைக்கான பயணத்தை எடுத்துக்காட்டுகிறது. அதற்கேற்ப இந்த இதழில் எழுத்தாளர் மலர்வதியின் நேர்காணலும் வெளியாகியுள்ளது.

கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

– ஆசிரியர் ■

● வீரசோழன் க.சோ.திருமாவளவன்

“இந்தச் சமூகத்தில் நான் சந்தித்த சவால்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக யுவ புரஸ்கார் விருதை எதிர்கொண்டேன்..”

– எழுத்தாளர் மலர்வதி அவர்களுடனான நேர்காணல்

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையை அடுத்த வெள்ளிகோடு பகுதியில் வசித்துவருபவர் எழுத்தாளர் மலர்வதி. இவரின் படிப்பு பாதியில் நின்றுபோனாலும், வாசிப்பு மட்டும் நிற்காமல் தொடர்ந்துகொண்டே இருந்தது. தொடர்ந்த வாசிப்புகளும் பல்வேறு வாழ்க்கை அனுபவங்களும் இவரின் தொடக்ககால எழுத்துக்களாக நாடகங்களாக உருப்பெற்று வெளிவந்தன.

2008ஆம் ஆண்டு ‘காத்திருந்த கருப்பாயி’ நாவல் முதல் படைப்பாக வெளிவந்தது. அதன்பின் 2012ஆம் ஆண்டு ‘தூப்புக்காரி’ நாவல் வெளியானது. அந்த ஆண்டின் சாகித்திய அகாதமி யுவ புரஸ்கார் விருதைப் பெற்றது.

சமூகத்தில் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறையையும் அவர்கள் சந்திக்க நேரும் அவமானங்களையும் இன்னல்களையும் மிக எளிமையான முறையில், அழகான வழக்கு மொழியில் படைக்கும் எழுத்தாளர் மலர்வதி அவர்களுடனான நேர்காணலிலிருந்து....

உங்களின் இலக்கிய ஆர்வத்திற்கு முக்கியக் காரணமாக எது இருந்தது என்பது பற்றிக் கூறுங்கள்.. எதனால் எழுதுவது என்று முடிவெடுத்தீர்கள்?

இலக்கிய ஆர்வம் என்பது சிறு வயதில் இருந்தே என்னுடனே பயணித்திருக்கிறது. இலக்கியம் எழுதுகிறேன் என்பது எனக்கு அந்த வயதில் தெரியவில்லை. மேடை நாடகங்கள், விரும்பும் நபர்களுக்குக் கடிதம் மற்றும் வாழ்க்கைக் குறிப்பு எழுதுவதெனச் சிறு வயதிலிருந்தே அதாவது பள்ளிப்பருவத்திலிருந்தே எழுத்துடன் எனக்குத் தொடர்பு இருந்திருக்கிறது. 2008ஆம் ஆண்டு நான் எழுதிய "காத்திருந்த கருப்பாயி" எனும் குறுநாவல் இலக்கிய உலகிற்கு அறிமுகம் ஆகிறது. ஆனால் இலக்கியம் சார்ந்து நிறைய எழுத வேண்டும் மற்றும் பெரிய நூல் எழுதிப் பதிப்பிக்க வேண்டும் என அந்த வயதில் எனக்குத் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. ஆனால் எழுத்து மட்டும் எப்போதும் என்னுடனே இருந்தது.

2012ஆம் ஆண்டு நான் எழுதிய "தூப்புக்காரி" நாவல் தமிழக அளவில் ஒரு பெரிய வரவேற்பைப் பெற்றதோடு, இலக்கியப் பரப்பில் பரவலான அறிமுகத்தைப் பெற்றது. அதன் பிறகே எழுத்தாளராகத் தீர்மானமான உறுதி செய்துகொண்டேன். அந்த நாவல்களில் எனக்குக் கிடைத்த பல்வேறு அனுபவங்கள், விமர்சனங்கள், வாசகர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களினுடைய கடிதங்கள் என இவை என்னை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தின. துப்புரவுத் தொழிலாளிதானே என வெறும் பொருளாகவே கடந்துபோனவர்கள்கூட தூப்புக்காரியை வாசித்தபின் நின்று நிதானித்து, மானசீகமாக அவர்களை மனிதர்களாக மதிக்கக்கூடிய வகையில் மாறி இருக்கிறார்கள் என்ற ஒரு வெற்றியைக் கண்ட பிறகு நம் இலக்கியம் நம் எழுத்து சமூகத்திற்குத் தேவை, அதனால் நாம் முழு நேர எழுத்தாளராக மாற வேண்டுமென்ற தீர்மானத்தை எடுத்தேன்.

மறக்க முடியாத உங்கள் இளம் வயது நாட்கள் எப்படி நகர்ந்தன?

மறக்க முடியாத என் இளம் வயது நாட்கள் எல்லோருக்குமானதைப் போல இளமையில் வரக்கூடிய காதல், இளமையில் காணக்கூடிய கனவு, இளமையில் இருக்கக்கூடிய கற்பனைகள் என இருந்தன. இன்றைக்கும் நான் திரும்பிப்பார்க்கும்போது வாழ்ந்தேன் என்று உணர்வது அந்த நாட்களைத்தான். அந்த இளமைக்காலங்களில் மட்டும்தான் நான் எனக்கான ஒரு வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறேன் என்று எண்ணுமளவிற்குப் பசுமையான பல்வேறு நினைவுகள் குறிப்பாக என் நட்பு வட்டாரங்கள் மனதில் தோன்றுகின்றன.

நான் பதிமூன்று வயதிலேயே மேடை நாடகம் எழுதும் அளவிற்கு வலிமை பெற்றிருந்தேன். அந்த மேடை நாடகங்களை எழுதுவதோடு மட்டுமல்லாது, இயக்கி என் போன்ற பருவ வயதையொத்த சம தோழிகளோடு மேடையில் அரங்கேற்றம் செய்து, நடிகர்களாக மாற்றி அவர்களை ரசித்த ஒரு காலம் என்பது என் வாழ்க்கையின் பொன்னான வசந்தகாலம். அதை மறக்க முடியாது. அதிலிருந்து கிடைத்த சக்தி, ஆற்றல், அந்த ஞாபகம், அந்த வாழ்க்கை அனுபவம் இவைதான் என்னை ஒரு இலக்கியவாதியாகச் செதுக்கியிருக்கும் என்று நினைக்கிறேன். எல்லா நினைவுகளும் இன்றும் என் மனவோட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைதான் என்னுடைய இலக்கியத்திற்கு உரமாக இன்றும் இருக்கின்றன.

உங்கள் எழுத்துக்கு யாரை முன்மாதிரியாகக் கருதுகிறீர்கள்? நீங்கள் முதன்முதலில் வாசித்த புத்தகம்?

என்னுடைய எழுத்து இவர்களைப் போன்று இருக்க வேண்டும், இவர்கள் எழுத்து மாதிரி அமைய வேண்டும் என்று நினைத்தது இல்லை. என்னுடைய எழுத்திற்கு யாரும் முன்மாதிரி கிடையாது. எல்லா எழுத்தாளர்களுடைய எழுத்துக்களையும் வாசிக்கிறேன். அவர்கள் சார்ந்த அனுபவங்கள், அவர்களுடைய கற்றல், அவர்களுடைய நிலையிலிருந்து ஒரு சமூகத்தில் புதிய புதிய

விசயங்களைப் பதிப்பு செய்துகொண்டே போய்க்கொண்டிருக்கிறார்கள். எல்லா எழுத்தாளர்களுடைய நட்பிலும், உறவிலும், குழந்தையாக, சக தோழியாக இருக்கிறேன். ஆனால் முன்மாதிரியாக யாரும் இல்லை.

நான் எடுத்தவுடனே இலக்கியப் புத்தகங்கள் வாசிக்கவில்லை. எல்லாக் குழந்தைகள் போன்றும் ஆரம்பக் காலத்தில் சிறுவர்மலர், தங்கமலர் என இப்படித்தான் எனது வாசிப்பு ஆரம்பமானது.

ஆரம்பக் காலத்தில் வெகுஜன நாவல்கள் வாசித்ததால் கற்பனை வளம் அதிகமானது. அதிலிருந்துதான் எனக்கு நிறைய விஷயங்கள் கற்றுக்கொள்ள முடிந்தது.

பிறகு இலக்கியவாதியாக நான் பரிமாணம் பெற்ற பிறகு என்னுடைய வாசிப்பின் கவனமும் களங்களும் மாறிப்போயின. பெண்கள் சார்ந்து அவர்கள் அனுபவிக்கக்கூடிய பிரச்சினைகளை மையப்படுத்தக்கூடிய படைப்புகளை நான் விரும்பி வாசித்தேன் மற்றும் அதுவே எனக்குப் பழக்கமாகவும் இருக்கிறது.

எல்லா எழுத்தாளர்களுடைய எழுத்துக்களும் என்னோடு பயணித்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தளத்திலிருந்து எழுதுகிறார்கள். அதை நாம் வாசிக்கிறோம். அவர்களின் எழுத்தில் எது நமது வாழ்விற்கு, பயன்பாட்டிற்குத் தேவையோ அதை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர அவர்கள் மாதிரியான எழுத்து இருக்க வேண்டுமென்று யாரையும் நினைக்கவில்லை.

முதன்முதலில் நீங்கள் அச்சு வடிவத்தில் கொண்டு வந்த உங்கள் முதல் படைப்பு எது? அந்தத் தருணத்தை எவ்வாறு உணர்ந்தீர்கள்?

எனது உலகம் சின்ன உலகமாக இருந்தது. நான் வாழக்கூடிய எனது வசிப்பிடத்திற்கு அருகில் ஒரு தேவாலயம் இருந்தது. அந்தத் தேவாலயத்திலே வளர்ந்த பெண்ணாக என்னைச் சொல்ல முடியும். அங்கு பாட்டுப் பாடி, பீடப்பணிகள் செய்து, அங்குள்ள வேலைகளில் ஈடுபட்டு வளர்ந்த ஒரு பெண் நான்.

எனது ஆரம்பக்கால எழுத்து.. மேடை நாடகங்கள் எழுதுவது, சொற்பொழிவுகள்

எழுதிக் கொடுப்பது, என்னுடைய தேவாலயம் சம்பந்தமான விசயங்களை எழுதுவது, திருப்பலிக்கான முன்னுரை எழுதுவது, விளக்கவுரை எழுதுவது, மன்றாட்டுகள் எழுதுவது என இருந்தது. பார்க்கும்போது, வித்தியாசமான எழுத்துத்தன்மை இருக்கிறது என்பதை எனது நண்பர்கள் அறிமுகம் செய்தனர்.

என்னுடைய எழுத்தை எப்படியாவது ஒருமுறை புத்தகமாகப் பார்க்க வேண்டுமென்று உண்மையாக நிறைய ஆசைப்பட்டிருக்கிறேன். அந்த ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்றால் நிறைய காசு தேவைப்பட்டது. முதன் முதலில் அச்சாகப் பார்த்த படைப்பு சமயம் சார்ந்த "கருணை ஏசுவின் கல்வாரிக் கண்ணீர்" எனும் கட்டுரை நூல். அவருடைய வாழ்க்கை, இறப்பு குறித்தும் அடித்தட்டு மக்கள் எவ்வளவு பின்னால் தள்ளப்படுகிறார்கள் என்பதையும் வைத்து எழுதப்பட்டதுதான் அந்தக் கட்டுரை நூல்.

அதை அச்சாக்க வேண்டுமென்ற ஆசை வந்தது. எனக்கு இப்போதும் ஞாபகம் இருக்கிறது. 500 பிரதிகள் எங்கள் ஊரில் உள்ள டெல்டா அச்சகத்தில் போய்க் கேட்டேன். 'என் கையில் பணம் இல்லை. உடனடியாகப் பணமும் தர இயலாது. 24 பக்கங்கள்தான். எனக்கு அச்சுப் பிரதியாக அச்சாக்கித் தர வேண்டும்' என்று கேட்டேன். புத்தகம் அச்சிட்டுத் தந்தார்கள். 500 பிரதிகளுக்கு 3850 ரூபாய். அது அப்போது பெரிய தொகை. கடனாகச் சொல்லியே அச்சான புத்தகங்களை வாங்கினேன்.

அந்த அச்சகத்திற்குப் போய்ப் புத்தகத்தைக் கையில் எடுத்துப் பார்த்தவுடன் அவ்வளவு பிரமிப்பு. கையெழுத்துப் பிரதியிலிருந்து அச்சுப் பிரதியாகப் பார்த்தபோது என் மனசுக்கு ஏற்பட்ட அளவில்லா மகிழ்ச்சியை எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. அந்தப் புத்தகத்தின் வாசனையை நுகர்ந்து பார்த்து அதை அனுபவித்தபோது இருந்த அந்த நிலை ஒரு நல்ல அனுபவமாக இருந்தது. அதுதான் என் எழுத்தை முதன்முதலில் அச்சில் பார்த்தது. அது 2004ஆம் வருடத்தில் வந்தது. அதே அச்சகத்தில் ரூபாய் பதினைந்தாயிரம் சில்லறைக்கு 2008ஆம் ஆண்டு "காத்திருந்த கருப்பாயி" எனும் நாவலை அச்சாக்கம் செய்தேன்.

தூப்புக்காரி நாவல் எழுத உந்துதலாக இருந்தது எது?

எப்போதுமே இலக்கியம் எழுத்து சமூகம் கண்டுகொள்ள மறந்த மனிதர்கள், அவர்களின் உளவியல், தொழில் சார்ந்த ரணங்கள் என இவை எல்லாமே என் மனதிற்குள் வலியை ஏற்படுத்திக்கொண்டே இருக்கும். அந்த அடிப்படையில் "தூப்புக்காரி" நாவல் எழுதினேன்.

தொழிலின் அடிப்படையில் மனிதர்கள் தரம் பிரிக்கப்படுகிறார்கள். கோட்டு சூட்டு போட்டுப் பார்க்கக்கூடிய வேலைக்குத்தான் மதிப்பு அதிகம். கல்வி சார்ந்த வேலைகளுக்கு அதிக மதிப்பு. இந்தச் சமூகத்தில் அடிமட்டத் தொழில் புரிபவர்களை அந்தத் தொழிலை வைத்துப் பின்னுக்குத் தள்ளக்கூடிய நிலைமை

காலம்காலமாகத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

தூப்புக்காரி நாவல் தலித்தியப் பார்வையில் பார்க்கப்பட்டாலும், என்னுடைய பார்வையில் அதை நான் பெண்ணிய நாவலாக எழுதினேன். இந்த நாவல் எழுதுவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, பெண்ணிய நோக்கு. ஒரு பெண் தான் சார்ந்து இருக்கக்கூடிய எந்த அன்பை இழந்தாலும் அவள் தற்கொலைக்குப் போகக்கூடாது. அவள் தனியொரு பெண்ணாக எதிர்கொள்ள வேண்டும். அதில் வரக்கூடிய பூவரசி கதாபாத்திரம் தன் அன்புக்குரியவர்களை இழந்த நிலையிலும் வாழ வேண்டுமென்று முடிவெடுப்பார். இரண்டு, நான் வாழக்கூடிய சூழல் சாக்கடையோ, துப்புரவு தொழில் சார்ந்து சாதி சார்ந்த சமூகமோ இல்லை.. ஆனால் நான் வாழும் பகுதியிலிருந்து 21 கி.மீ தொலைவில் உள்ள வடசேரிப் பகுதியில் சாக்கடை அள்ளுகிறவர்களைப் பார்த்திருக்கிறேன். அந்த மலம் அள்ளுகிறவர்களுக்கு இந்தச் சமூகம் கொடுக்கக்கூடிய ஒரு மதிப்பையும் கவனித்திருக்கிறேன்.

ஒரு இலக்கிய அரங்கில் துப்புரவுத் தொழிலாளர்களுடைய நிலைமையைப் பற்றித் தோழர் கணேசன் அவர்கள் ஆழமாகப் பேசிக்கொண்டிருந்தார். அதில் "வயிற்றுப் பிழைப்புக்காக" மல ஜலம் வாளியில் வழிகிற அளவிற்குத் தலையில் சுமந்து செல்லக்கூடிய மக்கள் வாழும் நாடு எது? என்று ஒரு வார்த்தையைக் கூறினார். அப்போதுதான் நான் அதை யோசித்தேன்.

என்னுடைய அம்மா ஒரு நடுநிலைப்பள்ளியில் ஆயாவாக வேலை பார்த்தார்கள். அந்த ஆயா வேலைக்கு இந்தச் சமூகத்தில் கிடைத்த ஒரு நிலையை வைத்து ஒட்டுமொத்தச் சமூகத்தையும் உள்வாங்க முடிந்தது. இந்த இரண்டு காரணங்களை வைத்துத் தூப்புக்காரி நாவலை எழுதினேன்.

தொழிலில் அருவெறுப்பு இல்லை. சாக்கடை அள்ளுகிறவர்கள் சாக்கடை அள்ளுவதை நிப்பாட்டினால் இந்த நாடு நாறிப் போகும். அதுவும் மேம்பட்ட தொழில். அந்த மக்களினுடைய மகத்துவத்தை, தொழில் சார்ந்து பண்ணக்கூடிய ரணங்களை, அவர்கள் படும் வலியை வெளி உலகிற்குச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் தூப்புக்காரி நாவலை எழுதினேன்.

இளம் எழுத்தாளர்களுக்குரிய சாகித்திய அகாதமி விருது பெற்றுக்கொண்டபோது உங்கள் மனநிலை எப்படியாக இருந்தது?

இளம் எழுத்தாளர்களுக்குரிய சாகித்திய அகாதமி விருது அறிவிக்கப்பட்டபோது, நம்பமுடியாத தருணமாக இருந்தது என்பதை மறுக்காமல் ஒப்புக்கொள்கிறேன். 2008ஆம் ஆண்டு வெளிவந்த "காத்திருந்த கருப்பாயி" நாவல் கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் இலக்கிய அமைப்புகள் மத்தியில் எனக்கு ஏதோ ஓரளவிற்கு அறிமுகத்தைத் தந்து இருந்தது. ஆனால் மலர்வதி என்ற படைப்பாளி சமூகத்திற்கு வரவே இல்லை.

தூப்புக்காரி நாவல் வந்த வேகமும், வாசகர்களும், அதற்கான விமர்சனங்களும் மக்கள் மத்தியில் பெரும் கவனத்தைப் பெற்றன. அந்த வருடத்திலேயே சாகித்திய அகாதமியின் யுவ புரஸ்கார் விருது எனக்கு அறிவிக்கப்பட்டது. எனக்கு என்ன நடக்குது என்றே தெரியவில்லை. பிரமை பிடித்தது போல் ஆகிவிட்டேன். ஏனென்றால் இலக்கியம் எனும் முதல் படியில் ஏறி ஒரு எட்டு வைத்து அந்தக் கணத்திலேயே அவ்ளோ பெரிய விருது எனக்குக் கிடைத்தது.

நான் இனிமேல் என்ன பண்ண வேண்டும்? எங்கே போக வேண்டும்? இலக்கியத்திற்கான களத்தில் எப்படிப் பயணிக்கப் போகிறேன்? எனக்கான ஆற்றல் இருக்கிறதா? என்ற பிரமிப்பு எழுந்தது. இந்தச் சமூகத்தில் நான் சந்தித்த சவால்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக யுவ புரஸ்கார் விருதை எதிர்கொண்டேன்.

மனிதக் கழிவுகளை அகற்ற பெண்களே அதிகம் பயன்படுத்தப்படுகிறார்கள். இதைப்பற்றி உங்கள் கருத்து?

மனிதக் கழிவுகளை அகற்ற பெண்களே அதிகம் பயன்படுத்தப்படுகிறார்கள்

என்று சொல்ல முடியாது. ஆனால் பெண்கள் உடல்ரீதியாக அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

தூப்புக்காரி நாவல் எழுதி முடித்த பின்னரே உண்மையாகத் துப்புரவுத் தொழிலாளர்களைச் சந்தித்தேன். ஒருவேளை துப்புரவுத் தொழிலாளர்களை முதலிலே சந்தித்திருந்தால் அவர்களின் வாழ்க்கை வலிகளுக்குள் இன்னும் ஆழமாய் இறங்கி அதிகமான தகவல்களை நாவலுக்குள் வைத்திருக்கலாம்.

தொழில் சார்ந்த ஒடுக்கப்பட்ட வலிகளைத்தான் பதிவு பண்ண முடிந்ததே தவிர தொழில் சார்ந்து அனுபவிக்கக்கூடிய அதாவது முறையான பாதுகாப்பு இல்லை என்றெல்லாம் பதிவு செய்யவில்லை. இந்த நாவலுக்குப் பின் அவர்களையெல்லாம் சந்தித்து, அவர்களுடைய மாநாடுகளில் கலந்துகொண்டபோது எனக்குக் கிடைத்த தகவல்களில் முக்கியமானது முறையான பாதுகாப்பு இல்லை என்பது. மற்றும் நாம் அதைக் கண்கூடாகவும்கூட பார்க்கிறோம்.

இன்னும் துப்புரவுத் தொழிலாளர்கள் பாதாளச் சாக்கடைக்குள் அகால மரணமடைந்து போகிறார்கள். இவர்களுக்கென்று தொழில் உபகரணங்கள் இல்லை. கையுறை முறையாக இல்லை, நல்ல சோப்பு கிடையாது. அவர்களின் வாழிடம் பாதுகாப்பற்ற தன்மையிலே இருக்கிறது.

பெண்களைப் பொறுத்தவரையில் கடினமான வேலை, குறைந்த கூலி. இன்னொரு பரிதாபகரமான செய்தி, அவர்களுக்கு விடுப்பு கிடையாது. மாதவிடாய்க் காலங்களில்கூட அந்தத் தொழிலுக்கான உழைப்பிற்கேற்ற இளைப்பாறுதல்கூட கிடையாது. பெண்கள் மன உளைச்சலுக்கு ஆளாகக்கூடிய அளவிற்கு இந்தத் தொழிலில் பாதிக்கப்படுகிறார்கள். இதைக் கண்கூடாகவே நாம் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் வாழும் வாழிடங்களைப் பார்த்தோமேயானால் சாக்கடை ஓரங்களில் அவர்கள் வாழ்க்கை கழிந்துகொண்டிருக்கிறது. இதை நாம் அனைவரும் கண்டுகொள்ளவே இல்லை. நாம் அனைவரும் வெட்கப்படக்கூடிய ஒரு விசயமாக இதை நான் பார்க்கிறேன்.

எழுத்தை நீங்கள் தேர்வு செய்யக் காரணம்?ஏன் எழுதணும்?

எழுத்தை நான் திட்டமிட்டுத் தேர்வு செய்யவில்லை. அது காலம் எனக்குக் கொடுத்த வரமாக நினைக்கிறேன். காலம் என்னை எழுத்திற்காகவே படைத்துவிட்டது என இப்போது நினைத்துப் பார்க்கிறேன். ஒரு சாதாரணப் பெண் என்னென்ன கனவுகளோடும், கற்பனைகளோடும் வாழ்வாளோ அந்த எண்ணம்தான் எனக்கும் இருந்தது.

ஆனால் காலம் என்னைத் திருப்பிவிட்ட ஒரு பாதை இலக்கியம். அதைத் தூப்புக்காரி நாவலும், அதற்குக் கிடைத்த விருதும்தான் உறுதி செய்தன. நான் நிச்சயமாக எழுத வேண்டும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறேன். என்னுடைய படைப்பு சமூகத்தில் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட பெண்களுக்கு மத்தியில் ஒரு நிவாரணமாக இருக்கிறது.

தூப்புக்காரி, காட்டுக்குட்டி நாவல்களைப் படித்துவிட்டு நிறைய பெண்கள், நிறைய மக்கள், நிறைய வாசகர்கள் தங்களுடைய வலிக்கான ஒத்தடமாக இவற்றை எடுத்துக்கொண்டார்கள். எம்ஃபில் பட்ட ஆய்வுகளும், முனைவர் பட்ட ஆய்வுகளும் நடந்தன.

இன்னும் பாதிக்கப்பட்ட நிறைய பேர் வாசித்துவிட்டுப் பேசினர். ‘ஒரு வாழ்க்கையை முடித்துக்கொள்ளலாம் அல்லது தற்கொலை செய்துகொள்ளலாம்.. இனி இந்த வாழ்வு எதற்கு? என்ற முடிவுக்கு இருந்த தருணத்தில் உங்க படைப்புகள் எங்கள் கைக்கு வந்து சேர்ந்தன. அதற்குப் பின் வாழ்க்கையை நிச்சயமாக வாழ வேண்டுமென்ற நம்பிக்கையையும், தெம்பையும் கொடுத்து உள்ளது’ என நிறைய பேர் என்னிடம் வாசகர் கடிதங்களாகவும் கருத்துக்களை வைக்கும்போதெல்லாம் எனக்குத் தோன்றியது.. இன்னும் நான் நிறைய எழுதி இந்தச் சமூகத்திற்குக் கொடுக்கணும்.

அதை என் கடமையாக இந்தப் பிரபஞ்சம் தேர்வு செய்துள்ளது. ஆதலால் நான் எழுத்தை எழுதியே ஆகணும் என்ற முடிவுக்கு வந்தேன்.

எழுத்து என்பது, வாசிக்கும் வாசகன் தன்னுடைய மனவோட்டத்தையும் தன் வாழ்க்கையையும் புதுப்பித்துக்கொள்வதற்கும் தன்னை அதில் சாய்த்துக்கொள்வதற்கும் உதவி புரிவதை உணர்ந்துகொண்டதால் நிச்சயமாக எழுத்தை நான் இந்த உலகத்தில் தொடர வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

தூப்புக்காரி நாவலை வாசித்து அந்த வாசிப்பனுபவத்தை உங்களிடம் பகிர்ந்ததில் மறக்க முடியாத எழுத்தாளர் அல்லது வாசகர் பற்றிக் கூறுங்கள்?

தூப்புக்காரி நாவலை வாசித்துவிட்டு அந்த வாசிப்பனுபவத்தை என்னிடம் நிறைய பேர் பகிர்ந்துகொண்டார்கள். நாவலை வாசித்து நெகிழ்ந்துபோய் என்னைத் தேடியே வந்தார்கள். அவர்களை மறக்கவியலாது. அந்த நாவலுக்காக எனக்கு நூற்றுக்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்தன. என் வாழ்க்கையில் எழுத்தாளர் திரு. பொன்னீலன் அவர்களை மறக்க முடியாது. அதே போல நாவலுக்கு அணிந்துரை வழங்கிய எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி அவர்களையும் மறக்கமுடியாது. இந்த நாவல் எழுதி முடித்து அவர்கள் அணிந்துரை கொடுக்கும் தருணம் வரையிலும் எனக்கு இருவரும் அறிமுகம் கிடையாது.

எழுத்தாளர் பொன்னீலன் அவர்கள் எங்களது மாவட்டம் மணிக்கட்டி பொட்டலில் வாழ்கிறார். அவர் மாபெரும் எழுத்தாளர். சாகித்திய அகாதமி விருதுக்குச் சொந்தக்காரர். சிறந்த முற்போக்குவாதியாக இன்றுவரை வாழ்ந்துகொண்டிருப்பவர். அவரை இந்த நாவலுக்கான அணிந்துரை வாங்கச் சந்திக்கப் போகும்போது, மனதிற்குள் பயங்கரக் கலக்கம் இருந்தது. என்னுடைய படைப்பு எந்த அளவிற்கு அவரைக் கவரும்? எனக்கு எந்த மாதிரியான மதிப்புரை வழங்குவார்? எனப் பல குழப்பங்களோடு நானும் எனது நண்பரும் அவருடைய இல்லத்திற்குச் சென்றோம். எனது நாவலை வாங்கி வைத்து எடுத்த எடுப்பிலேயே 'சுந்தர ராமசாமியைத் தெரியுமா? ஜெயகாந்தனைத் தெரியுமா? நீ குறிப்பிட்டு வாசித்த எழுத்தாளர் யார்? உனக்குப் பிடித்த படைப்பு எது? இலக்கியப் புத்தகங்கள் என்னவெல்லாம் வாசித்திருக்கிறாய்? சங்க இலக்கியங்களில் உனக்கு என்ன தெரியும்?' இப்படி பல வினாக்களைக் கேட்கும்போது நான் ரொம்ப ஆடிப்போய்விட்டேன்.

மக்கள் சார்ந்த ஒரு உளவியல் எனக்கு அதிகமாக இருந்தது. மக்கள் வாசிப்பு, மக்களின் வாழ்க்கை, அவர்களின் துயரம், அதனோடு பயணித்த அனுபவத்தைத் தவிர எனக்கு அதி

பயங்கர இலக்கியங்களின் வாசிப்பு அதுவரை இல்லை. எனக்கு யாரையும் தெரியாது. நான் எந்த இலக்கியத்தையும் வாசித்ததில்லை என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டேன். அவர் எந்த வாசிப்போ அல்லது எந்த இலக்கிய முன்னனுபவமோ கிடையாது என்ற எண்ணத்தோடு தூப்புக்காரி நாவலின் தட்டச்சுப் பிரதியை வாங்கினார். 'எனக்கு நிறைய வேலை உள்ளது. மூன்று மாதம் கழித்துத்தான் எழுத இயலும்' என்றார். சரி என்று சொல்லிவிட்டு நாங்களும் கிளம்பிவிட்டோம். "முதற்சங்கம்" எனும் வார இதழில் நாகர்கோவிலில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஒரு வாரம்கூட சென்றிருக்காது. மதிய நேரத்தில் எனது அலுவலகத்திற்குப் பஸ் ஸ்டாண்டிலிருந்து கொஞ்ச தூரம் நடந்து அலுவலக மாடிப்படி வழியாக வந்து, என்னைப் பார்த்து "நீ எழும்பு" என்று சொன்னார். எழும்பு என்ற வார்த்தையைக் கேட்டவுடன் மனதிற்குள் பயம் வந்துவிட்டது. என்ன எழுதியிருக்கே எனத் திட்டுவாரோ என்ற பயத்தில் மனது அடித்துக்கொண்டது. நான் எழும்பியதும் 'கையைக் கொடு' என்றார். ஒரு நெருடலாகவும், பயத்துடனும் கையைக் கொடுத்தேன். எனது கையைப் பிடித்துக்கொண்டு கண் கலங்கினார். கண் கலங்கிய விழிகளோடு என்னைப் பார்த்து "இலக்கிய உலகில் எனக்கு மகள் பிறந்திருக்கிறாள்" என்றார்.

"உண்மையிலேயே உன்னுடைய நாவல் என்னைப் புரட்டிப் போட்டுவிட்டது. நான் தூங்கவே இல்லை. நீ மிகப்பெரிய எழுத்தாளராக வரக்கூடிய அத்தனை சாராம்சங்களும் அந்தப் படைப்பில் உள்ளன. நான் உன்னை நினைத்து ரொம்பப் பெருமைப்படுகிறேன்" என்றார்.

கண் கலங்கி நின்று என்னை இலக்கிய மகளாக ஏற்றுக்கொண்ட தருணம் என் வாழ்வில் மறக்கவே முடியாத தருணம். அவ்வளவு பெரிய எழுத்து ஜாம்பவான் என் எழுத்தைப் படித்துவிட்டுக் கண்கலங்கி என்னை ஆசீர்வதித்த தருணம் எனக்கு மறக்கவே முடியாது. என் வாழ்வின் ஆகப் பெரும் கொடுப்பினை.

அதே மாதிரி எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி அவர்களும் 'நாவல் வாசிக்கும்போது நான் மலையளவு இருந்தேன். நாவலைப் படித்து முடித்தபோது நாவல் மலையளவு இருந்தது. நான் சிறியதாகிப்போனேன்' என்று அணிந்துரையில் எனக்காக ஒரு வரி கொடுத்திருப்பார். அதுவும் என் நாவலுக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன்.

திருநெல்வேலியிலிருந்து எழுத்தாளர் நாறும்பூநாதன், எங்கள் ஊரைச் சார்ந்த நிறைய எழுத்தாளர்கள், நிறைய வாசகர்கள், குறிப்பாக பாதிக்கப்பட்ட நிறைய மன உளைச்சல்களோடு வாழ்ந்த வாசகர்கள் என அவர்கள் எல்லோருமே

எனக்கு உறவுமுறையாகிப் போனார்கள்.

சொந்த வாழ்க்கையில் அப்பா என்ற இடம் வெற்றிடமாகவே கழிந்துபோனது. ஆனால் தூப்புக்காரி நாவலுக்குப் பின் நிறைய இலக்கியத் தந்தைகள், சகோதரர்கள், அம்மாக்கள், தோழிகள் எனப் பெரிய தமிழ் இலக்கியச் சமூகத்தை இந்த நாவல் மூலமாக நான் பெற்றுக் கொண்டேன். இதனை நெகிழ்ச்சியாகவும், பெரும்பேறாகவும், வரமாகவும் நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

இலக்கிய உலகில் உங்களுக்குக் கிடைத்த வரவேற்பு - விமர்சனங்கள் எவ்வாறு உள்ளன?

உண்மையாகவே வாசகர்கள் மத்தியிலும், திறன்பட்ட எழுத்தாளர்கள் மத்தியிலும் சிறப்பான வரவேற்பு இருந்தது. அதை மறக்கவே முடியாது. அதே போன்று எதிர்ப்பும் வந்திருக்கிறது. இலக்கியம் எழுத இவளுக்கு என்ன தெரியும்? முறையான வாசிப்பு அவளுக்கு இருக்கிறதா? முறையான பயிற்சி இல்லாமல் இலக்கியம் எழுத முடியாது. என் காதுபடவே மேம்பட்ட சில படைப்பாளிகளே விமர்சித்தது உண்டு. ஆனால் நான் அதைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. எனக்குத் தெரிந்ததை நான் வாழ்ந்த வாழ்வை எனக்குத் தெரிந்த சமூகத்தை அவர்கள் எங்கெல்லாம் ஒடுக்கப்பட்டு இருக்கிறார்களோ அந்த வலியிலிருந்து வலியோடு எழுதுகிறேன். எனக்குத் தூப்புக்காரி ஒரு அடையாளமாகக் கிடைத்த பிறகு வாசிப்பும் தேடல்களும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. எழுத்தாளர்கள் நாஞ்சில் நாடன், பொன்னீலன் எனக்குப் பெரும் நம்பிக்கை தருகிறார்கள். எழுத்துத் தோழமைகள் என்னுடன் பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள் மற்றும் ஒத்துழைப்பும் தந்துகொண்டிருக்கிறார்கள். புறந்தள்ளலையும் இவளுக்கு எதுவும் தெரியாது என்பதையும் நன்றியோடு உள்வாங்கிக்கொள்கிறேன். அவர்கள் பார்வையில் அப்படி இருந்தால் அது அவர்களுடைய பிரச்சினை. அது பற்றி நான் எதுவும் சொல்லவரவில்லை. ஆனால் மலர்வதி என்கிற படைப்பாளி எப்போதுமே அடித்தட்டு மக்களின் குரலாக தன் எழுத்தைக் கொடுத்துக்கொண்டே இருப்பார் என்ற நல்ல வரவேற்பு என்னுடைய எளிய வாசகர்களின் மத்தியில் கிடைத்துக்கொண்டே இருக்கிறது.

நவீன இலக்கியத்தில் படைப்பாளர்களுக்குப் போதிய கவனம் இருக்கிறதா?

நவீன இலக்கியத்தில் படைப்பாளர்களுக்குப் போதிய கவனம் இருக்கிறது. நவீனப் படைப்புகள் மக்களைச் சென்றடைகின்றன. பழைமை எனும் வேரில் இருந்து புதுமையைச் சொல்லியாக வேண்டும். சில எழுத்தாளர்களை நேர்காணல் செய்யும்போது, அவர்களிடம் பேசும்போது தெரிகிறது.. சிறுவர் காலம், இளமைக்காலத்தில்தான் அவர்களின் ஆணி வேர் இன்னும் இருக்கிறது. அந்த வேரில்தான் மொழியியல் இருக்கிறது. வாழ்க்கை, மொழி, அன்பு, மண்சார்ந்த விளையாட்டு, குடும்பமே ஒற்றுமையாக வாழ்ந்த உறவு என்று அந்த வேரிலிருந்துதான் இன்றைய நவீனத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லாப் பழைமையும் பொய்யென்று சொல்ல முடியாது. அந்தப் பழைமையிலிருந்து காலம்காலமாகக் கட்டமைக்கப்பட்ட சில மூடப்பழக்கங்களைச் சில முட்டாள்தனங்களை நவீனத்தோடு எழுதுகிறார்கள். நவீனமாக்கப்பட்ட பல விசயங்கள் வந்துவிட்டன. குறிப்பாக ஒரு காலத்தில் பெண்கள் வாழ்க்கையில் கல்வி எட்டாத விசயமாக இருந்தது. பெண்கள் வேலைக்குப் போவது நினைத்துப் பார்க்க முடியாத விசயமாக இருந்தது. ஆனால் இன்று பெண் கல்வி தாராளமாகவும், பெண்கள் வேலை பார்க்கிற விசயங்களில் ஆணுக்கு ஒரு படி மேலும் போய்விட்டார்கள். சரிநிகருக்குத் தாண்டிப் போய்விட்டார்கள். அதை நான் நவீனமாகப் பார்க்கிறேன். அதை ஒரு முன்னேற்றமாகப் பார்க்கிறேன்.

ஆனால் அந்த முன்னேற்றத்தில் இருக்கக்கூடிய சிக்கல்களை நவீனத்தோடு எழுதக்கூடிய தன்மை எழுத்தாளர்களிடம் இருக்கிறது. ஒரு ஆணின் அதாவது, கணவன், அப்பா, சகோதரன் சம்பாத்தியத்தில் பெண்

வாழவேண்டும் என்று கட்டமைக்கப்பட்ட பழைய சம்பிரதாயத்தைப் பெண் தன் கல்வியாலும் திறமையாலும் அடித்து நொறுக்கி முன்னேற்றத்திற்கு வந்துவிட்டார்கள்.

ஒரு காலத்தில் வேலை பார்க்கும் பெண்ணைத் திருமணம் செய்வதைத் தரக் குறைவாகப் பார்த்தார்கள். இன்றைக்கு நவீனமாக்கப்பட்ட உலகத்தில் வேலை செய்யும் பெண்களை விரும்பித் திருமணம் செய்யும் ஆண்கள் வேகமாக வளர்ந்து கொண்டேயிருக்கிறார்கள். இதைச் சமத்துவமான மனநிலையோடு நிறைய பெண்களால் பார்க்க முடியவில்லை. பெண்களின் வருமானத்தையே நம்பி ஒரு குடும்பம் இருக்கிறது. பெண்ணின் உழைப்பு சுரண்டப்படுகிறது. வேலை பார்க்கிற ஒரு பெண்ணைத் தேடுகிறான் என்றால் பயப்படும் நிலைக்கு இன்றைய பெண்கள் வந்துவிட்டார்கள். வளர்ச்சி, பலன் இருக்கிறது என்று பார்த்தாலும் ஒருபுறம் திணிக்கப்படுகிறது. இதைக் கவனமாகப் பார்த்து நவீனத்தன்மையோடு எழுதக்கூடிய நவீன எழுத்துக்கள் வந்து கொண்டேதான் இருக்கின்றன. அதில் கவனம் பெறக்கூடிய எழுத்துக்கள் இன்றும் போராடிக்கொண்டிருக்கின்றன.

உங்களின் அடுத்த படைப்பாக எதைப் பற்றி எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்?

தூப்புக்காரி நாவலுக்குப் பிறகு காட்டுக்குட்டி என்ற நாவல் எழுதினேன். அதுவும் பெண்களை மையப்படுத்தி எழுதப்பட்ட நாவல். பெண் எப்படி பாலியல் தொழிலாளியாக மாறுகிறாள். அவளை மாற்றியது யார்? ஒரு பெண் தனது உடலையே சமர்ப்பணம் செய்வதற்குத் தகுதியான ஆண் என்பதை எதை வைத்துக் கண்டுபிடிப்பாள் என்றால், அன்பும் நம்பிக்கையும் பாதுகாப்பும் கொடுப்பவனிடத்தில் அவள் தன்னை முழுமையாக ஒப்படைக்கிறாள். ஒரு பாலியல் தொழிலாளி தன்னுடைய உடலை உடல் பசியாக இருப்பவர்களுக்குக் கொடுக்கும்போது அவள் எந்த நிலையில் பகிர முடியும். ஒரு மனநிலையைப் பெறுவதற்கு அவளுக்கு எந்தெந்தச் சூழல் பின்புலமாக இருந்தது?

ஒரு பெண்ணைப் பாலியல் தொழிலாளியாக உருவாக்கிவிட்டு, அந்தப் பெண்ணைத் தாசியென்றும், குற்றவாளியென்றும் கண்டறியக்கூடிய சமூகம் அவளை அந்த நிலைக்குத் தள்ளியவர்கள் பற்றிப் பேசுவதே இல்லை. அந்தப் பெண் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள், அவள் சந்திக்கக்கூடிய அவமானங்கள், அவள் எப்படி பாலியல் தொழிலாளி ஆகிறாள் என்பது பற்றிக் காட்டுக்குட்டி என்ற நாவல் எழுதினேன். அதைக் கிழக்குப் பதிப்பகம் வெளியீடு செய்திருக்கிறது.

அதைத் தொடர்ந்து கடந்த ஐந்து ஆண்டுகளாக அதுவும் கொரோனோ காலத்திற்குப் பின் பணிபுரியும் வாய்ப்பை இழந்தேன். குமுதம் நீராநதி இதழில் இலக்கியப் பிரமுகர்களைச் சந்தித்து அவர்களை நேர்காணல் செய்தேன். சூழல் சார்ந்த கட்டுரைகள் எழுதினேன். அதை “முதல் காட்சிகள்” என்ற தலைப்பில் நெய்தல் வெளியீடு செய்திருக்கிறது.

மண், மொழி, எழுத்து உள்ளடக்கிய சிறுகதைகள் எழுதினேன். சிறுகதைகளைத் தொகுத்து “கருப்பட்டி” என்ற பெயரில் காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. தனிமையில் வாழக்கூடிய பெண்களை இந்தச் சமூகம் என்ன மாதிரி பார்க்கிறது என்பதை மையப்படுத்தி எழுதி முடித்திருக்கிறேன். அதைக் காலச்சுவடு வெளியீடு செய்ய இருக்கிறது.

அதைத் தொடர்ந்து இந்தக் கொரோனோ காலத்தில் மதுக்கடை அடைப்பு பற்றியும், அது திறக்கப்படும்போது உள்ள பெண்களின் நிலையைப் பற்றியும் நாற்பது நாட்களில் எழுதிய குறுநாவல் யாவரும் பதிப்பகம் நடத்திய குறுநாவல் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. அந்த நாவலுக்குப் புதுமைப்பித்தன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ராசாத்தி என்ற குறுநாவல் எழுதி முடித்து வைத்துள்ளேன்.

இப்படியாக எழுத்துப் பயணம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ■

கவி : ஆழி. சத்தியன்

அல்லிக்குளமென
பெயரிடப்பட்ட பிறகு
தாமரைக்குளமெனப் பெயரில்லையேவென வருத்தமிருக்கும்
சற்றே பெரிய குட்டைக்கு

ஆலமரத்தின் விழுதுகள் நீரில் நீந்திப்பழக
மண்புழுவென ஏமாந்த மீன்களின் சாபம் பல்லாயிரமுண்டு.

நீர்ப்பாம்புகளின் தாகம்
தவளைக்கான காத்திருப்பில்..

வெங்காயத் தாமரையில் கொக்கு அமர்ந்ததில் சொக்கிப்போன
தூண்டில் சிறுவன் மீன்கொத்தியிடம் தோற்றதும் விதிதான்.

அல்லித்தண்டு மாலைகளைப் போர்த்திக்கொண்ட யுவதிகள்
கனவில் சிக்கிக்கொண்டனர்.

பெண்கள் படித்துறை மட்டும் கோடை வறட்சியை நினைத்து
பாசிகளை இருத்திக்கொள்ளத் தயாரானது.

● ஆதிரன்

மனநிலைக் குறிப்புகள்-13

தத்துவ மனநிலை

வழக்காறுகள் (*rhetoric*) என்பன உலக மொழிகளின் தாய் வடிவம் என்பது எனது புரிதல். தத்துவங்களைப் பகடி செய்யும் வெகுமக்களின் அனுபவக் குரல் அவை. உலக வரலாற்றில் வேறு எங்கு விடவும் தமிழனின் 'மூலம்' என்பது பொருள் சார்ந்தது. வாழ்க்கை என்பது தமிழரைப் பொருத்தவரை நிலம் அன்றி வேறில்லை. நிலம் இருக்கிறது.. அதனால் மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற அழுத்தமான பார்வை. நிலமும் நீத்தாரும் தவிர அவர்களுக்கு வேறு தெய்வமில்லை. தெய்வம் அவனது மனம். அகம் அதுவே. நீத்தாரும் நிலமும் அவர்களது தொன்மம். மனித உருவாக்கத்தில் தெளிந்த சிந்தனை.

இன்றைய தமிழரின் மூளை குறைந்தது இருபது லட்சம் வருட வயதைக் கொண்டுள்ளது. மத்திய மற்றும் தெற்காசிய நிலங்களில் இருபதாயிரம் வருடங்களுக்கு முன்னதாக அவை தாவரங்களின் விதைகளைப் பற்றிய அறிவை உருவாக்கியது. இந்தியத் துணைக்கண்டத்தின் பூர்வ பெயர் நாவலந் தீவம் என்ற ஒரு வழக்கு இருக்கிறது. எனக்கு அது மிக உவப்பாய் இருக்கிறது. ஒரு மரத்தின் பெயரில் ஒரு மாபெரும் நிலம். இந்த நிலத்திற்குப் புதிதாய் வந்தவர்கள் கடவுளைக் கொண்டு வந்தார்கள். தமிழ் சிரித்தது. நான்கு நிலத் தெய்யங்கள் கெக்கலித்தன. இயக்கி எனும் பழம்பெரும் தெய்யம் உக்கிரமானாள். தமிழியோ மென்மையின் குழந்தை. அநிச்சம். விருந்தினருக்காக உயிரை மாய்க்கும் தாய்க் கொடி. தமிழ் ஒரு பூஞ்சை.

மேற்கு பூஞ்சைகளை ஒட்டுண்ணிகள் என்று வகைப்படுத்தும். ஆனால் இந்தப் பூமிப்பந்தின் உயிரியக்கம் பூஞ்சைகளால் செயல்படுகிறது. நிலமும் கடலும் – இரண்டிலும் - பூஞ்சையே உயிர் சக்தி. இவ்வுலகின் பெரும் உயிரி பூஞ்சை என்று மேற்கு கண்டுபிடித்தபோது தமிழின் பெருந்தனிமை புலப்பட்டது. ஆசியாவும் ஆஃப்ரிக்காவும் ஒற்றைப் பெருநிலம் என்பதை இப்போதெல்லாம் யாரும் சொல்வதில்லை. அதுபோலவே இந்த நிலத்தின் ஆதித் தத்துவம் லோகாயதம் என்பதையும் யாரும் சொல்வதில்லை. இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து அழிக்கப்பட்டுவரும் ஒரு தத்துவம்

தனது வேர்களைத் தமிழ் எனும் பூஞ்சையில் நுழைத்திருக்கிறது. ஐம்பூதங்களின் இருப்பு அது. பூமி அழியும் வரை அதைப் பாதுகாக்கும் உயிரமுதம் இந்தப் பூஞ்சைகள். இனி உணவாகவும் தன்னை மாற்றிக்கொள்ளும் இந்தப் பூஞ்சைகள் பூமியின் தாய்த் தெய்வங்கள்.. சுருங்கச் சொன்னால் தமிழ் ஒரு பனைமரம் அல்லது பெருமுலைத் திருக்குமரியான இயக்கி தெய்யம்.

தமிழரைப் பொருத்தவரை நிலமும் நீத்தாரும் அனைத்துக் குலமும் ஆணும் என எல்லாம் பெண்களே. தென்னையும் பனையும் தேறல் முலைகள். தமிழனின் மும்முலைத் தத்துவம் இவ்வாறே உருவாகின. தமிழும் பூஞ்சையும் தந்துகிகள். உறிஞ்சிக்கொள்ளும். அனைத்தையும். பழங்கதையைப் பேசும் தொன்மக் கிழவிகள் இனி இல்லை. குழந்தைகளைத் திரைப்பாடல் பாடித் தூங்கச்சொல்லும் மழுங்கிய மூளைப் பெண்களை உருவாக்க நாம் சம்மதித்தோம். எனது மகளுக்குக் கதையும் நாட்டுப்புறப் பாடல்களும் தெரியாது. எனது பேத்திக்குக் குழந்தைப் பேறு என்பது வெறும் அறிவியல் சிக்கல். அவர்கள் மேற்கின் பூஞ்சைகள். வெறும் ஒட்டுண்ணிகள். எனது ஆண்களின் விதைகளோ ஹைப்ரிடுகள். பதின்மூன்றாம் நூற்றாண்டின் ராஜேந்திர சோழன் இனி வெறும் தொன்மம்.

நான் சொல்ல வந்த தத்துவம் லோகாயதம். உலகின் மிக மூத்த கடவுள் மறுப்பு இயக்கம். சார்வாகம் என்றும் விளிக்கப்பட்டது. தமிழர்களால் புனையப்பட்ட இயக்கன் இயக்கியர் பூசனை தொல்மரபில் சார்வாகம் ஒரு பயிற்று முறை என்பதே எனது புரிதல். உலகாயதம் என்பதற்கு மக்களிடையே இருக்கும் தத்துவம் என்றே பொருள். தொன்றுதொட்டு மதவாதிகள் இந்தச் சிந்தனை மரபை அழித்துவந்திருக்கிறார்கள். உலகாயதம் தொடர்பான சிறு நூல் கூட நமக்குக் கிடைக்கவில்லை. இதன் தத்துவத்தை இதை அழிப்பதற்காக உருவாக்கப்பட்ட மற்ற மதநூல்களிடமிருந்தே அறிந்துகொள்ள முடிகிறது. மிகச் சுருக்கமாக உலகாயதம் தத்துவம் என்பது, 'உயிர் வேறு உடல் வேறு என்பதற்கு இடமில்லை. வியாபக நிலை, நித்திய நிலை மற்றும் அறிவு நிலை ஆகியவற்றை உள்ளடக்கிய ஆன்மாவெனும் நிலை மறுக்கப்படும். மனித ஆளுமை என்பது காலத்திற்கு உட்பட்டதே. பூதங்களே நிலையானவை. ஆதலால் அவை படைக்கப்பட்டதில்லை. எனவே இறைவன் என்ற ஒருவன் உண்டென்று கொள்ளவேண்டிய அவசியமில்லை. உலகாயதம் காட்சியை (பிரதியட்சை) பிரதானமாகக் கொள்கிறது. காட்சியும் அதனால் உண்டான அனுபவமும் மட்டுமே உண்மை என்றும் வேறெந்தக் கருத்துக்களும் பிரதானமற்றது எனவும் போதிக்கிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அருள்நந்தி தேவனால் இயற்றப்பட்ட 'சிவஞானசித்தியார்' என்ற நூலில் லோகாயதக் கொள்கைகளை மறுப்பதற்காக அதன் கொள்கைகளை விளக்கியுள்ளார். நீலகேசியும் இது தொடர்பாக விரிவாகப் பேசுகிறது. சாத்தனாரின் மணிமேகலையும் சற்று விவரிப்பதாகத் தெரிகிறது. உலகாயதம் பற்றிய மிகவிரிவான ஆய்வு நூல் ஒன்றைத் தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா உலகாயதம் என்ற தலைப்பிலேயே எழுதியுள்ளார். இதன் தமிழ்ப் பதிப்பு கிடைக்கிறது. உடலை முன்நிறுத்தி உருவாக்கப்பட்ட இந்தத் தத்துவம் சடவாதம், சாருவாகம் எனப் பல பெயர்களால் விளிக்கப்பட்டது. உபநிடதக் காலம் தொட்டு சமகால ஜெயமோகன் வரையிலும் இந்த வெகு மக்கள் சிந்தனை அழிக்கப்பட்டு வருகிறது.

சாற்றுபெயர் ஆனவை தலம் கனல் புனல்பின்

காற்றும் எனலாம் இவை கலந்தகுணம் ஓதின்

நாற்றம் இரதம் உருவ நற்பரிசம் ஆகும்

போற்றும் இவை நித்த இயல்பாம் இவை புணர்ப்பே *(சிவஞானசித்தியார் - 3)*

மண், நீர், தீ மற்றும் காற்று ஆகியவற்றின் கலப்பே மணம், நீர்மம் (குருதி), வடிவம் மற்றும் தொடு உணர்வு ஆகியற்றை உருவாக்குகிறது. இதுதான் லோகாயத அடிப்படை. இதை மறுக்கவே மிக நெடுங்காலமாகச் சமயவாதிகள் போராடிவருகிறார்கள்.

ஓவிய மனநிலை

மைக்கேல் ஏஞ்சலோ வெறும் சிற்பி மட்டுமல்ல என்பது நாம் அறிந்ததே. டாவின்சியைப் போலவே நுணுக்கத்திற்கும் துல்லியத்திற்கும் பெயர் பெற்றவர். தனது வாழ்நாளிலேயே இரண்டு சுயசரிதை எழுதப்பெற்றவர். தனது உடல் அமைப்பில் அதிருப்தி கொண்டவர். நீண்ட *sonnet*களை எழுதிக் குவித்த கவிஞர். தீவிர கத்தோலியரான ஏஞ்சலோ தனது இளம் நண்பன் *Tommaso dei Cavalieri* யின் மீதான அன்பில் இயற்றிய கவிதைகள் உலகப் புகழ் பெற்றவை. இங்கு பகிர்ந்திருக்கும் மூன்று மார்பிள் சிற்பங்களுக்கும் இரவு *(night)*, அந்தி *(dusk)*, விடியல் *(dawn)* எனப் பெயர் வைத்துள்ளார். எந்தச் சிற்பம் எதற்கானவை என்பதை உங்கள் யூகத்திற்கே விட்டுவிடுகிறேன்.



• •

இலக்கிய மனநிலை

ஃப்ரான்சிஸ் இறந்துபோய்விட்டான். அது அவனுக்கு நல்லது. ஆனால் உயிருடன் இருப்பவர்களுக்கு நல்லதல்ல. மாதம் ஒருமுறை எதாவது ஒரு எண்ணிலிருந்து அழைப்பு வரும் எனக்கு அவனிடமிருந்து. ‘எங்க இருகீங்க மகி… நான் மதுரையில ஃப்ரான்சிஸ்…’ சில நிமிடப் பேச்சு. பின்பு மீண்டும் ‘எங்க இருக்கீங்க மகி… நான் மதுரையில இருக்கேன் ஃப்ரான்ஸி…’ மறுபடியும் சில நிமிடங்கள் பேச்சு… சங்கிலிருந்து கடல் நீர் பிரியும் குரலில் பேசுவான். ஆழத்திலிருந்து வெளியேறி எனது காதுகளைக் கவ்வ எத்தனிக்கும் ஆவல். பேசி வைப்பதற்குள் ஆறேழு முறை எங்கிருக்கிறீங்க மகி என்று கேட்பான். ‘எம்பா இப்படி திரும்பத் திரும்பக் கேட்டு உசிர வாங்குற’ என்பேன். சிரிப்பான். எனக்குத் தெரியும் எங்க நீ இருக்கிற என்ற கேள்விக்கு ஏன் நீ இங்க இல்ல என்ற அர்த்தம். பதற்றத்தில் ‘சரி நான் வெக்கிறேன். வேல கெடக்கு’ என்பேன். ‘இனி இந்த நம்பர்தான் பதிஞ்சு வெச்சுக்கோ… நட்சத்திரப் பிச்சைக்காரன்னு போட்டுக்கோ…’ என்றான். சிரித்தான். மூன்று மாதங்களுக்கு முன், நண்பர் பின்னியையும் அவனையும் சேர்த்து மதுரை மாட்டுத்தாவணியில் பார்த்தபோது கைகுலுக்கிக் கொண்டோம். அழுத்தமும் உறுதியும் மிக்க கைகள். துயரமிக்க மூளையை ஆறவிட்டு நீள்துயில் கொண்டான். கனவுகளில் மீண்டெழுகிறான். எங்க இருகீங்க மகி… இங்கதாம் ஃப்ரான்ஸி.

••

விரித்த என் பாயில்

மீதமிருந்த இடத்தில்

படுத்து ஒடுங்குகிறது குளிர்காலம்.

பூக்கள்

ஒரு புன்னகையின்

தொடக்கமா முடிவா

என்றுதான் நான் கேட்டேன்.

அது என்னைக் கட்டியிறுக்கி

காலோடு கால் பின்னிக் கொண்டது.

அடுப்பில் விறகு அணைந்திருக்கிறது

எழுப்பிவிடட்டுமா என்று கேட்டேன்.

கைகளையும் பின்னிக்கொண்டது.

இரவு தீர என்னோடு

உறங்கிக் கிடந்தது.

சூரியசாட்டையிலிருந்து

மஞ்சள் ரத்தம் பரவியபோது

ஒரு முத்தத்தை உடைக்கமுடியாமல்

இரண்டு உதடுகள் திணறின

காட்டுக்கு வெளியே.

..

பறவையொன்றிடம் நான் இன்று

பந்தயம் கட்டி தோற்ற வானத்துக்கு

வரவில்லை நிலவு.

நூல் பிறையளவு கொடையுமில்லை.

எட்டிக் கூடப் பார்க்கவில்லை

யாதொரு நட்சத்திரமும்.

இப்படிப் பாழடைந்த வானம்

பார்த்ததேயில்லை இதற்கு முன்.

அவமானம் மிகுந்த இரவு

இதுவே கடைசியாக இருக்கட்டும்.

சூதாடக்கூடாது இனி

வானத்தைப் பூமியில் வைத்து.

..

ஆளற்ற கூடம்.

அங்கே அந்த மர நாற்காலி அமர்ந்திருந்தது.

அதன் மேல்

வயலினைச் சாய்த்து வைத்துவிட்டு

வெளியேறியிருக்கிறான் இசைத்
தொழிலாளி.

‘என்னிலும் நாலு தந்திகள் முறுக்கி

செல்லமாகத் தோளில் ஏந்தி வைத்து

ரம்பத்தால் வருடினால் என்ன’

என்பதுபோல் யாரையோ

பார்க்கிறது மர நாற்காலி.

எதிரே திறந்திருக்கிறது

இசைக் குறிப்பு புத்தகம்.

• •

பொதுவான மனநிலை

மனித விருப்பங்கள் தன்னிச்சையானது அல்ல. அது ஊடகத் துறையினால் கட்டுப்படுத்தப்படுகிறது. நான் கடந்த இரண்டு வருடங்களில் எனது வேலைப் பளுவையும் தாண்டி OTT (*Over-the-Top platforms*) தளங்களில் பார்த்த வெப் சீரீஸ் இருபதைத் தொடும். உலகமெங்கும் ஓடிடி தளங்களுக்கு அடிமை ஆகும் பழக்கம் கடந்த பெருந்தொற்றுக் காலத்தில் பல மடங்கு அதிகரித்துள்ளது. கண்ணுக்குத் தெரியாத ஒரு பிரம்மாண்டமான பின்புலப் பணி (*background work*) இதில் தொடர்ந்து இயங்கிவருகிறது.

எனது ஓய்வு நேரங்களை இத்தளங்கள் நூறு சதவீதம் கைப்பற்றிக்கொண்டன. ஒருமுறை தொடர்ந்து 15 மணி நேரங்கள் ஒரு சீரியலைப் பார்த்து முடித்தேன். எனக்கு அலுக்கவில்லை. சோர்வும் தூக்கமும் இருந்தது. ஆனால் அதையும் மீறி நான் பார்த்துக்கொண்டிருந்தேன். என்னால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. உண்மையில் இந்தச் சுகிப்பு மகிழ்வை *(feelings of pleasure)* எது ஒருவனுக்குள் ஏற்படுத்துகிறது. அதைத்தான் நான் சொன்ன அந்தப் பின்புலப் பணியில் ஈடுபடும் கார்பரேட் ஆராய்ச்சியாளர்கள் செய்கிறார்கள். அவர்கள் உலகெங்கும் உள்ள மனிதர்களை எடை போடுகிறார்கள். மிக நேரடியாக ஒவ்வொரு தனிமனிதனையும் கணக்கில் கொள்கிறார்கள். தொழில்நுட்பம் மிகச்சரியாக மக்களின் உணர்வுகளைப் பதிவு செய்கிறது. உலகில் எந்த மூலையிலும் இருக்கும் தனிப்பட்ட மனிதனுக்கு அவனுக்குத் தேவையான நேரத்தில் தேவையான விசயங்களைத் தருவதாகத் தனிப்பட்ட விளம்பர ஆலோசனை அனுப்புகிறார்கள். அவர்கள் மிக நேர்த்தியாக மனித மூளையில் மகிழ்ச்சியை உருவாக்கும் டோப்பமின் *(Dopamine)* என்ற சுரப்பியைச் சுரக்க வைக்க சிறந்த உணர்வுகளை நிதானமாகப் பின்னித் தளங்களில் ஓடவிடுகிறார்கள். கழிசடையான மனித வாழ்வின் அழுத்தங்களிலிருந்து தற்காலிகமாகத் தப்பித்துக்கொள்ள மக்கள் இந்த டிஜிட்டல் சினிமாக்களின் மீது கவனம் திருப்புகிறார்கள். அந்தக் கவனத்தைக் கார்பரேட்டுகள் பில்லியன் கணக்கான லாபமாக மாற்றுகிறார்கள். எப்பொழுதும் போலப் பணக்காரன் மிகப்பெரும் பணக்காரனாகவும் ஏழைகள் இன்னும் ஏழைகளாகவும் மாறுகிறார்கள். தகவல் *(data)* என்பதுதான் இன்றைய உலகில் சொத்து. நிலப் பிரபுத்துவக் *(feudal system)* காலத்தில் நிலம் வைத்திருந்தவன் அதிகாரம் படைத்த பணக்காரன். நிலப்பிரபுத்துவத்தை அழிக்க வந்ததாகச் சொல்லப்பட்ட முதலாளியம் பெரும் தொழிற்சாலைகளை உருவாக்கியது. மெள்ள மெள்ளக் கார்பரேட்டுகள் உருவாகின. நிலமும் பெரும் இயந்திரங்களும் கொண்ட மதிப்பை இன்று தகவல் என்கிற ஒரு அபௌதீகம் பெற்றுள்ளது. தகவல்கள் மக்களிடையே இருக்கிறது. அந்தத் தகவல்களை மாட்டிடம் பால் கறப்பது போலக் கறக்கிறார்கள். அதற்காகப் பிளாஸ்டிக் புறக்களைத் திரைகளில் காட்டிக்கொண்டே இருக்கிறார்கள். விடுங்கள். நான் சீரிஸ் பார்த்த அனுபவம் எனக்கு நல்லதாகவே இருக்கிறது. கடந்த இரண்டு வருடங்களில் நிறைய வெப்சீரீஸ் பார்த்தேன். பார்த்தவைகளில் எனது பரிந்துரைகள். அனைத்தும் நெட்ஃப்ளிக்ஸ்ஸில் உள்ளன.

க்ரைம் திரில்லர் : *Black spot, Green frontier, Border town;* அறிவியல் புனைவு : *sense 8, Altered carbon;* இராணுவம் அதிரடி : *wolf, shooter, body guard;* அரசியல் : *designated survivors, sacred games;* சூனியக் கதை : *The Witcher, Van Helsing;* போதை மற்றும் கேங்ஸ்டர் : *Hache;* பேய்க்கதை : *Black (Chinese);* இந்தியத் திரைப்படம் : *Love and Sukla;* வயதுவந்தோருக்கான திரைப்படம் : *white girl;* எப்பொழுதும் பிடித்தது : *'the method' (Russian).*

● கவிஜி

வன்மம் பெருகிய வாழ்வு

திரைப்படம் : Unbroken

உடைந்து நொறுங்கிடாத ஒன்றில் மனம் இருந்தால் மரணம் ஒன்றுமில்லை.

அவமானத்தின் உச்சியிலும் சிலுவை தூக்கிய சித்திரம்தான் வரலாறு. அப்படித்தான் எலும்பும் தோலுமாய் எல்லாம் இழந்த 'லூயிஸ்' அந்த ஆளுயர தடித்த கட்டையைத் தூக்கிக்கொண்டு நிற்பதும். இறக்கினாலோ கீழே போட்டுவிட்டாலோ... சுட்டுவிடுவான் ஜப்பான் அழகன். ஒரு குயுக்தனிடம் தோற்றுப்போவதைப் போலக் கேவலமான சாவு வேறென்ன இருக்க முடியும்.

'நான் நத்திங்... ஒன்னுமே இல்லை' என்று சிறுவயதில் சொல்லும் லூயிஸ் ஒருமுறை கண் முன்னே வந்துபோகிறான்.

"உன்னால் முடியும்... ஓடு..." என்று விரட்டும் லூயிஸின் அண்ணனும் வந்துபோகிறான். இப்படி ஒரு அண்ணன் இருந்தால் இப்படி ஒரு தம்பி ஜெயிப்பான்.

இந்த உலகம் ஒதுக்கி வைத்த பிள்ளைதான் ஒலிம்பிக்கில் தன் பலம் கொண்ட மனதால் ஓடி ஓடி... நத்திங் என்று ஒன்று இல்லை என நிரூபித்தது.

இரண்டாம் உலகப் போரில் நிஜமாக நடந்த சம்பவத்தைத் தழுவி எடுக்கப்பட்ட படம் இது. மனிதக் கண்டுபிடிப்புகளில் லாஜிக்கே இல்லாமல் நிகழ்ந்ததுதான் இந்தப் போர் என்பது. வேட்டைச் சமூகத்தின் மிச்ச மூர்க்கத்தனம்தான் உலகப் போர்கள். பேசினால் தீர்ந்துவிடும் அளவுக்குத்தான் இங்கே வாழ்க்கை இருக்கிறது. அதற்குள் எதற்கு அத்தனை ஆயுதம். எதற்கு அத்தனை வன்மம். அதுவும் போர்க் கைதியாக அந்நிய நாட்டில் சிக்கிக்கொள்ளும் அவலம்.. மரணத்தைக் காட்டிலும் மோசமானது.

பொண்டாட்டி செஞ்ச தோசை சரி இல்லை என்று வேலைக்கு வந்து... கீழே இருப்போரைத் திட்டித் தீர்க்கும் இயலாமை அதிகாரக் கோமாளிகள் இருக்கும் உலகத்தில் ஜப்பான்காரன் மட்டும் என்ன சப்பையா. மூளைக்காரன் இருக்கும் ஜப்பானில்தான் அகந்தையின் ஆறடியாய்... சிறைக் காவலன் ஒருவனும் இருக்கிறான். எல்லாவற்றுக்கும் அவனுக்கு ஒரு காரணம் வேண்டும். லூயிசைக் கண்டதுமே அவன் மீது ஒரு வகை ஈர்ப்பு அவனுக்கு. ஈர்ப்பு என்பது வெறுப்பின் உச்சமாகவும் இருக்கும். வன்மம் கொப்பளிக்கும் புன்னகையில்.. அது ஒரு வாழ்நாள் சாபம்.

ஒரு கட்டத்தில் காவலனைக் கொன்றுவிடலாமா என்றுகூட யோசிக்கிறான் லூயிஸ். அத்தனை வன்மத்தில் லூயிசைப் போட்டுத் தாழ்த்தி அடித்துக் கொடுமைப்படுத்தும் இடமெல்லாம் ஒரு தோட்டா தேவலை என்று தோன்றியது. சக போர் வீரன்... என்று இல்லை. ஒலிம்பிக்கில் ஓடி ஜெயித்தவன் என்றும் இல்லை. சக மனிதன் என்பதெல்லாம் இல்லவே இல்லை. கேம்பில் வந்து மாட்டி இருக்கும் அந்நிய நாட்டு வீரர்கள் எல்லாரும் அடிமைகள். மாட்டை விடக் கேவலமாக வேலை வாங்கப்பட வேண்டும் என்பதுதான் ஒரே நோக்கம். எங்கோ சேர்த்து வைத்த கோபம் எங்கோ வெளியேறும் சீக்கு.

அத்தனைப் பேர் நடுவிலும் லூயிஸ் மீது கொண்ட வன்மம் மட்டும் குறைந்தபாடில்லை. அந்த ஜப்பான் காவலனுக்குள் ஓசையில்லாத ஓநாயின் நாள்பட்ட பொறாமை எனும் ஊளை நோய். ஈகோ தலைக்கேறினால்... தன் நாக்கைத் தானே கடிக்குமாம் பிறழ்ந்த மனம். அதுதான் அந்தக் காவலன். அத்தனை அழகான முகத்தில் அத்தனை அசுத்தமான வஞ்சம்.

எத்தனை அடி... எத்தனை அவமானம்... எத்தனைக் கொடுமை... எத்தனை முறைதான் மரணத்தை நெருங்கி நெருங்கி விலகுவது. சாவு மேல் என்று தோணும்போதும் சரணடைந்து கீழே சரிகையிலும் லூயிஸின் கண்களில் தோல்வி இல்லை. பயம் இல்லை. நிதானமாக நின்று ஆடும் காந்தியின் கவசம்தான்.

மனதளவில் ஒரு போர் வீரனைக் குன்றவைப்பது... அவனை ஒன்றுமில்லாமல் செய்துவிடும். திடகாத்திரமான மனதை நிலைகுலைய வைப்பதில் அதுவரை அவன் கொண்ட பயிற்சிகள் சட்டென அவனை விட்டு விலகிவிடும். சோற்றைக் குறைத்து பேச்சைக் குறைத்து அவமானத்தை அதிகப்படுத்தி கீழ்த்தரமாக நடத்தி இருட்டில் அடைத்துவைத்து ஆடைகளைக் குறைத்து அழுக்கை நிறைத்து... ஆனாலும் லூயிஸ் நிற்கிறான். எதிர்த்து அடிக்காத இறுதிக் காட்சியிலும் துவண்டுகிடக்கும் லூயிஸ்தான் ஜெயிக்கிறான்.

படம் ஆரம்பித்த கொஞ்ச நேரத்திலேயே இரு சக வீரர்களோடு கடலுக்குள் மாட்டிக்கொள்கிறது லூயிஸின் திரைக்கதை. நாட்கள் நகர நகர உடலும் உள்ளமும் வற்றும் காட்சியில் கடல் அழகென்று எவன் சொன்னது... அது வலை. மீனும் வானும்தான் உணவு. நினைவும் தானும்தான் மிச்சம். அங்கிருந்து தப்பினால் அது கடலை விட வன்மம் பெருகிய ஜப்பான் நாட்டுச் சிறை.

ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்குமான சண்டை கேடு விளைவிக்கும் பாடு. அதிலும் இரு நாட்டு வீரர்களும் செய்துகொள்ளும் கோமாளித்தனம் மாற்றி மாற்றி மாட்டிக்கொள்கையில் புரிந்துகொள்ள முடியும். ஒருவேளை ஜப்பான்காரன் அமெரிக்காவில் சிக்கினாலும் இதே கதைதான்.

இரு நாட்டுத் தலைவர்களை நீங்க போயி சண்டை போடுங்கன்னு சொல்ல வேண்டும். அப்போது தெரியும்... சண்டையின் உண்மையான அர்த்தம்.

ஒருவரை ஒருவர் அடித்து... சுட்டு வீழ்த்திக்கொள்வதில் என்ன வெற்றி இருந்துவிட முடியும். எந்தத் தோட்டா முதலில் வெளியேறுகிறதோ... அதுவா வெற்றி. போர்க் காலங்களின் முடிவிலி... தப்பித்த அந்த வீரர்களின் வாழ்நாள் முழுக்க ஒரு கெட்ட கனவாகத் தொடர்வதை மிக நுண்ணிய புள்ளியில் இந்தப் படம் பதப்படுத்தி நினைவூட்டியது. ஒவ்வொரு முறையும் லூயிஸையே குறி வைத்துத் தாக்கும் அந்த ஜப்பான் காவலனை, பிறகு லூயிஸ் விடுவிக்கப்பட்டு... ஒரு கட்டத்தில் ஜப்பான் செல்ல நேரிடுகையில் பார்க்க விரும்பி இருக்கிறார். ஆனால் குற்ற உணர்ச்சி உள்ள ஜப்பான் காவலன் பார்க்க மறுத்திருக்கிறார். இதுதான் வெற்றி. உண்மையின் நிழலில் வன்மத்தின் நிஜம் உடைந்துபோகும். எத்தனை நாள் வாழ்கிறோம் என்பதிலா இருக்கிறது. எப்படி வாழ்ந்தோம் என்பதில்தானே எல்லாம்.

"நான் சாகவில்லை... உயிரோடுதான் இருக்கிறேன். என் துப்பாக்கியைச் சரி பண்ணி வைக்கவும். நான் வந்த பிறகு வேட்டைக்குச் செல்வோம்..." என்று ஒருமுறை ரேடியோவில் பேசக் கிடைத்த வாய்ப்பில் அழுகைக்கும் ஆளுகைக்கும் இடையே லூயிஸ் தவிப்பது கிளாசிக். அதே நேரம் இறந்துவிட்டதாக நினைத்து.. இல்லை இல்லை இதோ நம் லூயிஸ்

பேசுகிறான் என்று தெரிந்து வீட்டிலுள்ளோர் துடிப்பதெல்லாம் கோட்டுக்கு அந்தப் பக்கம் வீழ்ந்துவிட்ட கருப்புப் பக்கங்கள். அது காலத்துக்கும் கண்ணீரால்தான் எழுதப்படுகிறது.

எல்லாம் முடிந்து விடுதலைக்கு முந்தைய சில கணங்களில் ஜப்பான் காவலன் அறைக்குள் மெல்லச் செல்வான் லூயிஸ். அங்கே நீண்ட கைத்தடி கை மாறக் காத்திருக்கும். ஆனாலும் அங்கே ஒரு ஜென் அரங்கேறும். மிக நீண்ட வன்மத்தின் அடிநாதம் வேறொன்றாக ஆகும் இடம் அது.

போர்க் கைதிகள் பற்றிய சரி தவறு என்ற கூற்று இங்கில்லை. கைதிகளையும் குறைந்தபட்சம் மரியாதையுடன் நடத்த வேண்டியது மானுட விதி என்பது உலகத்துக்கே ஒன்றுதானே.

அந்த வகையில் தலைவர்களும் ஆதிக்க மனோநிலைகளும் செய்த... செய்துகொண்டிருக்கும் தவறுகளுக்கு யாரோ ஒரு பொதுவானவன் - லூயிஸைப் போல ஒருவன் - காலத்துக்கும் மரத்தால் ஆன சிலுவை சுமக்க வேண்டி இருக்கிறது. ஜப்பான் காவலன் போன்ற ஒருவன் காலத்துக்கும் கண்ணுக்குத் தெரியாத சிலுவையைச் சுமக்க வேண்டி இருக்கிறது. யார் சுமந்தாலும் சிலுவையின் பாடுகள் ஒருபோதும் தீர்வதில்லை.

தயாரித்து இயக்கி இருப்பது - ஏஞ்சலினா ஜோலி - முத்தங்கள்.

திரைப்படம் : Unbroken;

மொழி : ஆங்கிலம்;

இயக்கம் : ஏஞ்சலினா ஜோலி;

ஆண்டு : 2014.

தீராச் சொற்கள்

ஒரு மெழுகுவர்த்தியை
கையிலேற்றி எழுதிக்கொண்டிருக்கிறேன்

மழைக்காடுகளின் குறீயீட்டுப்பறவையொன்றின்
உதிர்ந்த சிறகிலிருந்து
புறப்படுகிறது ஒரு புல்லாங்குழலின் நீண்ட ஓசை

எல்லாக் கூழாங்கற்களிலும்
வரையப்பட்டிருக்கும் வானத்தில்
உனதன்பின் கீற்றொளியை
நேசமாய்த் தடவிக்கொண்டிருக்கிறது
வெண்ணிற நதி...

மேகங்கள் வகிடெடுத்த பூமி
என் வெள்ளைத்தாள்களின்
வெற்றிட நிலங்களை
உன் சொற்கள் உழுதுகொண்டிருக்கின்றன
எனக்காக நின் விழிவலசை கவிதையாய்...

கடவுள் மனிதநாத்திகம்
பேசிக்கொண்டிருக்கையில்
உன் கன்னத்தில் முத்தமிடுகிறது
சோமாலியத்தின் கடைசிக் குழந்தை...

சரிபாதியாய் நீ கடித்து வைத்த
ஆப்பிளிலிருந்து பிரபஞ்சத்தின்
கோள வடிவத்தைச் செதுக்கிக்கொண்டிருக்கிறான்
அட்லஸ்...

யார் யாரோ எழுதிக்கொண்டிருக்கும்
செங்காட்டில் தீராச்சொற்களோடு
மனதின் குரலாய் எழுதிவைத்த
சொற்கள் யாவும் தானியங்களாய்
தீராப் பிரியங்களோடு

ஒரு தேசாந்திரியின் தோள்களில்
சாய்ந்துகொள்கின்றன

மூன்றாம் பிறையோடு முடிந்துவிடுவதல்ல
அத்தியாயம்...
ஆழிக்கரையில் இருகால்
தடங்களை ஐந்தாம் திணைகளாக
வரைந்துவிட்டுச்செல்கிறது
வான்நீலம் பாடிய செங்காட்டுக்குருவி...

உறங்கிப்போயிருந்த கண்ணம்மாவை அவன்
எழுப்புகிறான்
இரவில் ஒரு அதிகாலை
புலர்ந்து இசைக்கிறது
யானும் நீயும் எவ்வழியறிதும்
அன்புடையாய் மொழிகிறது
பேரன்பின் நம் தீராச் சொற்கள்

– ராம் பெரியசாமி

என் ஓவியம்

எந்த நிறமெடுத்து வானம் தீட்ட?
ஏற்கனவே வெளியெங்கும் நீலம்
எந்தத் தூரிகை கொண்டு கடல் செய்ய?
சமுத்திரமனைத்தும் அலைகள்
பச்சை மரங்களைப் பறவைகள்
வரைந்தாயிற்று
நட்சத்திரங்கள் இரவைப் படைத்துவிட்டன
மணற்பரப்பைக் காற்று எழுதிச் செல்கிறது
கற்றுக்கொள்வதை நிறுத்திக்கொள்கிறேன்
ஆராதிப்பில் கரைந்துபோகிறேன்
பெருவெளியில் எனைத் தீட்டத் தொடங்குகிறது
காலம்.

– கி.சரஸ்வதி

கணேசா டைலரும் காக்கி ட்ரவுசரும்:

பண்டிகை வந்தாலே கலர்கலராய் உடையுடுத்தும்
மேலத்தெரு சுப்புவின் மேல்
கொஞ்சம் பொறாமைதான்
பால்யம் முழுவதும்

பொங்கலுக்கு ஒன்று
பொறந்தநாளுக்கு ஒன்றெனப் பந்தா காட்டவே
தோழமை கொள்வான்
பொன்னுதுரை
நமக்கும் இந்த வருடம் நடக்குமென
விளையாத ஆசையின் மேல்
வீம்பாய் நடக்கும் அறுவடை

பிடித்த நிற
ஊதாவும் மஞ்சளும்
வெளிர் பச்சையும்
அப்பாவின் சாராய நெடியில்
விலகி நின்றே சிரிக்கும் கைவராமல்

வருடம் முழுக்கக் கெஞ்சியதற்கு
ஆத்தூர் இராஜராஜனில்
கடன் சொல்லி
ஒத்தை சட்டைத் துணி
எடுத்துத் தருவாள் அம்மா

எத்தனைதான்
பெத்த கடனெனப் புலம்பியபடி
கணேசா டைலரிடம் தைக்கத் தந்த
துணியைப் பார்க்கும் வரை
தூக்கமில்லை கண்களுக்கு

ஒரே ஆடை வருடம் முழுக்க உழைத்துக் கிடக்க
சாணியும் சகதியும்
புது டிசைன் போட்டுவிடும்
இவன் வருத்தத்தில் மயிலிறகாய்

வலுக்கட்டாயமாய்ப் பிரியும்
புருசன் பொண்டாட்டியை
இழுத்து வந்து
ஒட்டிவைப்பதைப் போல
அத்தனைத் தையல்கள் விழும்
வருடம் முடிவதற்குள்

'வாங்கி மூணு வருசம்தான் ஆச்சி.. அதுக்குள்ள
கிழிஞ்சா என்னய்யா டவுசர் துணி விக்கிற?'
பாட்டி சண்டையிடுகையில்
சந்தி சிரிக்கும் கடைக்காரன் பாடு

ஒரே கல்லில் ரெண்டு மாங்காய்
சொலவடையின் அர்த்தம்
அழகாக விளங்கும்
பண்டிகை நாளிலும்
பள்ளிக்கூட உபயோகத்துக்கென
எடுத்துத்தரும் காக்கி ட்ரவுசரில்

அந்த நாட்களிலெல்லாம்
கலர் துணி காணாத பட்டுப்போன ஆசையில்
பன்னீர் தெளிப்பதென்னவோ
டைலர்காரர்
காக்கி ட்ரவுசரின்
இருபுறமும் பாக்கெட்டுக்கென வைத்துவிடும்
வேறு கலர் துணி மட்டும்தான்.

– ந.சிவநேசன்

காதலாகிக் கசிந்துருகி
ஊர் சுற்றி
திருமணம் முடிந்து
உனக்குப் பிடிக்கும் என்று
நாய்க் குட்டியும்
எனக்குப் பிடிக்கும் என்று
காதல் பறவையும்
நமக்குப் பிடிக்கும் என்று
தொட்டி மீன்களும்
வாங்கி வாழத்துவங்கியதில்
சுதந்திரமாக இருக்கின்றன
என்னைப் போலவே
அவைகளும்
வீடு தாண்டாமல்....

– கதிரவன் வீ

நூல் விமர்சனம்

● ஜெயா நவி

வலி மிகுந்த கவிதைகள்



நூல் : தீ நுண்மிகளின் காலம்

ஆசிரியர் : இரா. பூபாலன்

பக்கங்கள் : 64

வெளியீடு : பூபாலன்

திரு.இரா.பூபாலன் பொள்ளாச்சி இலக்கிய வட்டத்தைச் சார்ந்த எழுத்தாளர், கவிஞர். சமூக அக்கறையோடு பேசும் எழுதும் அற்புதமான நவீனக் கவிஞர். இரண்டு முறை சாகித்ய அகாதமி விருது பெற்ற கவிஞர் சிற்பி அவர்களால் தனித்திறன் மிக்க கவிஞர் என்று அடையாளப்படுத்தப்பட்டவர். அதைத் தன் வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறார் கவிஞர் பூபாலன்.

முழுக்க முழுக்க இந்த இரண்டு வருடங்களாக நாம் படும் துயரினை, ரணத்தைப் பிரதிபலித்து அதை வலி மிகுந்த கவிதைகளாக மாற்றி இருக்கிறார் கவிஞர்.

பணம் படைத்தவனில் இருந்து பாமரன் வரை பாரபட்சமின்றி அனைவரையும் நடுங்க வைத்த நாட்களை வேதனையோடு எடுத்து உரைக்கும் கவிதைகள். துயர் மிகுந்த தனிமைக்காலம் காலகாலத்திற்கும் ரணத்தைப் பேசிக்கொண்டே இருக்கும். அதைப் போலவே மக்கள் பட்ட சொல்லொணாத் துயரை அப்படியே கவிதையாக வார்த்திருக்கிறார் கவிஞர்.

ஒரு தொற்றின் உண்மை தெரியாமலேயே முதலில் சாதாரணமாகவும், ஆச்சரியமாகவும், குதூகலமாகவும் பார்க்கப்பட்டது ஊரடங்கு.

ஆகா நமக்கு விடுமுறை கிடைத்துவிட்டது என்று மகிழ்ந்தவர்கள் ஏராளம். திரைப்படங்களில் மட்டுமே பார்த்திருந்த ஊரடங்கை நம் கண் முன் பார்க்கும்போது இத்தகைய உணர்வுகள் வந்ததில் வியப்பேதும் இல்லை. ஆனால் அது எவ்வளவு கொடூரமாக நம்மைச் சுழற்றி அடிக்கப்போகிறது என்பதைத் தெரியாமலே வியந்தோம்.

யாரையும் தொடுவதற்குப் பயந்தோம். கைகளைக் கழுவிக் கழுவி நம் கை ரேகைகளே அழிந்துபோயிருக்கும். புன்னகைக்க மறந்தோம். மீறிப் புன்னகைத்தாலும் அதை முகக்கவசத்திற்குள் மறைத்தோம். கடைகளில் விற்காமல் கிடந்த சானிடைசர்கள் எல்லாம் விற்றுத் தீர்ந்தன. முகக்கவச வியாபாரம் கொடி கட்டிப் பறந்தது.

"எல்லா மீறல்களுக்கும்
பழகியவர்கள்
முகக் கவசத்தை மட்டும்
இறுகப் பற்றியபடி
இருக்கிறார்கள்"

"முகமூடிகளைப் பார்த்துச் சலித்த
வாழ்வில்
முகங்கள் நினைவில்
நிற்க மறுக்கின்றன.
வெகு நாட்கள் கழித்து
ஒரு பழைய நண்பனைச் சந்தித்தேன்
முகமூடியைக் கழற்றி
தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்"

இப்படித்தான் இருக்கின்றன இப்போது நாட்கள். முகக் கவசத்திற்குள் முகத்தை மறைத்து எதிரே வருவது யார் என்றே தெரியாத அளவிற்குத்தான் நாம் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம்.

" முகமூடிக்குப் பின்னால்
புதைந்து போனது
நம் புன்னகை
நாம் சிரிக்கிறோமா
முறைக்கிறோமா
என்பதை அறியாமல்
மையமாகத் தலையசைத்து
நகர்கின்றது காலம்.."

தனித்திரு, விலகியிரு, வீட்டிலேயே இரு என்றெல்லாம் தொலைக்காட்சிகளும், வானொலிகளும், நாளிதழ்களும் கூறிக்கொண்டே இருந்தன. பணம் இருப்பவர்களுக்கு ஊரடங்கு நாட்கள் ஓய்வு நாட்களாகவும் இருந்தன. நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்கிறோம் என்று வீட்டிலேயே இருந்தனர்.

ஆனால் அன்றாடம் வேலை செய்பவர்கள், வேலைக்குச் சென்றால்தான் வீட்டில் உலை கொதிக்கும் என்று இருப்பவர்களின் நிலை? இதையெல்லாம் யோசிக்காமல் காரணமே தெரியாமல் விளக்கேற்றிக்கொண்டும், கைகளைத் தட்டிக்கொண்டும் இருக்கிறோம்.

"முகக் கவசங்களுக்கு
வெளியில்
மொய்த்தபடி இருக்கிறது
மரணம்
முகக் கவசங்களை நம்பி
வீதியில் இறங்கி விட்டோம்
வாழ்வுடன்
மரணத்துடன்
போராட.."

இந்த வரிகளில்தான் எவ்வளவு ரணம் உள்ளோடுகிறது.

இக்கொடிய நோய்த் தொற்று கொடுத்த தனிமை அண்டை வீடுகளுக்குக் கூட நம்மைச் செல்ல விடவில்லை. பக்கத்து வீட்டில் ஒரு சின்ன இருமல் சத்தம் கேட்டால் நாம் நம் வீட்டின் ஜன்னல்களையும் கதவுகளையும் மட்டும் மூடிக்கொள்ளவில்லை.. நம் இதயங்களையும் சேர்த்து மூடிக்கொண்டோம்.

நோய்த் தொற்றால் இறந்தவர்களின் முகத்தைக்கூட பார்க்க வராத சொந்தங்களாகிவிட்டோம். ஆனால் இத்தனை கஷ்டங்களுக்கு நடுவிலும் மனித நேயமிக்க மனிதர்களையும் அடையாளம் காட்டியது இத்தொற்றுக்காலம்.

ஊரடங்கால் விபத்தில்லாச் சாலைகளையும், மாசற்ற காற்றையும், நிறைய அமைதியையும், நிறைய தனிமையையும் அனுபவித்தோம். இந்தக் கிருமி தந்தவை கொஞ்சமே கொஞ்சம் வரம்தான் போலும்.

மொழி கற்பது குறித்தும், நீட் தேர்வு குறித்தும் எழுதிய கவிதைகளில் சமூகத்தின் அவலநிலையை அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

இந்த நூலிலிருந்து கவிதை முத்துக்கள் சில......

" லட்சங்களில் கற்கும் கல்வியோடு
லட்சியங்கள்
போட்டி போட முடிவதேயில்லை
ஒரே தேர்வு தேசம் முழுமைக்கும்
என்றவர்கள்
ஒரே கல்வியை தேசம்
முழுமைக்கும்
தரத் தயாரில்லை.
ஒரு தேர்வு
என் முன் தூக்குக் கயிறைத்தான்
நீட் டிக் கொண்டிருந்தது."

"யாருமற்ற எதுவும்
தனிமையில்
சகலமுமிருக்கிறது"

"எதுவும் செய்யமுடியாத
தனிமையில்
பதற்றத்துக்குள்ளாகிறது
இந்த வாழ்வு"

"தனிமைக்கு
ஓராயிரம் கதவுகள்
ஒவ்வொன்றையும்
வலிந்திழுத்து
அடைத்துவிட்டுப் பின்
உறங்க வேண்டியிருக்கிறது"

இப்படி வலிமிகுந்த யதார்த்த வாழ்வைக் கவிதை வரிகளில் நிரப்பியிருக்கிறார் கவிஞர். இவ்வரிகளின் துயரை நாம் ஒருமுறையேனும் இத்தொற்றுக் காலத்தில் அனுபவித்து இருப்போம். இக்காலங்களைக் கடந்து இன்று உயிரோடு இருப்பதே ஒரு பெரும் சாதனைதான்.

இத்தொற்றுக்காலம் நமக்குப் பல்வேறு பாடங்களைக் கற்பித்தது. எப்பொழுது என்ன நிகழும் என்று தெரியாமலே நகருகின்றன நாட்கள். ஆகவே இருக்கும் நாட்களில் சுயநலமில்லா மனித நேயத்துடன் நடப்போம். ஒருவரை ஒருவர் அன்பால் அரவணைப்போம் எனக் கவிதைகள் ஒவ்வொன்றும் நம்மிடம் பேசுகிறது.

இப்படியான புத்தகங்கள் காலத்தைச் சுமக்கின்றன. அதோடு அந்தக் காலத்தைய மனித வாழ்வியலின் ஆவணமாகப் பதிவாகின்றன.

■

• தமிழன் சங்கர்
• ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

மினுமினுத்த விமான நிலையங்களே!

கைகளில் ஆத்திரேலியா நாட்டுக்கான கடவுச் சீட்டையும், விமானப் பயணச் சீட்டையும் தமிழ்ச்செல்வன் பத்திரமாகப் பிடித்திருந்தான்.

“நல்லபடி போய் வாழ்க்கையில் முன்னேறு” என்றபடி அவன் அப்பா சாமிப் படத்தின் பல தீப ஒளிகளுக்கு மத்தியிலிருந்த திருநீற்றை எடுத்துப் பெரியதாய் அவன் நெற்றியில் திலகமிட்டார். இன்று நேற்றல்ல எப்பொழுது திலகமிட்டாலும் அவர் பெரிதாய்த்தான் வைப்பார். தமிழ்ச்செல்வன் பலமுறை அவரை வேண்டிக் கேட்டும், அவர் என்றுமே சிறிதாய்த் திலகமிட்டதில்லை. சாதி மத ஒழிப்பு என்னும் சித்தாந்தச் சிக்கலில் அவர் என்றுமே சிக்கியதில்லை. திருநீறு அணிந்தால் அதை மற்றவர் பார்க்க வேண்டும். அப்படி இல்லாமல் ஏன் சின்னதாய் வைக்க வேண்டும்.. யார் என்ன சொல்லப் போகிறார்கள் என்று எப்போதுமே தமிழ்ச்செல்வனுடன் அவர் வாதாடுவார். இன்று தமிழ்ச்செல்வனால் அதைப் பற்றிப் பெரிதாய் வாதிட மனம் வரவில்லை, தொலைதூர விமானப் பிரயாணம் பற்றிய சிந்தனை அவனை ஆக்கிரமித்திருந்தது.

முதல் முறையாகத் தன் உறவுகளைப் பிரிந்து தொலைதூரம் செல்ல இருக்கிறான். அந்த மனக் குழப்பத்துடன் வெளிநாட்டில் வசிக்கும் அவன் நண்பர்கள் வேறு தங்கள் பிரயாண அனுபவங்களைச் சொல்லி அவன் குழப்பத்தை அதிகரித்து வைத்திருந்தனர். உள்நாட்டுப் பயணம் என்றால் குறைந்தது இரண்டு மணிநேரத்திற்கு முன்னதாக விமான நிலையத்தில் இருக்க வேண்டும். அதுவும் வெளிநாடு செல்வதென்றால் குறைந்தது நான்கு மணிநேரத்திற்கு முன்னதாக இருக்க வேண்டும் என்று பலர் புகுத்தி வைத்த கருத்தை நன்கு ஆழமாகப் பதியவைத்துக் கொண்டான். வாசலில் விமான நிலையத்திற்குச் செல்லும் வாகனம் தயார் நிலையிலிருந்தது. அதில் பக்குவமாக அடுக்கப்பட்டிருந்த இருபது கிலோ எடைக்கு நிகரான ஒரு பெரிய பெட்டியும், ஏழு கிலோவுக்கு நிகரான சிறிய பெட்டியும் பல மைல் தூரத்திலும் தெரியும் அளவிற்கு "தமிழ்ச்செல்வன்" என்று அவன் அப்பா வரைந்திருந்த வார்த்தைகளால் பளபளத்துக் கொண்டிருந்தன. பெற்றோர்களின் ஆசியைப் பெற்றுக்கொண்டதும் அவன் அமர்ந்திருந்த வாகனம் சென்னை விமான நிலையம் நோக்கி உறுமிக்கொண்டு கிளம்பியது.

சென்னைச் சாலைகளின் இடுக்குகளில் எல்லாம் வாகனங்கள் நுழைந்து நடைவாசிகள் கூட வெளியேற இடமில்லாமல் அர்த்தமற்றதாக நிமிடங்கள் கரைந்துகொண்டிருந்தன. நல்லவேளையாக வெளிநாட்டு நண்பர்களின் ஆலோசனைப்படி முன்னதாகவே கிளம்பியதால் தமிழ்ச்செல்வனின் பதட்டம் கொஞ்சம் கட்டுக்குள் இருந்தது. தொலைதூரப் பறவைகளாய்த் தெரிந்துகொண்டிருந்த அலுமினியப் பறவைகள் சரசரவென்று கண்களை அகல விரித்துப் பார்க்கும்படி மிக அருகில் நீல வானத்தில் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் விமானங்கள் பறந்தது, விமானநிலையம் நெருக்கத்தில் வந்துவிட்டது என்பதை உணர்த்தியது.

நேர்த்தியாக வாகனத்தை நிறுத்தித் தமிழ்ச்செல்வனின் பெட்டியை இறக்கிவைத்தார் ஓட்டுநர். வெளிநாடு செல்லும் மகிழ்ச்சியில் கணக்கு எதுவும் பார்க்காமல் பணத்தையும் நன்றியையும் வாரி இறைத்துவிட்டு விமானநிலையக் கட்டிடத்தின் பிரமாண்ட கண்ணாடி முகப்பில் நுழைந்தான் தமிழ்ச்செல்வன். தனக்கும் அங்கிருப்பவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது போல் நுழைவு வாயிலில் நின்றுகொண்டிருந்த காவல் அதிகாரியைப் பார்த்தவாறே வேகமாய் நகர்ந்துகொண்டிருந்த நீண்டதொரு வரிசையில் கரைந்தான். வெளிநாடு செல்வதற்காகப் பெரும் செலவு செய்து வாங்கிய கோட்டு சென்னையின் காலை வெயில் வெப்பத்தை வெகுவாக ஏற்றி வியர்க்க வைத்தது. நேரம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைய ஒருவழியாய்க் கடவுச் சீட்டையும் விமானப் பயணச்சீட்டையும் கடுகடுவென்று மிடுக்காய்த் தெரிந்த காவல் அதிகாரியிடம் காட்டிவிட்டு விமான நிலையத்தின் குளுகுளு கட்டிடத்திற்குள் உள்நுழைந்தான்.

அஃது என்னவென்று தெரியவில்லை, விமானநிலையத்தில் பார்ப்பவை எல்லாம் மினுக்காக அழகாகத் தெரிகின்றன. அவனுக்கு மிக அருகில் நடந்து சென்ற விமானப் பணிப்பெண்களை ரசித்தவாறே விமான நுழைவுச் சீட்டைக் கோட்டிலிருந்து வெளியே எடுத்தான். தான் பிடிக்க வேண்டிய விமானத்தின் கௌண்ட்டர் வந்ததும் அங்கே இருந்த சிறு வரிசையில் பெட்டியைப் பிடித்துக்கொண்டு மெதுவாக நகர்ந்துகொண்டிருந்தான். வரிசையில் பல தினுசான முகங்கள், பல தினுசான மொழிகள் என்று தான் சராசரியாய் இருக்கும் இடத்தில் இல்லை என்பதை அவை அவனுக்கு உணர்த்திக்கொண்டிருந்தன. பெட்டிகளைக் கன்வேயர் பெல்ட்டில் தள்ளிவிட்டுப் பயணச்சீட்டைச் சரிபார்த்துக் கொடுத்த அந்த அழகுப் பணிப்பெண்ணிடம் புன்னகையோடு நன்றியையும் சமர்ப்பித்துவிட்டு மடிக்கணினியோடு இறுதிக் கட்டப் பாதுகாப்பு வரிசையில் வந்து நின்றான். அங்கிருந்த கூட்டத்தைப் பார்த்ததும் மலைத்துப்போனான். நொடிகள் கடந்து நிமிடங்கள் கடந்து அவனது பொறுமையைச் சோதித்துக்கொண்டிருந்தது. விமானத்தை விட்டுவிடுவேனா, தனது நண்பர்கள் சொன்னது போல் சரியான நேரத்திற்கு வந்தும் நேரம் போதவில்லையே என்று கலங்க ஆரம்பித்தான். அந்த நேரம் பார்த்து ஒரு பெண் காவல் அதிகாரி

ஒரு சில விமானச் சேவையின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களை மட்டும் தள்ளி இருந்த சிறு வரிசைக்கு அழைத்துச் சென்றார்.

வேகமாய் நகர்ந்து செல்லும் காலத்தை மனிதனால் வெல்ல முடியாது ஏதேனும் மாயங்கள் நிகழாமல். அப்படித்தான் இருந்தது தமிழ்ச்செல்வனுக்கு. அந்தப் பெண் காவல் அதிகாரி புதிய திசையைக் காட்டியது, இமயமலையின் சிகரத்தைத் தொட ஏற வேண்டியவனை நேரே சிகரத்திற்குச் சென்று தரையிறக்கியது போல் இருந்தது அவனுக்கு. ஒரு சில நகர்வில் தன்னிடம் இருந்த அனைத்துப் பொருட்களையும் அங்கே ஆய்வுக்குத் தயாராய் இருந்த தட்டில் வைத்தான். உடலில் அணிந்திருந்த துணிகளைத் தவிர கோட்டு உள்பட அனைத்தும் உள்ளீடாய் ஆய்வு செய்யும் கணிப்பொறி யந்திரத்தின் உள்ளே நுழைந்தது. தனக்கு முன் நின்ற நபர் நகர்ந்ததும் இவன் கைகள் இரண்டையும் உயர்த்தியவாறு மிடுக்கான காவல் துறை அதிகாரியின் கையிலிருந்த உலோகம் கண்டுபிடிக்கும் கருவி (மெட்டல் டிடெக்டர்) மூலம் ஆய்வு செய்யப்பட்டான். அதுவரை எந்தச் சப்தமும் எழுப்பாத அந்தக் கருவி அவனை ஆய்வு செய்தபோது அலறியது. பதற்றமடைந்த தமிழ்ச்செல்வனை அந்த அதிகாரி அமைதிப்படுத்தினார். இடுப்பில் அணிந்திருந்த இடைவார்(பெல்ட்)தான் பிரச்சனை. அதையும் கழட்டி ஆய்வுக்குத் தயாராய் இருந்த அடுத்த தட்டில் வைத்தான். அது நகர, மீண்டும் அவன் ஆய்வு செய்யப்பட்டுத் திருப்திகரமாய் அந்த அதிகாரியால் அனுப்பப்பட்டான்.

சரியாய் அரைமணி நேரம் இருந்தது. வியர்த்தது போக மீதம் இருந்த நீர் அவனை இயற்கை கடனுக்கு அழைக்க வேறுவழியில்லாமல் மிகவும் சுத்தமாக இருந்த ஆண்கள் கழிப்பிடத்தைத் தேடிப் பிடித்து உள்நுழைந்தான். எப்படித்தான் அங்கு ஒரு பத்து நிமிடங்கள் கழிந்தன என்று அவனுக்கே தெரியவில்லை. முடியைத் திருத்திக்கொண்டு முகத்தைப் பளிச்சென்று மாற்றிக்கொண்டு விமானத்தில் ஏற வேண்டிய இடத்திற்கு வந்தான். அங்கொருவர் இங்கொருவராகச் சிலர் இருக்கைகளில் ஒய்யாரமாய் அமர்ந்திருந்தனர். பிரம்மாண்ட கண்ணாடிச் சன்னலுக்கு வெளிப்புறம் ஒரு பேருந்து அப்போதுதான் நகர்ந்துகொண்டிருந்தது. அங்கே இருந்த விமானச் சேவையின் பணிப்பெண்ணிடம் தான் வைத்திருந்த விமான நுழைவுச் சீட்டை அவன் கொடுத்தான். அந்தப் பெண் அவனை மேலும் கீழும் பார்த்தாள்.

“நாங்கள் அரைமணி நேரமாய்ப் பொது ஒலிபெருக்கியில் உங்களைத்தான் அழைத்துக்கொண்டிருந்தோம்” என்றாள் அந்தப் பணிப்பெண். தமிழ்ச்செல்வனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அழைத்துக்கொண்டிருந்தோமா என்ன சொல்கிறாள் இந்தப் பெண்மணி.. இனி என்ன சொல்லப் போகிறாள் என்று மலங்கமலங்க அவன் அவளைப் பார்த்தான்.

“விமான இருக்கைகள் நிரம்பிவிட்டன, நீங்கள் அடுத்த விமானத்தில்தான் செல்ல முடியும்” என்றாளே பார்க்கலாம், தமிழ்ச்செல்வனுக்குத் தொண்டையை அடைத்தது, தலை சுற்ற ஆரம்பித்தது. தொடர்ந்து மூன்று விமானங்களில் பயணித்தே அவன் சென்று சேர வேண்டிய ஆத்திரேலியா நாட்டின் பெல்கனன் (Belconnen) ஊரைச் சென்றடைய முடியும். இந்தப் பயணம் என்ன ஆகுமோ என்று பெரும் குழப்பத்தில் அவன் வீழ்ந்தான். ஒரு சில நிமிடங்களே அவன் தாமதமானான். அதன் விளைவு இவ்வளவு கடுமையாக மாறும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. முதல் முறை வெளிநாட்டுப் பயணம் இப்படி ஆகிவிட்டதே என்று கலங்கினான்.

“நான் ஆத்திரேலியா செல்கிறேன். அடுத்த விமானத்தை மும்பாயில் நான் சரியான நேரத்திற்குப் பிடிக்கவேண்டும். இல்லையென்றால் இந்தப் பயணமே சிக்கலாய் முடிந்துவிடும்” என்று அவன் அந்தப் பணிப்பெண்ணைப் பார்த்துப் பரிதாபமாய்ச் சொன்னான்.

“நான் ஒன்றும் செய்ய இயலாது, விரைவாக எங்கள் விமானச் சேவையின் நுகர்வோர் சாவடியிற்குச்(Booth) சென்றால் அவர்கள் உதவுவார்கள்” என்று அவனுக்குப் பின் நின்றுகொண்டிருந்தவரிடம் கவனத்தைச் செலுத்தினாள்.

அந்த நுகர்வோர் சாவடி பாதுகாப்புச் சோதனை செய்துகொண்டிருந்த இடத்திற்கு வலதுபக்கம் இருந்தது. அதிகமாய்க் கூட்டம் எதுவும் இல்லை. வியர்க்க விறுவிறுக்க அதை அணுகியவன் நடந்தவற்றைப் படபடவென எடுத்துரைத்தான். சரியாய் அரைமணி நேரத்திற்குள் கிளம்ப வேண்டிய அடுத்த விமானத்தில் அவனது இருக்கையை உறுதிப்படுத்தினார்கள் அங்கிருந்த சில பணிப்பெண்கள். அந்தப் பத்து நிமிடங்களுக்குள் அவர்கள் பலரைத் தொடர்பு கொண்டார்கள். அவர்கள் அடுத்தடுத்துப் பேசிக்கொண்டிருந்ததில் தமிழ்ச்செல்வனுக்குத் தான் ஆத்திரேலியா போவது உறுதியா இல்லையா என்கின்ற ரீதியில் கவலைகள் கற்பனை வண்டியில் ஏறின.

எங்கிருந்து விரட்டப்பட்டானோ அதே இடத்திற்குத் திரும்ப வந்தான். நல்லவேளை அந்தப் பழைய பணிப்பெண் அங்கு இல்லை. எப்படியும் அடுத்த விமானத்தில் ஏறிவிடலாம் என்று எங்கிருந்தோ வந்த தன்னம்பிக்கையுடன் தனக்கு வராத ஒய்யாரத்தை வலிந்து திணித்துக்கொண்டு ஓர் இருக்கையில் அமர்ந்தான். சொல்லி வைத்தது போல் சிறிது நேரத்தில் அந்தப் பழைய பணிப்பெண்ணே வந்தாள். விமானத்தில் ஏற வேண்டியவர்களை அவள் வரவேற்றாள். தமிழ்ச்செல்வனைப் பார்த்ததும் புன்னகைத்து “ஆப்பிச் சேர்னி *(Happy Journey)*” என்று பயணச்சீட்டினைச் சரிபார்த்து அதன் ஒரு பகுதியைத் திரும்பக் கொடுத்து வழியனுப்பி வைத்தாள். குளுகுளு பேருந்தில் ஓரிரு நிமிடங்களில் விமானத்தை அடைந்து விமானப் பணிப்பெண்ணுக்கு ஒரு புன்னகையைச் சிந்திவிட்டுத் தனக்கு ஒதுக்கப்பட்ட சீட்டில் அமர்ந்தான். சரியாய் ஒரு மணிநேரம் நாற்பத்தைந்து நிமிடங்கள்தான் கிடைக்கும், அடுத்த விமானத்தை மும்பாயில் பிடிக்க. அது சாத்தியமா என்று அவனுக்குத் தெரியவில்லை. கடிகார முட்களைப் பார்த்தவாறு பல காலக் கணக்குகளைப் போட்டுப் பார்த்தான். எல்லாம் மயிரிழை நேரம் கூட அதிகம் கொடுக்கவில்லை. தான் சென்றுகொண்டிருக்கும் விமானம் ஏதேனும் காரணத்தால் தாமதப்பட்டால் முடிந்தது கதை என்று நினைத்தபோது வியர்வையில் கோட்டுக்குள் அணிந்திருந்த மேல்சட்டை நனைய ஆரம்பித்தது, தலைவலி மெல்லியதாய் எட்டிப் பார்த்தது.

முதல் முறை மும்பாயின் கடற்பரப்பை வானத்தில் இருந்து பார்த்தான். அடுக்குமாடிக் கட்டிடங்களும் அதையொட்டிய கடற்கரையும் சிறு சிறு கப்பல்களும் அவனுக்கு எந்த மகிழ்ச்சியையும் கொடுக்கவில்லை. ஒவ்வொரு மணித்துளியையும் அவன் கணக்கிட்டுக்கொண்டிருந்தான். அவன் இருந்த சீட்டு விமானத்தின் வால் பகுதி. அங்கிருந்து முன் பகுதிக்குச் சென்று விமானத்தில் இருந்து இறங்கவேண்டும். அங்கிருந்து பேருந்திலோ இல்லை நேரடியாக விமானநிலையக் கட்டிடத்திலோ உள்நுழைய வேண்டும் என்று பலவிதக் கணக்குகளைப் போட்டுக்கொண்டிருந்தான். மும்பாய் விமானநிலையம் அவனுக்குப் புதுப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கக் காத்திருந்தது.

விமான நிலையம் என்றாலே அஃது ஒரே இடத்தில் இருக்கும் என்பது தவறான புரிதல் என்பது அன்று அவன் படித்த பால பாடம். மும்பாயின் உள்நாட்டு விமானநிலையத்தில் அவனது விமானம் தரையிறங்கியது. வேக வேகமாய்ப் பலருக்குப் போட்டியாக அவன் விமானத்தில் இருந்து வெளியேற முனைந்தான். அவனுக்கு மட்டும் நிமிடங்கள் வேகமாகக் கழிவது போல் இருந்தது. ஒரு வழியாய் ஏற்கனவே வந்து யாரும் ஆதரிக்காமல் தனியாய்க் கன்வேயரில் சுற்றிக்கொண்டிருந்த அவனது இரண்டு பெட்டிகளையும் சேகரித்துக்கொண்டு மும்பாயின் வெளிநாட்டு விமான நிலையத்திற்குச் செல்லும் பேருந்தில் ஏறினான். நல்லவேளையாக அவன் பெட்டியைச் சேகரிப்பதற்கும் பேருந்து கிளம்பவும் சிறிது நேரமிருந்தது. ஒரு பத்து நிமிடப் பயணம். பிரமாண்ட அலுமினியப் பறவைகளாய்ப் பல நாட்டு விமானங்கள் பேருந்தின் சன்னல் வழியாக அவனை மிரட்டின. பேருந்தை விட்டு இறங்கியவன் சிட்டாய்ப் பறந்து பிரிசுபேன்*(Brisbane)* நகருக்குப் போகும் குவன்டசு *(Qantas)* விமானச் சேவையின் சாவடியை அடைந்தான். நேரம் கனகச்சிதமாய் இருந்தது. சென்னையைப் போலவே இங்கும்

பெட்டிகள் எடை பார்க்கப்பட்டு உள்ளே எந்த ஆபத்தான பொருட்களும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுக் கன்வேயர் பெல்ட்டில் பெட்டிகள் அவனிடம் இருந்து பிரியா விடை பெற்றன. தனது உடைமைகள் தன்னை விட்டுப் போகும்போது மெல்லியதாய் ஒரு பிரிவுத் துயரம் வரும். ஒரு சில வினாடிகள் அவன் அதை அனுபவித்தான். இந்த முறை புதிதாய் விமான நுழைவுச் சீட்டுகள் கொடுக்கப்பட்டன. ஒன்று மும்பாயில் இருந்து பிரிசுபேன், மற்றொன்று பிரிசுபேனிலிருந்து கன்பரா(Canberra) என்றிருந்தது. பெட்டிகள் நேரடியாகக் கன்பரா விமான நிலையத்திற்கு வந்துவிடும் என்று புன்னகையோடு சொன்ன குவன்டசு விமானச் சேவை பணிப்பெண்ணிடம் அளவுக்கு அதிகமாக நன்றியைச் சொல்லிவிட்டு இறுதிக் கட்ட பாதுகாப்பை உறுதி செய்யும் நீண்ட வரிசையில் வந்து நின்றான். நிமிடங்கள் கரைய சென்னையில் படித்த பால பாடம் நினைவுக்கு வர ஓர் உலோகம் கூட இல்லாத வகையில் அனைத்தையும் ஆய்வு செய்யத் தயாராய் இருந்த தட்டில் வைத்தான். அவனது பெட்டியைப் போலவே இந்தத் தட்டும் அவனை விட்டுப் பிரிந்து ஒரு பெரிய பெட்டி போன்ற சிறிய இருட்டுப் பகுதி வழியே ஆய்வு செய்யப்பட்டு வெளியே போய் ஏற்கனவே இருந்த மற்ற தட்டுகளைத் தட்டி நின்றது. சென்னையைப் போல் இங்கு ஆய்வு செய்ய அதிகாரிகள் இல்லை. ஓர் ஆளுயர வாசக்கால் போன்ற யந்திரத்தைத் தாண்டிச் சென்றான். அஃது எந்தச் சப்தத்தையும் எழுப்பவில்லை. நேரம் மிகக் குறைவாக இருந்ததால் அவசர அவசரமாக ஆய்வுத் தட்டில் எடுத்த பொருள்களை எடுத்துக்கொண்டு B40 என்று விமானப் பயணச்சீட்டில் குறிப்பிட்ட வாயிலுக்கு ஓடினான். விமானப் பணிப்பெண் முகம் வடிவு மாறி இருந்தது. இப்போது அவள் வெள்ளைக்காரியாக இருந்தாலும் இரு கரம் கூப்பி வரவேற்றது அவனுக்குப் பிடித்திருந்தது.

A10 என்கின்ற அவனது இருக்கையை அடைந்து உட்கார்ந்தவுடன்தான் நிம்மதிப் பெருமூச்சு வந்தது. கைகளில் இருந்த கைக்குட்டை முற்றும் தண்ணீரில் முக்கியது போல் ஈரமாய் இருந்தது. அவன் பலமுறை துடைத்து வியர்வை நிற்பதாக இல்லை. இதயம் படபடத்துக் கொண்டிருந்தது. அப்பா அம்மாவிடம் பேசினால் நன்றாய் இருக்கும், கொஞ்சம் அமைதி பெறலாம் என்று கைபேசியை எடுக்க முயன்றான். ஆனால் எங்கும் அது சிக்கவில்லை. இருக்கையில் இருந்து எழுந்து தேடினான். அப்போதும் கிடைக்கவில்லை. கடைசியாக எப்போது பார்த்தோம் என்று நினைத்தபோது, ஆய்வுக்காக எல்லாப் பொருட்களுடன் ஆய்வுத் தட்டில் வைத்தது ஞாபகம் வந்தது. விமானம் புறப்பட இன்னும் அரைமணி நேரம் இருந்தது, கைபேசியில்தான் எல்லோருடைய எண்ணும் இருந்தது. கைபேசி இல்லாமல் யாரையும் தொடர்பு கொள்ள முடியாது. எந்தத் தொடர்பு எண்ணையும் அவன் நினைவில் பதிந்துகொள்ளவில்லை. இருப்புக் கொள்ளவில்லை. எப்படியும் போய் எடுத்து வந்துவிடுவது என்கின்ற முடிவில் விமானப் பணிப்பெண்ணிடம் விடயத்தைச் சொன்னான். உடனே வந்து விடுவதாகச் சொல்லிக் காற்றாய்ப் பறந்தான். திரைப்படங்களில் வரும் இறுதிக் காட்சியை ஒத்திருந்தது அவனது வேகம். ஆய்வு செய்யும் இடத்தில் இருந்த அதிகாரியிடம் நடந்ததை ஒப்புவித்தான். ஒரு நிமிடம் இருங்கள் என்றவர் அவனுடைய சோனி எரிக்சன் கைபேசியைக் கொண்டு வந்தார்.

"நீங்கள் இருக்கும் புகைப்படம் இந்தக் கைபேசியில் இருக்கிறதா" என்றார். நிறையப் புகைப்படம் எடுத்திருக்கிறேன் நிச்சயம் இருக்கும் என்கின்ற நம்பிக்கையில் அவன், "இருக்கிறது, பாருங்கள்" என்றான் கொஞ்சம் அவநம்பிக்கைக் குரலில்.

ஓரிரு புகைப்படங்களை இடப்பக்கம் தள்ளியதும் அவன் குடும்பத்தோடு இருக்கும் புகைப்படம் வந்தது. எதற்கோ புன்னகைத்த அந்த அதிகாரி அவனிடம் கைபேசியை ஒப்படைத்தார். மீண்டும் சிட்டாய்ப் பறந்தான். விமானம் இப்போது நிரம்பி வழிந்தது. தன் இருக்கைக்குப் பக்கத்தில் ஓர் இளம்பெண் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் இப்படியே போய் வியர்க்க விறுவிறுக்க அமர்ந்தால் நன்றாய் இருக்காது என்று விமானக் கழிப்பறையில் நுழைந்து முடிந்த அளவு பதட்டத்தைக் குறைத்தான். ஆனாலும் அவனுக்கு வியர்த்து விறுவிறுத்தது.

வேறு வழியின்றி இருக்கைக்கு வந்தவன் பக்கத்து இருக்கை இளம்பெண்ணுக்குப் புன்னகை ஒன்றைத் தந்துவிட்டுக் கண்களை மூடி அமைதியைத் தேடினான்.

விமானம் பத்து நிமிடங்கள் பேருந்து போல் குலுங்கிக் குலுக்கி விமான நிலையச் சாலைகளில் நகர்ந்தது. அதிலிருந்து ஐந்து நிமிடத்தில் மும்பாய் நகரத்தை ஒரு வட்டமடித்துப் பிரிசுபேன் நோக்கி வான்வெளியில் தனது நீண்ட பயணத்தைத் தொடங்கியது. குடிப்பதில் அதிக ஆர்வம் அன்று இல்லையென்றாலும் பெயர் தெரியாத ஓர் ஒயினைக் கேட்டு வாங்கி அருந்தினான். ஏற்கனவே இருந்த தலைவலி கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்தது. தூங்க எவ்வளவு முயன்றாலும் அடுத்தடுத்து வந்த உணவு மற்றும் விமானப் பணிப்பெண்களின் அறிவிப்புகள் அவனைத் தூங்க விடவில்லை. விமானத்தில் கொடுத்த உணவு மற்றும் ஒயின் கொடுத்த தலைவலி, உறக்கமின்மை என்று பல வலிகளை வழி முழுதும் அனுபவித்துப் பிரிசுபேன் விமானநிலையம் வந்து சேர்ந்தான்.

பிரிசுபேன் விமானநிலையத்தின் அதிநவீனக் கழிப்பறையில் இருந்த பிரமாண்ட கண்ணாடியில் அவனைப் பார்த்தபோது சிரிப்பதா அழுவதா என்று அவனுக்குத் தோன்றவில்லை. ஒரு வெளிநாட்டுப் பயணம் எப்படி அமைந்திருக்க வேண்டும், இப்படி நோய்வாய்ப்பட்டவன் போல் தெளிவு இன்றி இருக்கிறோமே என்று வருந்தினான். தலைசுற்றுவது போல் இருந்தது. விமானத்தில் அருந்திய ஒயினும் சாப்பாடும் மொத்தமாக வயிறு வெளியே தள்ளியது. வாய் கொப்பளித்து முகத்தை நன்றாகக் கழுவினான். கொஞ்சம் தெளிவாய் இருந்தது. கழிவறையில் இருந்து வெளியே வந்தபோதுதான் அந்த விமானநிலையத்தில் இருந்த வேலைப்பாடான விடயங்கள் அவன் கண்களைக் கவர ஆரம்பித்ததன. மினுமினுத்த கண்ணாடி விளக்குகளும் நடையோரமாய் இருந்த கடைகளும் அந்நாட்டின் செல்வச் செழிப்பைப் பறைசாற்றின. அழகு தேவதைகளாகப் பல நாட்டுப் பெண்கள் அவன் கண்களைக் குளிர்வித்தனர். அவன் நடந்து வந்துகொண்டிருந்த பாதையில் இருந்த ஒரு கடையில் முதல் முறையாக அந்த நாட்டுப் பணத்தைக் கொண்டு ஒரு கோக் வாங்கினான். ஒரு சல்லி பைசா குறையாமல் சில்லறையோடு மீதிப் பணத்தைப் பெற்றது அவனுக்கு மிக ஆச்சர்யமாகிப் போனது. கான்பரா விமானத்தைப் பிடிக்க நிறைய நேரம் இருக்கிறது. இனி எதற்கும் பதட்டமடையக் கூடாது என்று முடிவெடுத்தான். கோட்டில் கைகளை நுழைத்துக் கான்பரா செல்லும் விமானத்தின் தகவலை அங்கே இருந்த பெரிய அளவு தொலைக்காட்சியில் பார்த்தான். அவன் செல்ல வேண்டிய விமானத்தின் வாயில் *K5* என்றும் சரியாக ஒரு மணிநேரத்தில் அது புறப்படும் என்றும் தெரிந்துகொண்டான். அவன் கையில் வைத்திருந்த விமானச் சீட்டும் வாயில் *K5* என்பதை உறுதி செய்தது. மிக மெதுவாக அந்த விமான நிலையத்தின் அழகை ரசித்துக்கொண்டே அந்த வாயிலை அடைந்தான். அங்கு அதிகக் கூட்டம் இல்லை. இந்த முறை மிக ஒய்யாரமாக அங்கே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தான். கைகளில் நளினமாகப் பிடித்திருந்த கோக்கை ஒரு மிடறு குடித்தான். ஏதோ பெரியதொரு காரியத்தைச் செய்து முடித்தது போல் சுற்றி முற்றிப் பார்த்தான்.

ஆத்திரேலியாவில் இருக்கின்றோம் என்கின்ற நினைப்பே அவன் மனதில் ஆனந்தத்தைக் கூட்டியது. கான்பரா செல்லும் விமானத்தில் ஏதோ விமானப்பயணம் எல்லாம் எனக்குச் சர்வசாதாரணம் என்பது போல் ஏறித் தன் இருக்கையில் அமர்ந்தான். விமானம் மிகக் குறுகிய நேரத்தில் வானத்தில் பறக்க ஆரம்பித்தது. தூரத்தில் பக்கத்தில் பறந்துகொண்டிருந்த விமானத்தின் வால்பகுதியில் தெரிந்த கங்காரு இலச்சினை மும்பாயில் அவனை விட்டுப் பிரிந்த பெட்டியினை ஞாபகப்படுத்தியது.

“ஆமாம் பெட்டிகளை அடையாளப்படுத்த மும்பாயில் ஒரு துண்டுச் சீட்டுக் கொடுத்தார்களே, அஃது எங்கே?” கைகள் தேட ஆரம்பிக்க விமானம் கான்பரா நகரை நோக்கிப் பறக்க ஆரம்பித்தது.

■

கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

ஊர்மிளை

இராமாயணம்...
இது
வால்மீகி எழுதிய -
காவியம்
தியாக சீலர்களைக்
கொண்டே
தீட்டப்பட்ட -
ஓவியம்...

மனையாள் கேட்ட
வரத்திற்காக
மகனையே
காட்டுக்கு அனுப்பிவிட்டு
மருகி உருகி
உயிர்நீத்த
மாமன்னன்
செய்தது -
தியாகம்

அப்பனுக்குப் பிறகு
அரசாளும் உரிமை
தனக்குத்தான்
என்று
தர்க்கம் செய்யாமல்
அரசாணையை மதித்து
ஆரண்யம் புகுந்த
இராமன் செய்தது -
தியாகம்

கணவனிருக்கும்
இடமே
அயோத்தியென்று
கட்டிய துணியோடு
கானகம் புகுந்த
சீதை செய்தது –
தியாகம்..

என்ன ஏது
என்று கூட
கேட்காமல்
இளம் மனைவியை
விட்டு விட்டு
அண்ணனுக்குத்
துணையாக
ஆரண்யம் புகுந்த
இலக்குவன் செய்தது
தியாகம்...

அண்ணன் வந்து
அமரும் வரை
அரியாசனத்தில்
அமருகின்ற
எண்ணம் கூட
எழக்கூடாதென்று
அண்ணனின்
பாதுகைகளை வைத்தே
அரசாண்ட
பரதன் செய்தது –
தியாகம்

உடன்பிறந்தவளின்
கண்ணீருக்கு
நீதி கேட்டு
சீதையைக் கவர்ந்து
வந்து
சிறைவைத்தாலும்
அரக்கர் குலத்தில்
அவதரித்திருந்தாலும்

அவளது அனுமதிக்காக
காத்திருந்த
இலங்கைவேந்தன்
செய்ததும் –
தியாகம்தான்....

அறம் வழுவாமல்
இலங்கையை ஆண்டவன்
இப்படி
தரம்தாழ்ந்து போனானே
என்று
தாம்பத்திய சுகம் தேடி
வரும்போதெல்லாம்
இராவணனைத்
தவிர்த்தாளாம்
மண்டோதரி
அரக்கர் குலத்தில்
அவதரித்திருந்தாலும்
தமிழச்சி அல்லவா? –
தன்மானம் இருந்திருக்கும்

அடுத்தவன்
மனையாளைத்
தீண்ட நினைப்பது
ஆகப்பெரிய பாவமென்று
இராவணனை அன்றாடம்
தடுத்து நிறுத்தினாளே
மண்டோதரி
அவள் செய்ததும் –
தியாகமே...

அண்ணன் செய்தது
தவறுதானென்று
அரசசபையில்
வாதிட்டாலும்
அண்ணனுக்காகப்
படைதிரட்டிச்சென்று
இராமனை எதிர்த்து
தொடைதட்டி நின்று

உயிர்துறந்த
தம்பிகள் செய்ததும் –
தியாகமே...

கடுந்தவம் புரியும்
கானகத்து
முனிவர்களைப்போல
நெடுந்தவம் கிடந்த
ஊர்மிளையின்
தியாகத்தை
எதனோடும்
ஒப்பிட முடியவில்லை
அவள்
அரண்மனைச்
சிறைக்குள்ளேயே
ஆயுளைக் –
கழித்தவள்
அணிமணிகள்–
ஒழித்தவள்
நீண்ட கூந்தலை –
மழித்தவள்
ஆசாபாசங்களைப் –
பழித்தவள்
சுகதுக்கங்களற்ற
இகவாழ்வில் –
செழித்தவள்

இராமனைக்காட்டிலும்
சீதையைக்காட்டிலும்
இராமாயணத்துக்
கதைமாந்தர்களைக்
காட்டிலும்
இவள்
செய்த தியாகம்
சில விழுக்காடு –
அதிகம்
அதைத்தான் பாடினேன்
இவளுக்காக ஒரு –
பதிகம்

– முற்றும் ■

● மு.முருகேஷ்



கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

பள்ளிக்கூட நாட்களிலேயே பொதுக்கூட்டங்களுக்குச் செல்வதும், இலக்கிய நிகழ்வுகளுக்குச் செல்வதும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணம் கோவில்பட்டி சாலையிலுள்ள எனது வீட்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திலகர் திடலானாலும், நான்கு கிலோ மீட்டர் தூரமுள்ள நகர்மன்றமானாலும், ஆறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காந்தி திடலானாலும், உசிலங்குளமானாலும் நடந்தே சென்றுவிடுவேன். நான் மட்டும் செல்லாமல் எப்போதும் நண்பர்கள் சிலரையும் கூடவே அழைத்துச் செல்வேன். யாரும் உடன் வராத போதும், தயங்காமல் நான் மட்டுமே கிளம்பிச் சென்றுவிடுவேன்.

கூட்டங்களுக்குச் செல்கிற உற்சாக மனநிலையில் போகும்போது எதுவும் தெரியாது. கூட்டம் முடிந்து நள்ளிரவு நேரங்களில் தனியாகத் திரும்பும்போதுதான் மனம் 'திக்... திக்' என்று அடித்துக்கொள்ளும். பாதி தூரம் தெருவிளக்குகளே இருக்காது. கருக்கிருட்டில் எதிரே வருபவர் யாரெனத் தெரியாமல் ஓட்டமும் நடையுமாக வீடு வந்து சேர்வேன். இந்த அனுபவங்கள் ஒவ்வொன்றும் ஒரு தனி சுகமானவை.

நகர்மன்றத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டமொன்றிற்குச் சென்றிருந்தேன். கிராமியப்

பாடல்களோடு கூட்டம் தொடங்கியிருந்தது. வாசலில் நின்றிருந்த என்னைச் சட்டென உள்ளிழுத்தன அந்த வார்த்தைகள்.

‘மனுசங்கடா... நாங்க மனுசங்கடா...’ ஒரு கணமும் தாமதிக்காமல் அரங்கிற்குள் ஓடினேன். பாடகர் ஒருவர் பாடிக்கொண்டிருந்தார்.

‘மனுசங்கடா... நாங்க மனுசங்கடா...

ஒன்னைப்போல அவனைப்போல

எட்டு சாணு ஒசரமுள்ள

மனுசங்கடா... - டேய்... மனுசங்கடா!’

அதிலும் அந்த ‘டேய்...’ என்பதைச் சற்றே அழுத்தமாக உச்சரித்துப் பாடினார். வேறெந்த உணர்வுகளுமற்று அப்படியே பாடல் வரிகளுக்குள் நானும் பயணிக்கத் தொடங்கினேன்.

‘மனுசங்கடா...’ எனும் அந்த வார்த்தையே முதலில் எனக்கு மிகுந்த மன நெருக்கத்தைத் தந்தது. மனிதர், மானிடர், மானுடம், மக்கள்... இப்படியான வார்த்தைகளை மட்டுமே அறிந்தும், புழங்கியும் வந்த எனக்குள் அந்த ‘மனுசங்க’ எனும் வார்த்தை என்னவோ செய்தது.

‘சதையும் எலும்பும் நீங்க வச்ச தீயில்
வேகுதே – ஒங்க

சர்க்காரும் கோர்ட்டும் அதிலே எண்ணெ
ஊத்துதே

எதைஎதையோ சலுகையினு
அறிவிக்கிறீங்க – நாங்க

எரியும்போது எவன் மசுரைப் புடுங்கப்
போறீங்க?’

பாடலில் இடம்பெற்ற இந்த வரிகள், எனக்குள் நெருப்பெனக் கனன்றன. சில வரிகளில் அப்படியே மனம் கசிந்து அழுதேன். பாடல் முடியும்போது நான் நானாக இல்லை. அந்தப் பாடல் எனக்குள் வினை புரியத் தொடங்கியது.

இதை எழுதிய கவிஞன் யாராயிருக்கும்..? எனது தொடர் தேடலுக்குப் பதில் கிடைத்தது. கவிஞர் இன்குலாப். பாரதியின் கவிதை வரிகள் எனக்குள் ஏற்படுத்திய தாக்கத்திற்குச் சற்றும் குறையாமல், இன்குலாப்பின் இந்தப் பாடலும் என்னை ஆட்கொண்டது.

இன்குலாப்பின் கவிதை நூல் கிடைக்குமா எனப் பலரிடமும் கேட்டேன். நூலகத்தில் தேடியும் பயனில்லை. பழைய புத்தகக் கடையொன்றில் என் கைக்கு அகப்பட்டது ‘இன்குலாப் கவிதைகள்’ எனும் 96 பக்கங்கள் கொண்ட நூல். அள்ளியணைத்துக் கொண்டேன். அக்டோபர் 1972இல் கார்க்கி வெளியீடாக வந்த நூலின் விலை ரூ.1.50. ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டேன். இன்னமும் என் நூல் சேகரிப்பில் மிகவும் பத்திரமாக உள்ளது. இந்த நூலில் கவிஞர் இளவேனில் எழுதியிருக்கும்



‘மகரந்தங்களிலிருந்தும் துப்பாக்கி ரவைகள்...’ எனும் 12 பக்க அளவிலான முன்னுரை என்னை ரொம்பவே ஈர்த்தது. எது கவிதை, எவன் கவிஞன் என்கிற புரிதலோடு, இன்குலாப் பற்றிய புரிதலுக்கும் அந்த முன்னுரை வழி திறந்தது.

‘மக்களை அரவணைப்பது, எதிரிகளை நிர்மூலமாக்குவது; என்கிற இலட்சிய ஆகுதியில் – ஒரு தாயின் பரிவுடனும், ஒரு போர்வீரனின் கோபாவேசத்துடனும், பாட்டாளி வர்க்க ஜனநாயக – சர்வாதிகாரம் என்கிற திமிருடன் எழுந்துள்ள ஒரு கவிஞனின் நெஞ்சில், பூவாய், தீயாய், மலர்ந்தும், தகித்தும் கொண்டிருக்கிற உணர்ச்சிகளின் தொகுப்பை, ‘இன்குலாப் கவிதைகள்’ என்கிற பெயரில் உங்கள் முன்னே பெருமிதத்துடன் வைக்கிறோம்’ (பக்கம் : 3) என்று எழுதியிருந்தார் இளவேனில்.

‘இலக்கியத்தில் பிரச்சாரம்’ எனும் குரல் அப்போது சற்றே உரத்து ஒலித்துக்கொண்டிருந்தது. அதற்கான பதிலையும் இளவேனில் தந்திருந்தார்.

‘ஒவ்வொரு இலக்கியமும், ஒவ்வொரு கலையும் போராட்டச் சாதனம்தான்; பிரச்சாரப் பணிதான். அஜந்தா ஓவியங்கள் பௌத்த சமயத்தைப் பிரச்சாரம் செய்கின்றனவே அதுபோல, எல்லோரா ஓவியங்கள் இந்து சமயத்தைப் பிரச்சாரம் செய்கின்றனவே அதுபோல, இனிய வாழ்க்கையை, மனித சுதந்திரத்தை, சுதந்திரத்துக்கான போர்க்குணத்தை, நாங்களும் பிரச்சாரம் செய்கிறோம்! வாழ்க்கை என்பது சுவாசத் துடிப்பில்லை; சுதந்திரமில்லாமல் வாழ்க்கையில்லை; போராட்டமில்லாமல் சுதந்திரமில்லை!’ என்று இளவேனில் எழுதியிருந்தது, எனது பல குழப்பங்களுக்குச் சரியான பதிலாக இருந்தது.

‘இன்குலாப் கவிதைகள்’ தொகுப்பை முழுவதுமாகப் படித்து முடித்ததும், ஆகா... இவரல்லவா நம் கவிஞர், இத்தனை நாளாகத் தெரியாமல் இருந்துவிட்டோமே என்கிற வருத்தம் சூழ்ந்துகொண்டது. இன்குலாப் போகிற பாதையே மானுட விடுதலைக்கான சரியான பாதை என்பதை அறிந்து தெளிந்தேன். அவர் வழியே நானும் நடக்கத் தொடங்கினேன்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழக்கரையில் 1944ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் நாள் பிறந்த இன்குலாப்பின் இயற்பெயர் செ.கா.சீ.சாகுல் அமீது. சீனி முகமது – ஆயிசா அம்மாள் இவரது பெற்றோர். பதினொன்றாம் வகுப்பு வரை கீழக்கரை அரசினர் அமீதியா உயர்நிலைப் பள்ளியில் படித்தவர், சிவகங்கை மன்னர் துரை சிங்கம் நினைவுக் கல்லூரியில் புதுமுக வகுப்பில் சேர்ந்தார். அங்கு கவிஞர் மீராவுடன் ஏற்பட்ட நட்பு, இன்குலாப்பின் கவிதைப் பயணத்தைத் தொடங்கி வைத்தது. மதுரை தியாகராசர் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் படித்தார்.

கவிஞர்கள் நா.காமராசன், மு.மேத்தா ஆகியோரோடு கவிதை குறித்து கலந்துரையாடினார். இவரது வகுப்புத் தோழர்களான கவிஞர் சூரியதீபன் (எழுத்தாளர் பா.செயப்பிரகாசம்), மேனாள் சபாநாயகர் கா.காளிமுத்து ஆகியோருடன் சேர்ந்து 1965இல் தமிழகத்தில் புது பிரளயத்தை உண்டாக்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் களம் புகுந்தார். காவல் துறையின் தடியடிகளோடு, சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டார்.

கவிஞர் ஈரோடு தமிழன்பனுடன் சேர்ந்து

சென்னை புதுக்கல்லூரியில் 33 ஆண்டுகாலம் பேராசிரியராகப் பணியாற்றி, கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

தொடக்கக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளராகச் செயல்பட்டு வந்தார் இன்குலாப். 1968 டிசம்பர் 25 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கீழ்வெண்மணி எனும் கிராமத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இன்குலாப்பை மார்க்சிய சிந்தனையாளராக மாற்றியது. கூலி உயர்வு கேட்டும், சங்கம் வைக்கும் உரிமைக் கேட்டும் போராடிய தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 44 பேர், ஒரு குடிசை வீட்டிற்குள் வைத்து, தீ வைத்து எரிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் கவிஞரின் மனதைப் பெரிதும் பாதித்தது.

பொதுவுடைமை இயக்கச் சிந்தனையாளராக மாறிய கவிஞர் இன்குலாப், மார்க்சிய – லெனினிய புரட்சிகர இயக்கத்திலும், பின்னர் மார்க்சிய – லெனினிய அடிப்படையில் இயங்கிய தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்திலும் ஆர்வத்துடன் செயலாற்றினார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட கவிஞர், விடுதலைப் புலிகளின் தலைவரான வே.பிரபாகரனைச் சந்தித்தார்.

இன்குலாப் தனது ஆரம்ப நாட்களில் இளவேனில் நடத்திவந்த ‘கார்க்கி’ இதழில் பல கவிதைகளை எழுதினார். பின்னர் தராசு, நக்கீரன், இனி, நாற்காலி, உண்மை, உங்கள் விசிட்டர் போன்ற இதழ்களில் ஏராளமான கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதினார். முதலாளித்துவ இதழ்களுக்கு எழுதுவதில்லை என்பதை வாழ்நாள் கொள்கைகளுள் ஒன்றாகக் கடைப்பிடித்தார்.

முதல் கவிதை நூல் வெளிவந்த 5 ஆண்டுகள் கழித்தே, 1977இல் இரண்டாவது கவிதை நூல் ‘வெள்ளை இருட்டு’ வெளிவந்தது. சூரியனைச் சுமப்பவர்கள் (1981), கிழக்கும் பின்தொடரும் (1985), கூக்குரல் (1994), இன்குலாப் கவிதைகள் – தொகுதி இரண்டு வெளிவந்தன. முந்தைய கவிதை நூல்களோடு புதிய கவிதைகளும் அடங்கிய மொத்தத் தொகுப்பான ‘ஒவ்வொரு புல்லையும்...’ 1999 டிசம்பரில் வெளியானது. பொன்னிக்குருவி (2007), காந்தள் நாட்கள் (2016), ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன் (2017) ஆகிய கவிதை நூல்களையும், பாலையில் ஒரு சுனை எனும் சிறுகதை நூலையும், யுகாக்கினி, ஆனால்... எனும் இரு கட்டுரை நூல்களையும், ஔவை, மணிமேகலை, குரல்கள் உள்ளிட்ட நாடக நூல்களையும், மார்க்சிய ஆய்வறிஞர் எஸ்.வி.ராஜதுரையுடன் இணைந்து மார்க்சு முதல் மாசேதுங் வரை எனும் மொழிபெயர்ப்பு நூலினையும் வெளிக்கொண்டு வந்துள்ளார். இவை மட்டுமின்றி, அகிம்சையின் குரலை ஆதிக்கவாதிகள் கேட்பதில்லை, மானுடக் குரல் எனும் இன்குலாப்பின் நேர்காணல்கள் அடங்கிய இரு நூல்களும் வெளிவந்துள்ளன.

இன்குலாப்பின் எழுத்துக்கள் ஒருபோதும் கற்பனையில் கருக்கொண்டவையல்ல; அவை, மனித வாழ்வில் விளைந்த அனுபவத்தின் சாறு பிழிவு. உழைப்பில் நெகிழ்ந்த வியர்வையின் மணமும், போராட்டக் களத்தின் உக்கிரமும்,

அடக்குமுறைகளுக்கு எதிராக மீண்டெழும் பாட்டாளி வர்க்கத்தின் சங்க நாதமுமே இன்குலாப்பின் எழுத்துக்களாக வலம் வந்தன.

'நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளோடும்' தன் படைப்புகளைத் தந்த பேரறிவாளரான கவிஞர் இன்குலாப்பின் ஒவ்வொரு எழுத்துக்களும், அதிகாரத்திற்கு எதிராகவும், போராடும் ஏழை-எளியோர்க்கு ஆதரவாகவுமே உயர்ந்தெழுந்தன.



'பாலைவனத்தின் சோலைகளே ஒரு

பாடகன் வருகின்றான் அவன்

பயணக் களைப்புக்கு நிழல்கொடுத்தால்

ஒரு பாடல் தருகின்றான்!'

- என்றெழுதிய இன்குலாப்பின் பல எழுச்சிமிக்க பாடல்கள், முற்போக்கு இலக்கிய மேடைகளில் பல காலமாக முழங்கிவருகின்றன.

கவிஞர் இன்குலாப், இந்தியாவிலும் தமிழகத்திலும் நடைபெறும் போராட்டங்களை எழுதியதோடு நின்றுவிடாமல், உலகின் எந்த மூலையில் நடைபெற்ற ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தையும் தன் கவிதைகளில் பதிவுசெய்யத் தவறியதேயில்லை. மானுட அன்பினைத் தன் இதயத்தில் அடைகாக்கும் பெருங்கவியாக விளங்கினார். சோசலிய நாடுகளின் பெருமைகளையும், சிறப்பினையும் தனது கவிதைகளின்வழி கொண்டாடினார்.

1974இல் குஜராத் மாநிலத்தின் விலைவாசி உயர்வுக்கு எதிராகப் பெண்கள் நடத்திய போராட்டத்தை 'போர்பந்தரிலிருந்து...' எனும் கவிதையிலும், 1992இல் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் பத்மினி பாலியல் வல்லுறவுக்கு ஆளானபோது கொதித்தெழுதிய 'உன் கூண்டுகள்' கவிதையிலும் அவற்றை வெளியுலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர் கவிஞர் இன்குலாப்.

கவிஞரெழுதிய கவிதை ஒன்றின் விசாரணைக்காக சென்னை மாநகரக் காவல் துறை நள்ளிரவினில் கவிஞரைக் கைது செய்ததையும் 'நள்ளிரவு அழைப்பு' எனும் கவிதையாக்கினார். எதற்கும் பயங்கொள்ளவில்லை. எழுதுவதை நிறுத்தவுமில்லை.

கவிஞர் இன்குலாப் எழுதிய பல கவிதைகள் ஏதோவொரு நிகழ்காலச் சம்பவத்தின் பதிவாக இருப்பதனால், எல்லாக் கவிதைகளிலும் ஒரு உண்மைக் கதை ஊடாடிக் கிடக்கிறது. கண்மணி ராஜம், சேரிக்குமரி ஒரு விடுகதை போடுகிறாள், நீங்கள் என்னைக் கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள், கடலில் பெரிய

நீச்சலோட்டம் உள்ளிட்ட பல கவிதைகளைச் சான்றாகச் சொல்லலாம்.

அதிலும் குறிப்பாக, அரியலூருக்கு அருகேயுள்ள குளப்பாடி எனும் கிராமத்தில் மிராசுதாரின் கிணற்றில் குளிக்கப்போன தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நான்கு குழந்தைகள் மீதும் தண்ணீரில் மின்சாரம் பாய்ச்சிக் கொன்றனர். தமிழ்ச் சமூகத்தில் எந்த அதிர்வையும் எழுப்பாமல் அமுங்கிப்போன இந்தச் சமூகக் கொடுமையைச் சாடி, 'அந்தப் பம்பு செட்டை ரிப்பேர் செய்துவிட்டார்களாம்...' எனும் கவிதையை எழுதினார் இன்குலாப். இப்போது படிக்கையிலும் நம் நெஞ்சை அதிர வைக்கும், நரம்புகளை முறுக்கேற வைக்கும் கதைக் கவிதையிது;

'அப்பன் தோண்டுன கெணறு

அரச மரத்துக்குப் பக்கத்திலே

மாமன் தோண்டுன கெணறு

வளந்த தென்னைக்குப் பக்கத்திலே.

தளும்புது தளும்புது தண்ணீரு

தப்படிப்போம் வாடா பன்னீரு...'

- எனும் குழந்தைகளுக்கான குதூகலத்துடன் தொடங்கும் கவிதை, அடுத்தடுத்த வரிகளில் வேகமெடுக்கிறது.

'பறப்பசங்களா...

சேத்துல புரளுற

சேரிப் பசங்களுக்குக்

கிணத்துத் தண்ணியா

குளிக்கக் கேக்குது...'

- எனும் அபசுரக் குரல் கேட்டு, கோவணக் குழந்தைகள் திகைக்கின்றனர். 'ஆத்தா...' எனும் பேரவலக் குரல்கள் ஒலிக்க, மின்சார வலையில் சேரிச் சிட்டுகள் பொசுங்கிப் போயின. மீண்டும் குழந்தைகளின் பாடலோடு க(வி)தை முடிகையில், நம் கண்கள் நீரால் தளும்புகின்றன.

ஈழத் தமிழர்களைக் காக்க தமிழக அரசு தவறியதைக் கண்டித்து, 2006ஆம் ஆண்டு வழங்கிய கலைமாமணி விருதினைத் திருப்பியளித்தார் இன்குலாப். 2017ஆம் ஆண்டு 'காந்தள் நாட்கள்' நூலுக்காக மத்திய அரசின் சாகித்திய அகாதெமி விருதினை அறிவித்தபோது, கவிஞரது குடும்பத்தினர் அதனை வேண்டாமென ஏற்க மறுத்தனர்.



உடல்நலக் குறைவேற்பட்டு, 2016 டிசம்பர் 1 அன்று மரணத்தைத் தழுவிய கவிஞர் இன்குலாப்பின் உடல், செங்கற்பட்டு அரசு மருத்துவக் கல்லூரிக்குக் கொடையாக வழங்கப்பட்டது. 'இன்குலாப்' எனும் சொல்லுக்குப் 'புரட்சி' என்று பொருள். புரட்சி நடக்கும்வரை கவிதைகள் இருக்கும். கவிதைகள் இருக்கும்வரை இன்குலாப்பும் இருப்பார். இன்குலாப் ஜிந்தாபாத்! ஜிந்தாபாத் இன்குலாப்!!

- இன்னும் சொல்வேன் ■

● மௌனன் யாத்ரிகா

கற்பதுவே.. கேட்பதுவே..!

வேல்கண்ணன்

தற்போது உருவாகியுள்ள உரையாடல் களங்கள் கவிதையை அடுத்த பரிமாணத்துக்கு நகர்த்தும் என்று நம்பலாமா?

கண்டிப்பாக. இதற்கு நான், என்னையே உதாரணமாக எடுத்துக்கொள்வேன். என்னுடைய முதல் தொகுப்புக்கும் இரண்டாம் தொகுப்புக்கும் இடையே நடந்த (இன்னமும் நிகழ்ந்துகொண்டிருக்கும்) கவிதை குறித்த தேடலும் உரையாடலுமே கவிதை மீதான கருத்தியலை மேம்படுத்தியது என்று சொல்வேன். தமிழில் ஒவ்வொரு காலகட்டத்திலும் இது நடந்து இருக்கிறது. நடக்கும். ஆனால் பல உரையாடல்கள் தனிமனிதத் தாக்குதலுக்கு ஆட்பட்டுச் சின்னாபின்னமாக மாறுவதை நான் பார்த்திருக்கிறேன். அவ்வண்ணம் நிகழாதவரை கவிதை குறித்த உரையாடல்கள் அடுத்த பரிமாணத்துக்குக் கவிதையின் போக்கினை நகர்த்தும் என்று நம்புகிறேன்.

மொழிதலில் இறுக்கத்தைக் கூட்டியிருக்கும் கவிதைகளைக் கொண்டாடும் போக்கு ஒருபுறம் இருக்க, ஒன்றையும் புரிந்துகொள்ள முடியாத பிரதி என்பதாகக் கருதும் போக்கும் மறுபுறம் உள்ளது. இதைக் குறித்த உங்கள் பார்வை என்ன?

இது காலங்காலமாய்க் கேட்கப்படும் கேள்வி. காலங்காலமாய்ச் சொல்லப்பட்ட பதிலிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது, வாசகனின் வாசிப்பின் தன்மையைப் பொறுத்து அமைகிறது புரிதலும் புரிதலின்மையும். இங்கே மறுபடியும் என்னையே உதாரணம் எடுத்துக்கொள்கிறேன். பிரமிளின் ‘இறகொன்று’ கவிதையை ‘இதெல்லாம் கவிதையா?’ என்றவன், பின் அதனின் மகத்துவத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. இதில் கேள்விக்கும் புரிதலுக்கும் இடையில் என்னுடைய கவிதை குறித்த பயணத்தை முக்கியமாகக் கருதுகிறேன். இதோ சமீபத்தில் வாசித்த கவிஞர் நேசமித்திரன் கவி வரிகள் இவை..

அலகில் துள்ளும் மீனுக்கு
ஒரு கண்ணில் ஆகாயம்

எளிமையாகத் தோற்றம் கொண்டிருந்தாலும் வலிமையான ஆழமான வெளிச்சங்களைத் தரக்கூடிய கவிதையிது. இப்பொழுது இந்தக் கவிதைக்குள் நான் பயணித்துக்கொண்டிருக்கிறேன். பிரமிளின் ‘இறகு’ கவிதைக்கு இணையான கவிதையிது என்று எண்ணுகிறேன்.

மேலும் நீங்கள் சொன்னதுபோல், மொழிதலில் இறுக்கத்தைக் கூட்டியிருக்கும் கவிதைகளைக் கொண்டாடும் போக்கு ஒருபுறம். இப்படி ஒரு போக்கு தமிழ் உலாவும் நல்லுலகில் எந்தப் புறத்திலும், எந்தக் காலத்திலும் இருந்ததே இல்லை. அப்படி ஒரு காலம் வரப்போவதுமில்லை.

படைப்பு நோக்கில் கவிதையை அணுகாமல் கவிஞனின் பிம்பத்தை முன்னிலைப்படுத்தி

அணுகப்படும் போக்கு கூடி இருப்பதாகக் கருத்துக்கள் உலவுகின்றன. இந்தக் கருத்தில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறது?

இதில் நீங்கள் குறிப்பிடும் கவிஞர் என்ற பிம்பம் குறித்த சில கேள்விகள் எழுகின்றன. நல்ல கவிதைகள் அல்லது நல்ல கவிதைத் தொகுப்பு (இதில் 'நல்ல' என்பது அவரவர்க்குப் 'பிடித்தமான') ஒருவருக்குக் கவிஞர் என்ற பிம்பத்தைத் தருமானால் தவறொன்றும் இல்லையே. அப்படியே அவர் அடைந்த பிம்பத்தை அடுத்தடுத்த கவிதைகளில் தொகுப்புகளில் தக்கவைத்துக் கொள்வது அவரின்(கவிஞரின்) பொறுப்பாகும். 'இல்லையில்லை, அவர் அப்படி ஒரு கவிதை எழுதி இருக்கிறார். ஆகவே அவர் எழுதும் எல்லாமே கவிதையே' என்று சொல்வது யாருடைய தவறு? ஒருவேளை கவிஞர் தன் கவிதைக்காக எழுந்த பிம்பத்தைத் தனக்கான பிம்பமாக எடுத்துக்கொண்டால் ஒரு வரி கூட கவிதை எழுத முடியாது என்பதைக் காலம் பலமுறை அழுத்தமாகச் சொல்லிச் சென்றிருக்கிறது. இது கவிஞர்களுக்கு மட்டுமல்ல படைப்பாளர்கள் அனைவருக்குமே பொருந்தும்.

• •

ஆண்டன்பெனி

தற்காலக் கவிதைகள் பெரும்பாலும் மறுவாசிப்பைக் கோருபவை. மறுவாசிப்பு என்பதைப் புரிதலில் புதிய விளைவுகளை ஏற்படுத்துவதற்கான வழிமுறையாகக் கொள்ளலாமா?

அப்படிக் கொள்ளமுடியாது. அதன் படிமங்களின் மீதான ஈர்ப்பிலோ அல்லது மொழியின் நடையிலோ அல்லது உள்ளுணர்வைத் தீண்டிய மயக்கத்திலோ... மறுவாசிப்பு தேவைப்படுகிறது என்றால் மகிழ்ச்சியே. மாறாகக் கவிதையைப் புரிந்துகொள்ளவே நிறைய மறுவாசிப்பு அவசியமெனில், எத்தனை வாசிப்பு இருந்தாலென்ன? அதனைப் புறந்தள்ளிக் கடந்து போவதே சாலச்சிறந்தது.

கவிதைகளுக்குள் இருக்கும் அதன் ஆன்மாவைத் தேடித்தேடி மேற்கொள்ளப்படும் மறுவாசிப்பு என்பது மிகவும் அவசியமானது. கிறங்கடிக்கும் கவிதையொன்றிலிருந்து வாசித்து வாசித்துத்தானே வெளிவரமுடியும்? ஒரு படைப்பு வாசகனை அடையாளப்படுத்த வேண்டும் அல்லது வாசகன் அந்தப் படைப்பை அடையாளப்படுத்த வேண்டும், மாறாகத் தற்காலப் படைப்புகள் பெரும்பாலும் வாசகனை அந்நியப்படுத்துகின்றன அல்லது அலட்சியப்படுத்துகின்றன.

கவிதையின் படிமங்களோடே கவிஞனும் பயணம் செய்கிறான். தன்மீதான கவன ஈர்ப்புக்காகவே மறுவாசிப்பைக் கட்டாயப்படுத்துகிறான். அவனைத் தவிர்த்துவிட்டு அவனது எந்தக் கவிதையையும் அணுகமுடியவில்லை. எனினும் எதிலும் ஒட்டாத மறுவாசிப்பு ஒன்றிலிருந்து விலகிச் செல்லவே விரும்புகிறேன். அது என்னுடையதாக இருப்பினும்.

கவிதையில் அடையாளம் காணப்பட வேண்டிய முக்கியமான கூறுகள் எவை?

கவிதையைக் கூறுபோட விரும்பவில்லை நான். படிமம், குறியீடு, ஓசை, நயம், நடை எல்லாவற்றையும் தாண்டி, எனக்கு மொழியின் பயன்பாடே முக்கியம். மொழியின் பயன்பாட்டு வளர்ச்சியானது, அதன் இயல்பான பிற அடையாளங்களுக்குள் எளிதாகப் பயணப்பட வைக்கும். எந்தப் படைப்பாக இருந்தாலும் வாசிப்பு மட்டுமே அதற்கான நிரந்தர அடையாளமாக இருக்கமுடியும் என்று நம்புகிறேன்.

கவிதைக்கான சுய வாசகக் காலம் தொடங்கிவிட்டது. தற்காலத்தில் அதிகமானவர்கள் எழுதுகிறார்கள். அதில் பெரும்பாலும் சுய வாசகர்கள்தான். அதனாலென்ன? இருக்கட்டுமே. மொழியின் பயன்பாடு கூடியிருக்கிறது, அதுபோதும்.

மொழியின் பயன்பாடு கவிதையின் அடையாளங்களை வளப்படுத்தும். மொழியைப் பயன்படுத்துகிறவன் ஒருபோதும் அப்படியே அங்கேயே தங்கிவிடப்போவதில்லை, அடுத்தடுத்த கட்டத்திற்கு நகர்வான். அங்கே அவன் கவிதைகளின் பல்வேறு அடையாளங்களையும் காண்பான். அதனை இன்னும் வளப்படுத்துவான், கொண்டாடுவான். அதுவரையிலும் மொழியின் பயன்பாடும், அதன் வாசிப்புமே கவிதையின் அடையாளங்களாக இருந்துவிடட்டுமே.

சிறுகதையைச் சொல்லிப் பெரும் வாசகக் கூட்டத்தைச் சேர்க்க முடிவதைப்போல் கவிதைகளைப் பொதுவெளியில் சொன்னால் சேர்க்க முடியுமா?

முன்னமே சாத்தியமான ஒன்றுதானே அது. வானம்பாடிகள் தொடங்கி பல்வேறு அமைப்புகள் பல்வேறு காலகட்டத்தில் அதைச் சாத்தியமாக்கியிருந்தன. இசையும் பாடலும் சமமாகப் பயணித்த காலத்தில்கூட, கவிதைகளானது பாடல்கள் வழியாக வாசகக் கூட்டத்தைச் சேர்த்தன. வாசகக் கூட்டத்தைச் சேர்த்த கவியரங்கங்களும் கடைசிக் காலத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டன.

ஒலிக்கு இனிமையான கவிதை, ஒளிக்கு இனிமையான கவிதை என்ற இரண்டு வகையான கவிதைகளும் அதனதன் தொனியில் மனதைச் சேர்ந்தாலும், செவிக்கு இனிய கவிதைகளே பெரும் வாசகக் கூட்டத்தைச் சேர்த்தன. செவிக்கினிய கவிதையானது எல்லோருக்குமானதாக இருக்க வேண்டும். அவ்வாறான கவிதைகள் குறைந்துவிட்டன. தற்போது *தன்னுணர்வுக் கவிதை*களே அதிகமாக எழுதப்படுகின்றன. தன்னுணர்வுக் கவிதைகளுக்குத் தனி வாசிப்பே போதுமானது. அவை சுய சிலாகிப்பிலேயே மகிழ்ந்துவிடுகின்றன. தன்னுணர்வுக் கவிதைகள் பொது வெளியில் எதனையும் ஈர்க்காது.

ஒரு கவிதையில் எங்கோ ஓரிடத்தில் நாம் ஒளித்துவைத்திருக்கும் ஏதோ ஒரு அடையாளத்திற்காக, இப்பவும் பெருவெளியில் வாசகன் காத்திருக்கிறான். ஆனால் மறைத்துவைக்கப்பட்ட கவிதையின் அடையாளமானது வாசகனுக்கும் தெரியாமல் மறைந்தே அவனைக் கடந்து சென்றுவிடுகிறது.. வாசகன் ஏமாந்துவிடுகிறான். அவன் ஒரு நம்பிக்கையோடு இன்னமும் காத்திருக்கிறான்.

எல்லோருக்குமான கவிதையை நாம் எப்போது எழுதப்போகிறோம்?

இயற்கை

இயற்கையாகாமல் சுரேஷாகவே இருந்திருக்கலாமோ என்று எப்போதாவது நினைப்பதுண்டா?

வெகுவான சந்தர்ப்பங்களில் அங்கே சுரேஷாக என்னை வாழ்வித்துக்கொண்டிருக்கிறவன் இயற்கைதான். அதேநேரத்தில் இயற்கைக்குப் போதுமான உள்ளீடுகளை சுரேஷ் ஏற்கெனவே வாழ்ந்துவைத்திருக்கிறான். ஒருவன் இன்னொருவனாகப் பிறத்தல் என்பது வழக்கமான பிறத்தல் போல நிகழ்வதில்லை.

உந்தித் தள்ளுவதைச் சுமக்கிறவனே தீர்மானிக்கிறான். அப்படி அது நிகழ பல காரணிகள் அவனை ஆயத்தப்படுத்த வேண்டியிருக்கிறது. அந்த வகையில் சுரேஷ் இன்னும் சீக்கிரம் இயற்கை ஆகப் பிறந்திருக்கலாமோ என்று நினைத்ததுண்டு. சுரேஷைச் சற்று விலகி நின்று எந்தச் சமரசமுமின்றி விமர்சிக்க, எந்தத் தயக்கமும் இன்றித் தழுவி முத்தமிட இன்னொருவன் தேவையானபோது அவன் இயற்கையைப் பெற்றுக்கொண்டான். அந்த வகையில் இருவரும் சங்கிலிகள். இதில் யார் ஒருவராக மட்டும் நினைத்தாலும் அது சின்ன ஒரு உலோக வட்டமே. ஆனாலும் படைப்புலகின் அணுகுத் தன்மையில் சோர்ந்துபோகும் சில நேரங்களில் மனைவி, மகன், என் மாணவர்களின் கபடற்ற அனுசரணைகளின் பொருட்டு அப்படியும் நினைத்திருக்கிறேன்.

சமகாலத்தில் எழுதப்படும் தமிழ்க் கவிதைகளில் பலவும் தரமற்றவை என்ற கருத்து நிலவுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

அது ஒரு ஜோடனையான கருத்து. படைப்புகள் மனதின் உருவகங்கள் எனும்போது ஒரு மனதைத் தரமற்றது என்று பிறிதொருவர் சொல்லிவிடுவதை நான் அசட்டுத்தனமாகவே பார்க்கிறேன். ஆனால் ஒரு மனதை ஏற்பதும் தவிர்ப்பதும் அப்படியல்ல. தரத்தைத் தீர்மானிக்கும் அளவிகள் ஸ்திரமற்றவையாக அல்லது ஏதோ ஒரு சார்புநிலைக்கு விசுவாசமிக்கவையாக இருக்கும்போது எந்த அடிப்படையில் அவற்றை நம்புவது என்கிற கேள்வி எழுகிறது. சரி, இந்தக் கேள்வியை ஏற்கத்தக்கதாக இல்லையே என்பதாகக் கொண்டு பதில் சொல்கிறேன். படைப்பு மனம் என்பது பச்சையானது. அது தனது சூலை முழுமையாக்கும் வேலைக்கு மூளையை நம்புகிறது.

மூளை தகவமைத்துக்கொள்ளும் சதை. டாம்பீகமாகத் தான் சார்ந்த மண்டையை உருவகித்துக் காட்ட நன்றிக்கடன் பட்டது. இந்த இடத்தில்தான் எல்லாப் பச்சைத் தன்மையையும் ஏற்கமுடிகிற நம்மால் எல்லா மூளைகளின் சித்துவேலைகளையும் ஏற்கமுடியாமல் போகிறது. இதனாலேயே பொதுத்தன்மை கொண்ட மற்றும் அதற்குச் சாத்தியக் கூறுகள் கொண்ட படைப்புகள் எப்போதும் ஏற்கப்படுகின்றன.

மாறாக என் கண்ணீர் உங்கள் துயரத்திற்குப் போதும் என்றாலோ, என் அறிவு உங்களை மீட்கும் என்றாலோ அல்லது நான் போர்ஹெஸ் நடந்த தெருவிலிருந்து கவிதை எழுதுகிறேன் அதனால் ஓரம் போங்கள் என்கிற தொனியிலான கவிதைகளோ பீடத்தில் செருகப்பட்ட வெறும் பத்திப் புகைதான். ஆக, ஏற்கத் தக்கதாகவும் தவிர்க்கத் தக்கதாகவும் இப்போதைய கவிதைகள் இருக்கின்றன என்பது உண்மைதான்.

ஆகச்சிறந்த கவிதைகள் என்கிற வார்த்தையை எப்படிப் பார்க்கிறீர்கள்?

அந்த வார்த்தை மீது குற்றம் இல்லை. நான் ஒரு காலத்தில், 2006 என்று நினைக்கிறேன், உயிர்மை வாசகனாக இருக்கத் துவங்கிய நேரத்தில் அதில் வரும் கவிதைகளில், கட்டுரைகளில் பெரும்பாலும் பயனாகும் பிரவாகம் என்கிற வார்த்தையைக் கைகொண்டால் அது எனது எழுத்துக்களை முதன்மைப்படுத்தும் என்ற நம்பிக்கையில் இருந்தேன். இப்போது ஆகச்சிறந்தவும், காத்திரமானவும் அப்படி ஆகியிருக்கலாம். அவ்வளவுதான். ஏனென்றால் அப்படி ஆச்சர்யக் குறியீடு பெறும் படைப்புகள் ஒரு எழுத்துக் குழுவை அல்லது குழு எழுத்தைத் தாண்டி வாசகர்களை எந்த அளவில் சென்று சேர்கின்றன என்பதில் ஆகச்சிறந்த நிதர்சனம் இருக்கிறது.

கவிதை என்கிற சொல் தருகிற மிருது இன்றி, அது தருகிற நிழல் இன்றி, வாழ்வைக் கவிதைப்படுத்தாமல் குறியீடுகள், கோட்பாடுகள் என்று கவிதைக்காக ஒரு வாழ்வை சிருஷ்டிக்கும்போது கவிதை மீது ஈர்ப்பு கொண்ட எந்தவொரு பொதுவாசகரும் அயற்சியாவதை, நான் பல அறிமுகக் கூட்டங்களிலேயே கண்டிருக்கிறேன், கேட்டிருக்கிறேன். அவர்களைப் பற்றி அக்கறை இல்லையெனில், பின், கவிதை யாருக்கு எழுதப்படுகிறது. அது சுற்றியிருக்கும் ரசிகர் மன்றத்திற்கோ, படைப்பாளர் சங்கத்திற்கோ மட்டுமே என்றால்... கேள்வியே இல்லை அது ஆகச்சிறந்ததுதான். ■

கவி : நிலாகண்ணன்

கன்னி மயில்

தோகைமயில் சேற்றில் சிக்கியிறந்துவிட்டது
மயிலென்னும் அழகியல் மட்டும் மாசுபடாமல் எல்லோர்
மனதிலும் அகவுகிறது
மலையிலிருந்து பறந்திறங்கியதும் பொட்டல்வெளிதனில்
மேய்ந்து உலவியதும் நினைவில் ததும்புகிறது
உயிரின் கடைசிநாள்
மொழி தோகைவிரித்தாடும் உனது கவிதையொன்று
என்னைத் தேடிவந்திருந்தது அப்போதெனக்குப் புரியவில்லை
சந்திரகத்தின் அத்தனை கண்களிலும் அப்பபடியொரு சாது
அலங்காரக் கொண்டையதிர யதிர கவிதைக்குள்
தாவித்திரியும் அவ்வழகுமயிலை இனி காலத்திற்கும் நாங்கள்
பார்த்திருப்போம்
தோகை வடிவங்கொண்ட ஒரு சவப்பெட்டியில்தான்
உனைக்கூட வைத்திருந்தார்கள்
நான் நம்புகிறேன் சர்வநிச்சயமாக
மயில் மண்ணுக்குள் புதையாது அதெங்கள் வழியெங்கும்
தன் பீலியை உதிர்த்துக்கொண்டேயிருக்கும்...

● கரிகாலன்

தேநீர் சாலை

பிரியாணி உருவாக்கும் இணக்கம்!

நேற்று காலையிலேயே அலைபேசி ஒலித்தது. கலைச்செல்வி டீச்சர் அழைத்தார். ‘இன்று லஞ்ச் கொண்டு வராதீங்க சார்!’ என்றவர், ‘இன்று என்னோட ட்ரீட்’ என்றார்! பட்டதாரி ஆசிரியராகப் பத்து ஆண்டுகளை நிறைவு செய்த மகிழ்வைப் பகிர்ந்துகொள்ள விரும்பியிருக்கிறார்.

மாணவர் நலனில் அக்கறையுள்ள டீச்சர். தினமும் மாணவர்கள் வீடுகளுக்குச் சென்று பாடம் நடத்துபவர். லஞ்ச் பேக் எடுக்காமல் கையை வீசிக்கொண்டு பள்ளிக்குச் செல்வதில் ஒரு சுதந்திரம் இருக்கிறது.

மதியம் அஜ்மீரிலிருந்து மணக்க மணக்க மட்டன் பிரியாணி தருவித்திருந்தார். கூடவே ஐஸ் க்ரீம், ஸ்ப்ரைட்.

பிரியாணி இன்று தேசிய உணவாகிவிட்டது. தினமும் பிரியாணி சாப்பிடுபவர்களும் இருக்கிறார்கள். இப்போதெல்லாம் ஸ்விகியில் அதிகம் ஆர்டர் செய்யப்படும் உணவு பிரியாணிதான்.

பிரியாணியை உலகுக்கு வழங்கியவர்கள் இசுலாமியர்கள் என்றாலும், கிட்டத்தட்ட இதைப்போலவே இறைச்சி கலந்த சோற்றை, தமிழர்கள் சங்ககாலத்தில் சமைத்திருக்கிறார்கள்.

‘துடித்தோட்கை துடுப்பாக

ஆடுற்ற ஊன்சோறு

நெறியறிந்த கடிவாலுவன்’

என மதுரைக்காஞ்சியிலும்,

‘மையூன் தெரிந்த நெய்வெண்புழக்கல்’

என நற்றிணையிலும் முனியாண்டி விலாஸ் வாசம் அடிக்கிறது.

இன்று நாம் சாப்பிடும் பிரியாணியின் வரலாறு கிபி 14ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. மங்கோலிய அரசன் தைமூர் இந்தியாமீது படையெடுத்து வந்தபோது, தன்

போர் வீரர்களுக்கு ஸ்பெஷலாக சமைத்து வழங்கிய உணவுதான் பிரியாணி என்கிறார்கள்.

ஷாஜகான் மனைவி மும்தாஜ், போர் செய்து சோர்வடைந்த, தன் படை வீரர்களுக்குச் சத்து வேண்டி தயாரித்த உணவிது! என்றும் சில வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

இந்தியாவில் பெஸ்ட் பிரியாணி என்றால் அது லக்னோவில் தயாராகும் ஆவாதி பிரியாணிதான்! ஆவாதி போலவே பிரியாணியை ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு பெயரில் அழைக்கிறார்கள்.

மலபாரில் மாப்ளாக்கள் தலைசேரி என்கிறார்கள். குஜராத் மெமன்களுக்கு இது மெமோனி. உருதுமொழி பேசுபவர்களுக்கு இது கொல்கத்தா பிரியாணி.

தமிழ்நாட்டில் திண்டுக்கல், ஆம்பூர் போன்ற நகரங்கள் பிரியாணிக்கு உரியவையாக அடையாளம் காணப்படுகின்றன.

தோசைக்கும் சாதி இருக்கக்கூடிய நாட்டில், பிரியாணிக்கு மதம் இருக்காதா?

இன்று 98% இந்தியர் பிரியாணி சாப்பிடுகிறார்கள். சைவர்களைக் கூட பிரியாணி வாசம் படுத்தி எடுக்கிறது. விளைவு, வெஜ் பிரியாணி!

ஆனாலும் ஆர்.எஸ்.எஸ், பிரியாணிக்குத் தொப்பி வைத்துப் பார்க்கிறது. போராடுபவர்களை, பிரியாணிக்காகப் போகிறார்கள்! என்று கிண்டல் செய்கிறது.

இருந்தென்ன? பிரியாணி திருடும் கூட்டம் பிஜேபியிலும் இருக்கிறது. பிரியாணிக்கு அனுமதி மறுத்ததற்காக தல தோனி ஹோட்டலையே காலி செய்த பெருமையைக் கொண்ட உணவிது!

பிரியாணியைத் தனியாகச் சாப்பிடுவதில் சிறப்பில்லை. மதிய உணவு இடைவேளை. அலுங்குற குலுங்குற பாட்டு காற்றில் அலைகிறது.

ஜோன்ஸ், பிரகாஷ், உஷாராணி, அனிதா, லிடியா, கலைச்செல்வி.. இப்படி உடன் பணிசெய்வோர் சகிதம் சாப்பிட வேண்டும்.

இத்தகைய சிறு விருந்து நிகழ்வுகள் பணி செய்யும் இடத்தை இலகுவாக்குகின்றன. சக பணியாளர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள, விட்டுக்கொடுக்க, குடும்பமாக நெருங்க ஏதுவாகிறது.

உணவென்பதில் வெறும் சுவை மட்டும் இருப்பதில்லை. அதில் பண்பாடும் கலந்திருக்கிறது. இஞ்சி, பூண்டு, புதினா, மல்லி, பட்டை, கிராம்பு, இறைச்சி போன்றவை தங்களது வாசத்தை, ருசியை இழந்து, பிரியாணியாகப் புதிய சுவையை, வாசத்தைப் பெறுகிற உணவிது! ஒற்றுமையை, இணக்கத்தை, கொடுத்துப் பெறும் குணத்தை நமக்குப் பிரியாணி கற்பிக்கிறது!

அதிர்ஷ்டம் இருந்து, நேற்றைப்போல் கொஞ்சமாய் மழையும் வந்து சேர்ந்து கொண்டால், பிரியாணிக் கச்சேரி களைகட்டுவதில் தவறில்லை.

••

லிஃப்ட் பேசும் ஐடி அரசியல்

~

சமீபத்தில் வெளியான படங்களில், சமகால நுண் அரசியலைப் பேசிய ஒரு படம், பெரிய அளவு கவனத்தை ஈர்க்காமல் போனது வருத்தத்துக்குரியது. அந்தப் படம் லிஃப்ட்.

ஒரு ஐ.டி கம்பெனியில் இரவுப் பணியில் ஈடுபடும் நாயகன், நாயகியின், ஓர் இரவு திகில் அனுபவம்தான் லிஃப்ட். டீம் லீடர் நாயகன், ஹெச்.ஆர் நாயகி நீண்ட இரவுப்

பணி முடிந்து, தங்கள் அலுவலகத்தை விட்டு வெளியற முயல்கிறார்கள். முடியவில்லை. அந்த ஐடி கம்பெனியை விட்டு வெளியேறும் முயற்சியின்போது அமானுஷ்ய சம்பவங்களை எதிர்கொள்கிறார்கள். அவர்களை ஏதோ ஒரு சக்தி தற்கொலைக்குத் தூண்டவேறு செய்கிறது.

பணிநிரந்தமின்மை, ஆட்குறைப்பு, கட்டாயப் பணிவிலகல் எனப் பல நெருக்கடிகளை ஐடி ஊழியர்கள் எதிர்கொள்கின்றனர்.

தொண்ணூறுகளின் இறுதியில், ஐடி வேலை கௌரவமானதாகக் கருதப்பட்டது. வொய்ட் காலர் ஜாப். விரல் நகத்தில் அழுக்குப் படாத வேலை. இந்தக் கனவில் பிள்ளைகளை ஐ.டி , கம்ப்யூட்டர் சைன்ஸ் படிக்க வைத்த பெற்றோர்கள் ஏராளம். புறவழிச் சாலைகளில் நூற்றுக்கணக்கான சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் முளைத்ததற்குப் பின்னணியில் இந்த ஐடி வேலைக் கனவுதான் காரணமாக இருந்தது.

தாராளமயம், உலகமயமாக்கல் விளைவான முதலாளிகளின் லாப வெறி, இந்த ஐடி வேலை என்கிற மாயக் கனவைச் சீக்கிரத்திலேயே கலைத்துவிட்டது.

அதுவும் கொரோனா தொற்றுக் காலத்தில் ‘வொர்க் ஃப்ரம் ஹோம்’ என்கிற புது பணிவடிவம் தோன்றியது. கோவிட் காலத்தில் சிறிதும் நஷ்டமடையாத ஒரு துறையென்றால் அது ஐடி துறைதான். இந்தியாவின் ஐடி சந்தை மதிப்பு சுமாராக 15 லட்சம் கோடி இருக்கும். இந்திய ஆளும் வர்க்கத்தைத் தீர்மானிக்கும் வலிமை உடையது ஐடி துறை.

கோவிட் ஒரு புதுவிதத் தொற்று என்றால், வொர்க் ஃப்ரம் ஹோம் ஏற்படுத்திய பாதிப்புகள் கோவிட்டை விட மோசமானவை. உடல் பருமன், முதுகுவலி, பார்வைக் கோளாறு, மன அழுத்தம் போன்றவை வொர்க் ஃப்ரம் ஹோம் கொடுத்த சீதனங்கள்.

ஐடி நிறுவனங்களில் தொழிற்சங்கங்கள் கிடையாது. மற்ற நிறுவனங்களில் அனுபவத்துக்கு ஒரு மதிப்பு இருக்கும். ஆனால் ஐடி நிறுவனங்களோ முப்பது வயதுவரை ஊழியரின் திறமையை உறிஞ்சிக்கொண்டு அவரைத் தூக்கி எறிந்துவிடும்.

ஆணைக்குக் கட்டுப்படுவதைத் தவிர்த்து, எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாது. இந்த வேலையை நம்பி கார், வீடு, பிள்ளைகள் கல்விச் செலவு என இஎம்ஐ போய்க்கொண்டிருக்கும்.

முதலாளித்துவம் உருவாக்கிய ஒரு மாய வளையம் ஐடி துறை. இதிலிருந்து விலக முடியாது. இது வேலையை விட்டுத் தூக்கி எறிந்தால் எந்தக் கோர்ட்டிலும் போய் நியாயம் கேட்க முடியாது. இப்படி வேலையை இழந்த நிறைய ஐடி தம்பதிகள் குடும்பத்தோடு தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஐடி நிறுவனத்தில் கொத்தடிமையாய்ச் சிக்கி வாரம் ஆறுநாள் வேலை செய்பவர்கள், தங்கள் இழந்த ஆறுநாள் சுதந்திரத்தை வீக் எண்டில், விடியவிடிய பப்பிலும் பாரிலும் தேடுகிறார்கள்.

தங்களைச் சுரண்டும் இந்நிறுவனங்களை எதிர்த்துக் கேட்க முடியாத கீழ்ப்படிதலில் அரசியலற்றவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். பெரும்பாலும் அமெரிக்காவுக்கு வேலைசெய்வதால் மனதளவில் வலது சார்புடையவர்களாகவும் மாறிப்போகிறார்கள். இதனால் உருவாகும் மன அழுத்தம் போக்க ரவிஷங்கர் பாபா, ஜக்கி எனக் கார்ப்ரேட் சாமியார்களிடம் தஞ்சம் அடைகிறார்கள். ஒரு கட்டத்தில் தங்கள் அடிமை வாழ்வை ரசிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இப்படி அடிமை வளையத்தை விட்டு வெளியேற முடியாதவர்களின் அரசியலை லிஃப்ட் ஒரு உருவகமாக்கியிருக்கிறது.

பங்குச் சந்தை, ஐடி சந்தை எல்லாமே லிஃப்ட் போன்றதுதான். லிஃப்ட் உங்களை உயரே கொண்டு போகும். அது வளர்ச்சியாக இருக்காது. உங்களைக் கீழே இறக்கிவிடும். அது உங்களுக்கு வசதியாகவும் இருக்காது.

தொழிற்சங்கங்கள்தான் ஐடி நிறுவனத்தின் கண்ணாடிச் சுவர்களை உடைத்து, ஊழியர்களைச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்யும். அதற்கு ஐடி ஊழியர்கள் ஐபிஎல், மார்வெல் படங்கள், வீக் எண்ட் பார்ட்டிகள் போன்ற மயக்கத்திலிருந்து விடுபட்டு அரசியல்மயமாவது அவசியம்! ■

மா. பார்த்திபன்
தமிழ் இலக்கியத்துறை மாணவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

தூர வீச வேண்டிய விதிகள்

பொதுவாக ஒரு படைப்பு என்பது நம் உள்ளத்து உணர்வைத் தூண்டும் விதமாக அமைய வேண்டும் என்பார்கள். நம்மில் உள்ள ஏதோ ஒன்றைத் தட்டி எழுப்புகிறது ஒரு படைப்பு இல்லையா? அப்படியேதான் தகழியின் காதல் காவியத்தைத் தமிழுக்குக் கடத்தி வந்த சுந்தர ராமசாமியின் மொழிபெயர்ப்பும். மூலத்தைப் பயிலும் உணர்வைத் தரவல்லது.

மீனவச் சமூகத்தின் வாழ்க்கை எவ்வளவு இன்னல்களைக் கொண்டது.. அவர்களின் நம்பிக்கைகள் எவ்வாறு அவர்களை வழிநடத்திச் செல்கின்றன.. கடலுக்குள் செல்லும் மீனவனின் (மரக்கானின்) உயிர் கரையிலுள்ள மரக்காத்தியின் கையில்தான் தவழ்ந்துகொண்டிருக்கிறது.. இன்னும் ஒரு பெண்ணின் தலையில் அசையும் மெல்லிய பூப் போல.

கருத்தம்மா என்னும் மீனவப்பெண் வேற்று மதத்தைச் சேர்ந்தவனைக் காதலிக்கிறாள். காதலர்கள் இருவரும் இணைய எண்ணுகின்றனர். ஆனால் அவர்களை இணைந்து வாழவும் விடாமல் பிரிந்து சாகவும் விடாமல் அவர்களின் மீது நிகழ்த்தப்படும் சமூகத்தின் வழக்கங்கள் ஊறு செய்கின்றன.

தோணி என்பது மீனவருக்கு உரியதுதான். ஒரு சாதாரண மீனவன் ஒரு தோணியை வாங்க எவ்வளவு சிரமப்பட வேண்டும்?! உயிரைப் பணயம் வைத்துக் கடலுக்குள் செல்வதுதான் மீனவர்களின் வேலை. அதேவேளையில் அது மட்டுமே அவர்களின் வாழ்க்கையாகிவிடுமா? எனப் பல வினாக்களையும் எழுப்பி அதற்கு விடைகளையும் தந்துவிட்டுப் போகிறது நாவல்.

பேராசை ஒரு மனிதனைப் பைத்தியக்காரனாக்கும். இவ்வுலகில் நிலையானது என்று எதுவுமே இல்லை. பெரும் ஆசைகளே நம் அழிவிற்கான பாதையை வகுத்துக் கொடுக்கும். பேராசை அடுத்தவனை அழித்து நாம் வாழ வேண்டும் என்ற தீய எண்ணத்தைக்

கொடுத்துவிடுகின்றது இயல்பாகவே. ஆசை என்பது நேர்மையாக நம் தேவைக்கேற்ற அளவினை உடையதாக இருந்தால்தான் இன்ப வாழ்விற்கு உறுதுணையாக இருக்கும். இப்படியான தத்துவப் போதனைகளும் நாவலில் உண்டு.

கதையின் நாயகி கருத்தம்மாவின் காதலைக் குழிதோண்டிப் புதைத்ததோடு மட்டுமில்லாமல், இன்னொருவனுக்கு அவளைத் திருமணம் செய்துகொடுக்கின்றனர். சரி திணிக்கப்பட்ட வாழ்விலாவது அந்தப் பெண்ணின் வாழ்க்கை அழகாகும் என்று எதிர்பார்த்தால் அதுவும் இல்லை என்றாகிறது. நாலு பேர் நாலுவிதமாப் பேசுவாங்க என்பதற்கு ஏற்றாற்போல் அவள் ஊரை விட்டு வந்த பின்பும், அவளின் சிறு தவறை ஊதி ஊதிப் பெரிய பிரச்சனையாக மாற்றும் அந்த ஊர்மக்களும் சமூகத்தின் குரூர முகங்கள் என அடையாளம் பெறுகின்றனர் தகழியின் கதை சொல்லல் முறையில்...

ஒரு பெண் ஒருவனைக் காதலித்தால் அவள் வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொள்ளவே கூடாது; காதலிப்பது என்பது அவ்வளவு பெரிய குற்றம் என்பது போன்ற பழைய கட்டுப்பட்டித்தனத்தினை அப்படியே வடித்து, நம் மனதிற்குள் ஆயிரம் கேள்விகளை, ஆயிரம் பதில்களைக் காரசாரமாக விளைவிக்கிறார் தகழி.

பெண்களின் வாழ்க்கை எப்போதுமே சோகத்தில்தான் உள்ளது. கண்ணீரும் கற்பும் பெண்களுக்கு மட்டுமே உரியது என்கிற சூழலுருவாக்கத்தை நோக்குகிறபோது ஆண்கள் மனிதர்கள் இல்லை என்ற நிலைப்பாட்டிற்கும் நாம் வர வேண்டிய நிலையிருப்பதாகத் தோன்றுகிறதே. பெண் மீது நிகழ்த்தப்பட்ட வன்மங்கள் அப்படியான மனநிலையை உருவாக்கிவிடுவது இயல்பாக நடக்கிறது. சமூகத்தின் எழுதப்படாத பல்வேறு சட்டங்களைப் பெண்களிடத்தில் சுமத்தியது யார்?

திருமணம் முடிந்த பிறகு பிறந்த வீட்டை மறந்துவிட வேண்டும் என்றும் புகுந்த வீடு பெண்ணின் வீடு என்றும் கூறப்படுகிறது. தாய் இறந்தபோதும்கூட மருமகன் பழனி மனைவியான கருத்தம்மாவை அவளது தாய் வீட்டிற்கு அனுப்பவில்லை என்பது கூறப்படுகிறது. பெண் என்ற உயிரின்மீது நிகழ்த்தப்படுகிற வன்மங்களை, அடக்குமுறைகளை நினைக்கையில் பசிய புழு ஒன்றின் மீது நெருப்பைக் காட்டித் துன்புறுத்தி அது துடிப்பதைப் பார்த்து ரசிக்கும் சமூகம். இதன் கோரமான முகத்தை ஒற்றைப் பார்வையில் எதிர்நின்று வெகுண்டாலும் அடுத்த கணம் ஆறிப்போகப் பழகியதும் நம் தவறு என்ற சுய ஞானத்தை இப்படைப்பு தருகிறது.

அதேபோல ஆண்களின் கற்பு குறித்தும் ஏன் நாம் வரையறுக்கவில்லை. ஆண்கள் அழவே கூடாது என்கிற கற்பிதமும் யாரால் வழங்கப்பட்டது என்று பல கேள்விகளின் பிறப்பிடம் நாவல் நெடுகிலும்.

இறுதியில் கருத்தம்மாவும் கருத்தம்மாவின் காதலனும் அவளின் கணவனும் உயிரைவிட்டு, கருத்தம்மாவின் குழந்தையின் வாழ்க்கை மிகப்பெரிய கேள்விக்குறிக்குள்ளாக்கப்படுவது.. அனாதைகள் உருவாகுவதில்லை உருவாக்கப்படுகின்றனர் என்பதை உணர்த்திநிற்கிறது.

விடியலை நோக்கிச்செல்ல சில விதிகளைத் தூக்கித் தூர வீசித்தான் ஆகவேண்டும், எல்லாவற்றிலும் எங்கும் நுட்பமாய்ச் சிந்திக்கத்தான் வேண்டும் என்பதையும் மிக அழுத்தம் திருத்தமாகப் பதிவிட்டுச் செல்கிறது நாவல்.

தகழியின் படைப்புகள் எப்போதுமே தனித்துவம் வாய்ந்தவைதான். பாமர மக்களின் வாழ்வியலை ஒவ்வொரு காட்சியிலும் நுட்பமாகப் பதிவு செய்துகொண்டே செல்கிறார். இந்நாவலை வாசிக்கும்போதே கதாபாத்திரங்கள் எல்லாமும் கண் முன்னே எழுந்து நமக்குக் காட்சி தந்து, தொடக்க நிலை வாசகனைக் கவருவதான வகையில் நேர்த்தியாய் அமைந்திருக்கிறது. சுந்தர ராமசாமி மொழிபெயர்ப்பில் மூலத்தின் சுவை குன்றாது நமக்குத் தமிழில் கிடைத்திருப்பது நமக்கெல்லாம் நற்பேறன்றி வேறேது... ■

● ஜின்னா அஸ்மி

இப்படியும் சில இடங்கள்

உலகம் தோன்றியதிலிருந்து
மனிதப் பாதம் படாத இடங்கள்
இருக்கிறதாவெனப் பிரமித்திருக்கையில்
வெளியே வந்தான்.

ஆம் நாம் பார்க்கத் தவறிய
இடங்கள்கூட இருக்கிறதுதானே என்றான்
அந்த
இடத்திலிருந்துதான் தொடங்குகிறது
இந்தக் கவிதை...

அங்கே
யாரும் யாசிப்பதில்லை
திருடுவதில்லை
பொய் சொல்வதில்லை
பஞ்சம் பட்டினியில்லை
கொலை கொள்ளை இல்லை
கடவுளின் சர்ச்சை இல்லை என்றான்
அப்படியென்றால் அது
பூமியாக இருக்காதென்றேன்

சிரித்தான்
அந்தச் சிரிப்பின் எதிரொலி அடங்க
இன்னும் சில நூறாண்டுகள் ஆகும்

மேலும் சொன்னான்
கற்பழிப்பு என்பதை
கேள்விப்பட்டதே இல்லை...

பாலியல் கொடுமையை
பார்த்ததே இல்லை...

ஆத்திகனும் இல்லை
நாத்திகனும் இல்லை...

பிரச்சாரமும் இல்லை
விபச்சாரமும் இல்லை...

அகிம்சையும் இல்லை
அடக்குமுறையும் இல்லை..

அதேபோல அங்கு
காந்தியும் இல்லை
கோட்ஸேவும் இல்லை...
ஏன்
நீயும் நானும்கூட இல்லையென்றான்
அப்போது
இருவருக்கும் இடையே இடைவெளி
குறைந்திருந்தது

– அவன் இன்னும் சொல்வான் ■

● வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்
● ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

அப்பாவின் வாசம்!

ஆட்டோ மீது படிந்திருந்த தூசி, காக்கா எச்சத்தை விரக்தியோடு துடைத்தான் நடேசன். நம்பவே முடியவில்லை. மூலக்கடையிலிருந்து பாரீஸ் கார்னர்வரை பிதுங்கும் கூட்டத்தோடு ஷேர் ஆட்டோ ஓட்டித் திரிந்த வாழ்க்கை, கொரோனா என்ற பூதத்தால் சட்டெனத் தடைபட்டுக் கடந்த இரண்டு மாதங்களாக மொத்தமாக முடங்கிப்போகுமென்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. இன்னும் ஓரிரு வருடங்களில் இன்னொரு ஆட்டோ வாங்கிவிடலாமென்ற எதிர்பார்ப்பில் இருந்தவனின் கனவில், கொரோனா மண்ணள்ளிப் போட்டுவிட்டது. இன்னும் இதே நிலை எவ்வளவு நாட்களுக்குத் தொடருமென்றும் தெரியவில்லை.

வழக்கம்போல் ஆட்டோவின் உறை மீது படிந்துள்ள எச்சங்களைத் துடைத்துமுடித்து வீட்டினுள் நுழைந்தவனுக்கு இருப்பு கொள்ளவில்லை. ஒவ்வொரு நாளும் ஆயிரம், ஆயிரத்து ஐநூறு என வருமானம் தேறும். சேட்டுக்கு ட்யூ கட்டியது, கட்டிங் போட்டதுபோக எப்படியும் முன்னூறோ நானூறோ வீட்டுக்குக் கொடுப்பான். இப்போது ஆட்டோ சவாரியும் இல்லை... வருமானமும் இல்லை... டாஸ்மாக்கும் இல்லை என்பதை நடேசனால் நம்பவே முடியவில்லை. நம்பித்தான் ஆக வேண்டும்.

நடேசனோடு கூட்டுச் சேர்ந்து சியர்ஸ் அடிக்கும் ராமு, பீட்டர், துரை மூவருமே வருமானத்துக்கு வழியின்றி அவரவர் சொந்த ஊருக்கே திரும்ப ஓடிவிட்டனர். இந்தக் கூட்டணியோடு சேர்ந்துவிட்டால் போதும், நடேசனுக்குப் பொழுதுபோவதே தெரியாது. ஆட்டோவுக்கு வாடிக்கையாளர் இல்லாத மதிய வேளையில் சினிமா முதல் அரசியல்வரை அனைத்தையும் பேசித்தீர்ப்பார்கள். இரவானதும், அன்றைய கலெக்சனிலிருந்து அலுப்பு தீர ஒயின் ஷாப்பில் குளிப்பார்கள்! யாருக்காவது ஓவராகிச் சரிந்தால், மற்றவர்கள் பொறுப்பாக வீட்டில் கொண்டுபோய்ச் சேர்ப்பது வழக்கம்.

நடேசன்தான் பலமுறை மட்டையாவான். அவனை வீட்டில் சேர்க்கும்போது அவனது மனைவி சுசீலா திட்டும் வசவுகளையெல்லாம் வாங்கிக்கொண்டு, புன்னகைத்து விடைபெறுவார்கள். இப்போது அனைத்துமே இனிதான நினைவுகளாகிவிட்டன. அவற்றையெல்லாம் விரக்தியோடு நினைத்துப்பார்த்தபடி காலைச் சாப்பாடு முடித்து டிவி பார்த்தபடி சாய்ந்தவன், அப்படியே உறங்கிவிட்டான்.

செல்லக்குழந்தைகள் சினேகாவும் சுருதியும் வழக்கம்போல் சண்டை போடும்

சத்தத்தில்தான் நடேசனுக்கு விழிப்பு வந்தது. அதற்குள் சாயங்காலமாகிவிட்டது. “எனக்குக் குடுடி!” “ஊஹூம் தரமாட்டேன்!” செல்போனுக்காகச் சண்டையில் இருவரும். சற்று அதட்டலாக, “சினேகா... பாப்பாகூட சண்ட போடாத, செல்போன சுருதிகிட்ட குடு!” எனச் சொல்லவும், “இவதாம்பா ரொம்ப நேரமா வச்சிருந்தா!” என்று சொன்னவளிடம், “நீதான் பெரிய பொண்ணாச்சேடா, பாப்பாகிட்ட குடுடா... அவள அழ விடாத!” என்றதும் அரைமனதாக செல்போனை சுருதியிடம் கொடுத்தாள்.

“அம்மா எங்க போயிருக்கா?” என்றவனிடம், “லீலா ஆன்ட்டி வீட்டு வரைக்கும் போறதாச் சொன்னாங்கப்பா” என்றாள். அவள் சொல்லி முடிக்கும்போதே சுசீலாவும் வீட்டினுள் நுழைந்தாள்.

“என்ன சொன்னாங்க? வேலைக்கு வரச்சொன்னாங்களா?” சுசீலாவிடம் கேட்டான். “வேலைக்கா? வீட்டுக்குள்ளயே என்னைய வர விடல. வெளிலயே நிக்க வச்சு, இன்னும் கொரோனா சரியாகல, அது ஒழியிற வரைக்கும் உன் வீட்டுலயே இருன்னு சொல்லிட்டாங்க” என்றவளிடம், “இன்னும் ஒரு மாசமோ ரெண்டு மாசமோ இப்படியேதான் போகும்போல... எப்டி ஓட்டுறதுன்னே தெரியலையே! இந்தக் கொரோனாவால எல்லாமே நாசமா போச்சே!” என்று புலம்பினான்.

“மனசத் தளரவிடாதய்யா, ஒரு கதவ அடச்சா இன்னொரு கதவ கடவுள் தெறக்காமலா போவாரு? ஆட்டோ இல்லாட்டா என்னய்யா, எதாவது வேல கெடச்சாலும் பாக்கலாம்யா” என்று அவனைத் தேற்றினாள்.

அப்போது, வீட்டில் யாரும் இருக்காங்களா இல்லையா என்றுகூட கேட்காமல் “நடேசா! நடேசா!” என்றபடி மெக்கானிக் கடை குமரேசன் வீட்டுக்குள் விறுவிறுவென நுழைந்தான்.

“என்ன குமரேசா? ரொம்ப சந்தோசமா வர்ற?”

“நடேசா, உனக்கு ஆட்டோ ஓடாததால எதாவது வேலையிருந்தா பாக்கச் சொல்லியிருந்தல்ல?”

“ஆமா.”

“என்னோட மச்சினன் ஒருத்தரு பொன்னேரியில கீரத்தோட்டம் வச்சிருக்காரு. லாக்டௌன்னால கீரைய பறிக்கிறதுக்கு இப்ப ஆளுங்களே இல்லையாம். அந்தக் கீரையப் பறிச்சு மட்டும் குடுத்தாப்போதும்... கட்டுக்கு இவ்வளவுன்னு கையோட காச வாங்கிட்டு வந்துடலாம்” என்றவனிடம், “கீரயெல்லாம் பறிச்சுப் பழக்கமில்லடா” என்றவனிடம் “கீர தானங்க... இதென்ன தென்ன மரம் ஏறுற வேலயா என்ன?” என்ற சுசீலா, குமரேசனைப் பார்த்து, “ஒரு கட்டுக்கு எவ்ளோ தருவாராம்ண்ணா?” எனக் கேட்டாள்.

“அதெல்லாம் பேசிக்கலம்மா... என்னோட மச்சினன்தான்... அதெல்லாம் கேக்குறதக் குடுப்பாப்ல... என்ன ஒண்ணு...” என்று குமரேசன் இழுக்கவும்...

“என்னண்ணே யோசிக்கிறீங்க?” என்றாள் சுசீலா.

“அதொண்ணுமில்லம்மா... நடேசனுக்கு ஓகேன்னா, வருமானத்துக்கு வழி கிடைச்ச மாதிரிதான்..” குமரேசனின் பேச்சை முழுசாக நம்பமுடியாதென்றாலும் நம்பித்தான் ஆக வேண்டும்.

“லாக்டௌன்ல போலீஸ் மறிக்குமே... என்ன செய்யிறது?”

“போலீஸ் மெயின் ரோட்டுல போனாத்தான மறிக்கும்? நானும் வரேன்... ரெண்டு பேருமா உன்னோட சைக்கிள்ல சந்துபொந்தா பூந்து போயிடலாம்... ஒண்ணும் பிரச்சனையில்ல...” எனச் சொல்லவும், அவனது கனத்த உடம்பையும் சுமந்துகொண்டு சைக்கிளில் செல்லவேண்டும் என்பதை நினைத்தால் கீரை பறிப்பதைவிட மலைப்பாக இருந்தது. இருந்தாலும் அனிச்சையாகத் தலையாட்டிவைத்தது உள்மனசு.

மறுநாள் வயக்காட்டுக்குக் குமரேசனோடு சைக்கிளில் சென்று சேர்வதற்கே கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாகிவிட்டது. அதிலேயே பசியெடுக்கத் தொடங்கியது. இருந்தாலும், ஓரளவு பறித்தபின்பே சாப்பாடு என்ற

உறுதியுடன், அடர்த்தியான சிறுகீரை முளைத்திருந்த வயக்காட்டினுள் இறங்கினான்.

கீரை பறிக்கும் முறை நடேசனுக்குத் தெரியாது என்றாலும், அவனது தோதுக்குத் தக்கபடி குனிந்து நிமிர்ந்து பறிக்கத் தொடங்கினான். ஒருவழியாக அன்று முழுக்க பறித்து முடித்த கீரைக்கட்டுகளுக்கு முன்னூறு ரூபாய் சம்பளமாக வாங்கியதும், பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

ஆட்டோ ஓட்டியபோது இந்த முன்னூறு ரூபாயையெல்லாம் பெரிதாக மதித்ததேயில்லை. இன்றைக்கு இந்த ரூபாய்க்காக இவ்வளவு நேரம் குனிந்து நிமிர்ந்து வேலை பார்த்ததை நினைத்ததும் வருத்தமாக இருந்தது. ஆனால் அடுத்த நிமிடமே வீட்டிலிருந்த மனைவி குழந்தைகளின் முகத்தை நினைக்கவும், அவர்களுக்கு இதைவைத்துச் சாப்பாட்டுக்கு மட்டுமாவது வழி செய்துவிடலாமே என்ற திருப்தி மனதில் எழுந்தது.

லேசாக வானம் தூறல்போடத் தொடங்க, குமரேசனைப் பின்னால் அமரவைத்து சைக்கிளை வெக்குவெக்கென மிதித்தபடி வீடுவந்து சேர்ந்தவன், குமரேசனுக்கு நன்றி சொல்லி அனுப்பிவிட்டு வீட்டினுள் சோர்வாக நுழைந்தான்.

அவனை ஆர்வத்தோடு வரவேற்ற சுசீலாவிடம் முன்னூறு ரூபாயைக் கொடுத்தபோது அவனுக்கு அழுகையே வந்துவிட்டது. "என்னது சின்னப்பிள்ள மாதிரி" என்றவளிடம்,

"போன மாசம் வரைக்கும் கை நெறையா சம்பாதிச்சேன். தெனமும் ஆயிரம் ரெண்டாயிரம்னு கெடைக்கும். இஷ்டத்துக்கு செலவுசெய்ய முடிஞ்சது. இப்ப ஒரு முன்னூறு ரூவாய்க்கு இத்தன பாடுபட வேண்டியிருக்கே!" என்றான்.

"அதுக்கு என்ன பண்றது? கொரோனான்னு ஒண்ணு வரும்னு கனவுகினவு கண்டமா என்ன? எல்லாருக்கும்தான் இப்ப சிக்கல்... என்னமோ நாம மட்டும் கஷ்டப்படுற மாதிரி" சமாதானமாக அவனிடம் பேசிப்பார்த்தாள்.

"அதுக்கில்ல, பசங்கள்லாம் வீட்டுல இருக்காங்க... எதாவது ஆசையா வாங்கித்தரலாம்னா கூட கையில காசு இல்லயே."

"ஆசைப்பட்டாலும் வாங்கிக்குடுக்க ஸ்வீட்டுக் கடை எங்க இருக்கு? எல்லாக் கஷ்டமும் கொஞ்ச நாளைக்குத்தான். ஊரடங்கெல்லாம் முடிஞ்சதுன்னா பழையபடி வருமானம் வந்துடும்..."

"இருந்தாலும் அவ்ளோ சம்பாதிச்சுட்டு..." என்றவனை இடைமறித்த சுசீலாவின் முகம் சற்றுக் கடுமையாக மாறியதை நடேசன் எதிர்பார்க்கவில்லை. "என்ன பெருசா சம்பாதிச்ச அப்ப? ஆயிரம் ரூவா சம்பாதிச்சாலும் கண்டதையும் குடிச்சுட்டு மிச்சம் இருக்க நூறு எரநூறத்தான கொண்டாந்து குடுத்த? ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு வருவியா, எங்கயாவது விழுந்துகிழுந்து கெடப்பியா, ஆட்டோவ நல்லபடியா வீட்டுக்கு இட்டாருவியா, யார்ட்டயாவது சண்ட வலிச்சுட்டு வருவியான்னு பதட்டமாவே இருக்கும். இன்னைக்கு இருநூத்தம்பது ரூவா மட்டுமே சம்பாதிச்சாலும் நிம்மதியா இருக்கேன். என்னோட கஷ்டம் எனக்குத்தான் தெரியும்" என்று படபடத்தாள்.

எதுவும் பேசாமல் திகைத்தவனிடம், "உனக்கு ஒண்ணு தெரியுமாய்யா? நீ குடிக்காம இருக்குற இந்த ரெண்டு மாசத்துலதான் நம்ம புள்ளைங்க உங்கிட்டக்க வந்து படுக்குதுங்க... உம்மேல காலப்போட்டுத் தூங்குதுங்க... சினேகா நேத்து என்ன சொன்னா தெரியுமா? இப்பதாம்மா அப்பாவோட வாசம் நல்லாருக்குங்கறா! டெய்லி குடிச்சுக் குடிச்சு அதே நாத்தத்தோட உளறிக்கிட்டே படுத்த உங்கிட்ட இப்பதான் புள்ளைங்க தைரியமா வந்து ஒட்டிக்குதுங்க... இந்தக் கொரோனாவால உன்னோட சம்பாத்தியம் போனதவிட, நீ குடிக்காததால உம்மேல நம்ம புள்ளைங்க பாசமா இருக்குறதுதாய்யா பெருசா படுது! இது போதும்யா எனக்கு!" என்றவளை, வேறேதும் பேசாமல் அணைத்துக்கொண்டான். அங்கே மழை வலுத்தது.

■

● கோ.லீலா

இயற்கை தந்த முதல் இசைக்கருவி

புல்லாங்குழல் - துளைக்கருவி

தமிழர்களின் இசை மிகத் தொன்மையானதும் நுட்பமானதும் இயற்கையோடு இயைந்ததும் ஆகும். இயற்கையோடு இயைந்த, இப்புவியின் முதல் இசைக்கருவி புல்லாங்குழல் எனும் குழல் ஆகும்.

இந்தியாவில் புல்லாங்குழல் என்று அழைக்கப்படும் குழல் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

●●

குழலைக் கண்டுபிடித்தது குற்றம்

என்னது குழலைக் கண்டுபிடித்தது குற்றமா? என நீங்கள் வேகமாய் எழுவது புரிகிறது...

அமைதி! குற்றம் என்பது வண்டு என்பதற்கான இன்னொரு பெயர்.

குழலைக் கண்டுபிடித்தவர் யாரென அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை... ஆனால் ஆதி கால மனிதர் ஒருவர் காட்டு வழியே நடந்து செல்லும்போது வண்டு துளையிட்ட மரத்தின் துளை (மூங்கிலா என அறியக் கிடைக்கவில்லை) வழி புகுந்த காற்று ஒலியை எழுப்பியிருக்கிறது... அதிலிருந்துதான் குழல் வடிவப் பொருளில் துளையிட்டால் காற்றைக்கொண்டு ஒலியெழுப்ப முடியும் என்று அறிந்திருப்பார்கள் எனச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

●●

பழையது இனியது

இன்னிசை எழுப்பி மனதை மயக்கும் குழலிசை எவ்வளவு பழமையானது? வாங்க! சுலோவெனியா போவோம்..

ஆமாம். *1995*இல் தொல்பொருள் ஆய்வாளர்கள், சுலோவெனியாவின் டிஜீ பேபே பகுதியில் உள்ள ஒரு குகையில் *43000* ஆண்டு பழமையான கரடியின் எலும்பில் செய்யப்பட்ட ஒரு குழலைக் கண்டறிந்துள்ளனர். இதுதான் உலகின் மிகப் பழமையான குழல் என்றும் தெரிய வருகிறது.

இதைத் தொடர்ந்து இன்றைய ஜெர்மனியின் ஸ்வாபியன் ஜுரா பகுதியில் நான்கு வகையான எலும்புக் குழல்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன.

2008ஆம் ஆண்டில் குறைந்தது 35,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மற்றொரு புல்லாங்குழல் மீண்டும் ஜெர்மனியின் உல்ம் நகருக்கு அருகில் உள்ள, ஹோஹெல் ஃபெல்ஸ் குகையில் கண்டெடுக்கப்பட்டது.

இந்தப் புல்லாங்குழலானது ஐந்து துளைகளுடன் V வடிவ வாயைக் கொண்டதாக உள்ளது. இது ஒரு பிணந்தின்னிக் கழுகின் இறக்கை எலும்பில் செய்யப்பட்டதாகும். (கறி சாப்பிடும்போது, எலும்பின் மஜ்ஜையை உறிஞ்சும்போது எலும்புக் குழலை கண்டுபிடிக்க ஐடியா கிடைச்சிருக்குமோ?)

••

புல்லாங்குழல் பெயர்க் காரணம்

புல் குடும்பத்தைச் சேர்ந்த மூங்கிலினால் செய்யப்படும் குழல் என்பதால் புல்லாங்குழல் என்கிறோம்.

1150 - 1500 காலகட்டத்தில், ஆங்கிலத்தில் புல்லாங்குழல் முதன்முதலில் புளூட் (flute) அல்லது else flowte, flo(y)te எனவும், 9 முதல் 14ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் பேசப்பட்ட பழைய பிரெஞ்சு மொழியில் ப்ளாட் (flaute) எனவும், பழைய ஆக்சிதம் மொழியில் அல்லது மற்றும் பழைய பிரெஞ்சு மொழியில் ஃபிளாட் (flaüt), ஃப்ளூட்டெ (fleüte), ஃப்லாட்டெ (flaüte), ஃப்ளஹுட் (flahute) எனவும் அழைக்கப்பட்டது. இடைக்கால உயர் ஜெர்மன் மொழியில் floite, டச்சு மொழியில் fluit எனவும் வழங்கப்பட்டது. புல்லாங்குழலைக் குறிக்கும் புலூட் (flute) என்ற சொல் முதன்முதலில் 14ஆம் நூற்றாண்டில் அறியப்படுகிறது.

ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதியின்படி, இது ஜெஃப்ரி சாசர்ரின் த ஹவுஸ் ஆஃப் ஃபேமில், c.1380இல் பயன்படுத்தப்பட்டது. இன்று, புல்லாங்குழல் குடும்பத்தைச் சார்ந்த எந்தவொரு கருவியையும் வாசிக்கும் ஒரு இசைக்கலைஞர் ஆங்கிலத்தில் flutist அல்லது flautist அல்லது வெறுமனே ஒரு புலூட் பிளேயர் என அழைக்கப்படுகிறார்.

••

குழலின் அமைப்பு

புல்லாங்குழலின் நீளம் 15 அங்குலம்; சுற்றளவு 3 அங்குலம். இடப்பக்கம் மூடப்பட்டிருக்கும். வலப்பக்கம் திறந்திருக்கும். குழலில் மொத்தமாக 9 துளைகள் உண்டு. வாய் வைத்து ஊதப்படும் முதல் துளைக்கு முத்திரை அல்லது முத்திரைத்துளை என்று பெயர். இத்துளை, மற்ற எட்டுத் துளைகள் ஒவ்வொன்றுக்கும் நடுவில் உள்ள இடைவெளியை விட சற்றுத் தள்ளி இருக்கும்.

••

குழலின் வகைகள்

இந்தியப் புல்லாங்குழல்

இந்தியப் புல்லாங்குழல்களில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று பன்சூரி வகையாகும். இதில் ஆறு விரல் துளைகளும் ஒரு ஆற்றுவாய்த் துளையும் இருக்கும். வட இந்திய ஹிந்துஸ்தானி இசைக்கு இவை பயன்படுகின்றன. மற்றொருவகை வேணு. இவை தென்னிந்தியக் கர்நாடக இசைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் எட்டு விரல் துளைகளும் ஒரு ஆற்றுவாய்த் துளையும் இருக்கும். தற்போது தென்னிந்தியப் புல்லாங்குழலாகக் கருதப்படுவது 20ஆம் நூற்றாண்டில் சரப சாஸ்திரி என்பவரால் வடிவமைக்கப்பட்ட ஏழு விரல்துளைகள் கொண்ட புல்லாங்குழல் ஆகும்.

சிலப்பதிகாரத்தில் உள்ள ஆய்ச்சியர் குரவையிலே கொன்றைக்குழல், ஆம்பர்குழல், முல்லைக்குழல் என 3 வகைக் குழல்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

••

சீனப் புல்லாங்குழல்

சீனப் புல்லாங்குழல்கள் டிசி என அழைக்கப்படுகின்றன. இவை பல்வேறு அளவுகளிலும், பல்வேறு அமைப்புக்களிலும் காணப்படுகின்றன. இவற்றின் துளைகளின்

எண்ணிக்கை 6இல் இருந்து 11 வரை வேறுபடுகின்றன. பெரும்பாலானவை மூங்கிலால் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் மரம், எலும்பு, இரும்பு ஆகியவற்றாலும் ஆக்கப்பட்டவையும் காணப்படுகின்றன.

நவீன சீன இசைநிகழ்ச்சிகளில் காணப்படக்கூடிய புல்லாங்குழல்களாவன பங்டி (梆笛), கூடி (曲笛), சிந்தி (新笛), டாடி (大笛) என்பனவாகும். நிலைக்குத்தாக வைத்து வாசிக்கப்படும் மூங்கிலாலான புல்லாங்குழல் சியாவோ (簫) என அழைக்கப்படுகின்றது.

••

ஜப்பானியப் புல்லாங்குழல்

ஜப்பானியப் புல்லாங்குழல்கள் ஜப்பானிய மொழியில் பியூ (fue) (笛) (ஹிரகனா ふえ) என அழைக்கப்படுகின்றன. முடிவுப் பகுதியில் வைத்து வாசிக்கப்படுபவை, குறுக்காக வைத்து வாசிக்கப்படுபவை என இரு வகையிலும் பல சங்கீதப் புல்லாங்குழல்கள் ஜப்பானில் காணப்படுகின்றன.

••

சோடினா மற்றும் சுலிங்

சோடினா எனப்படுவது முடிவுப் பகுதியில் வைத்து வாசிக்கப்படும் ஒருவகைப் புல்லாங்குழல் ஆகும். இது இந்து சமுத்திரத்தில் உள்ள தென்கிழக்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த மடகாஸ்கர் தீவுகளில் பரவலாகக் காணப்படுகின்றது. தென்கிழக்காசியாவிலும் இந்தோனேசியாவிலும் இது சுலிங் என அழைக்கப்படுகின்றது. சமகாலத்தில் வசித்த பிரசித்தி பெற்ற சோடினா வாசிப்பவரான இரகோடோ பிராவின் (இறப்பு 2001) புகைப்படம் அந்நாட்டுப் பணத்தாள் ஒன்றில் அச்சிடப்பட்டுள்ளது.

••

ஆன்மீகமும் குழலும்

கிறித்துவ மத நூலான பழைய ஏற்பாட்டில் தோற்றம், ராஜாக்கள், யோபு, சாமுவேல், ஏசாயா, ஜெரிமியா, கொரியந்தர் ஆகிய அதிகாரங்களில் புல்லாங்குழல் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றின் மூலம் புல்லாங்குழலின் தொன்மை மேலும் உறுதி செய்யப்படுகிறது.

கெய்ன் வம்சாவழியான லாமிக்கின் மகன் ஜூபல் புல்லாங்குழல் இசைக்கும் சிறந்த கலைஞராக இருந்திருக்கிறார் எனப் பழைய ஏற்பாட்டின் தோற்றம் அதிகாரத்தில் குறிப்புகள் உள்ளன.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் குழலின் இசைக்கு மயங்கிய பறவைகள், கறவைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்

செங்கண் கோடச் செய்ய வாய் கொப்பளிப்பக்

குறுவெயர்ப் புருவம் குடிலிப்பக்

கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது

பறவையின் கணங்கள் கூடு துறந்து

வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்

கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்

கவிழ்ந்து இறங்கிச் செவி ஆட்டகில்லாவே

- நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்.

இதன் மூலம் ஆடு, மாடு மேய்ப்போரிடையே இவ்விசைக் கருவி இருந்ததும், இசைக்கு மயங்கிய ஆவினம், புள்ளினம் பற்றியும் தெரிய வருகிறது.

தங்கேஸ்

சில்வியா பிளாத்தின் ‘பெண் லாசரஸ்’

சில்வியா பிளாத் *(27.10.1932 – 11.02.1963)* ஒரு அமெரிக்கக் கவிஞர். முப்பது வயதிலேயே தன் வாழ்க்கையைத் தற்கொலையில் முடித்துக்கொண்ட உலகப் புகழ்பெற்ற கவிஞர் மற்றும் நாவலாசிரியர் ஆவார். இவரின் *Confessional poetry or Confessionalism* (தன்னிலைவாதக் கவிதைகள் - தன் வாழ்க்கையினை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்ட ஒப்புதல் கவிதைகள்) ஐம்பதுகளில் அமெரிக்காவின் மிக முக்கியமான கவிதை உத்தி வளர்ச்சியாகும். மேலும் நவீனத்துவத்தின் முன்மாதிரி *(Postmodernism)* என்று அழைக்கப்படுகிறது.

சிறு வயதிலிருந்தே தற்கொலை எண்ணம் வேரூன்றி இருந்த பிளாத் தொடர்ச்சியாக மருத்துவமனைகளில் மனநல சிகிச்சைகள் பெற்று வந்தார். ஒவ்வொரு பத்து வருடத்திற்கு ஒருமுறை என்ற ரீதியில் தற்கொலையை அரங்கேற்றிப்பார்ப்பது இவரது வாடிக்கை. இரண்டு முறை பிழைத்துக்கொண்ட அவர் மூன்றாவது முறை அதில் வெற்றி பெற்றிருந்தார். அப்போது அவருக்கு வயது முப்பது மட்டுமே. அதற்குள் டெட் ஹியூஸ் *(Ted Hughes)* என்ற அமெரிக்கக் கவிஞரைத் (விமர்சகர் மற்றும் குழந்தைகளுக்குக் கதைசொல்லி) திருமணம் புரிந்து இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விவாகரத்தும் பெற்றுவிட்டார் (கணவருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருந்ததைக் கண்டதால் விவகாரத்து பெற்றார்). ஆறு ஆண்டுகள் மட்டுமே நீடித்த திருமண வாழ்க்கை முறிவு பெற்றபோது மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானார். அதற்குள் கணவர் வேறொரு பெண்ணுடன் வாழத் தொடங்கிவிட்டார். ஆண்களின் துரோகம் சமூகத்தின் போலித்தனம் போன்றவை அவரைத் துயர்படுத்தின. குழந்தைகள் இரண்டும் பிளாத்தோடுதான் இருந்தன. அதிக மனஉளைச்சலுக்கு ஆளான இரவொன்றில் மின் அடுப்பில் *(oven)* தலையைத் திணித்துத் தன் வாழ்வை முடித்துக்கொண்டார். வாழ்க்கை தந்த வெறுமைக்குப் பரிசாக அதற்குத் தனது மரணத்தைத் தந்து மறைந்துபோன பெண் கவிஞர்தான் சில்வியா பிளாத்.

பெண் லாசரஸ் *(Lady Lazarus)* என்ற இந்தக் கவிதை பிளாத்தின் கவிதைகளில் முக்கியமானதும் உலகப் புகழ்பெற்றதுமாகும். பைபிளின்படி லாசரஸ் என்ற ஆண் புதைக்கப்பட்ட கல்லறைக்குச் சென்று இயேசு கடவுளின் மகிமையை உணர்த்துவதற்காக அவனை உயிரோடு எழுப்புகிறார். ஆனால் இங்கே பெண் லாசரஸாகத் தன்னைப் பாவித்துக்கொள்ளும் பிளாத் தன் மரணத்திலிருந்து தானே உயிர்த்தெழுந்ததாகவும் தான் பீனிக்ஸ் பறவை போலச் சாம்பலில் இருந்து உயிர்த்து வந்தது தன்னைக் கண்காட்சி போல் பாவித்துப் பார்வையிடும் இந்த உலகத்தையும் மனிதர்களையும் காற்றைப் போல விழுங்கி விடுவதற்கே என்றும் கூறுகிறார்.

அதைவிட பிளாத் இந்தக் கவிதைகளில் நம் மனதில் உயர்ந்து நிற்பதற்கு இன்னொரு காரணமுண்டு. அதுதான் தன்னை எப்பொழுதும் பலவீனர்களோடும் அநியாயத்தால் பாதிக்கப்பட்டவர்களோடும் அடையாளம் கண்டுகொண்டு அவர்களுக்காகக் கவிதை வழியாகக் குரல் கொடுக்கும் கவித்துவக் குணம்.

இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரின் வதைமுகாம்களில் நாஜிக்களின்

மருத்துவர்கள் ஆயிரக்கணக்கான அப்பாவி யூதர்களை ஒன்றாகக் கொன்று குவித்துப் பல அபத்தமான பரிசோதனைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களை எரித்த சாம்பலைக் கிளறிக் கிளறி ஏதாவது தங்க நாணயங்கள் திருமண மோதிரங்கள் அதில் கிடைக்கிறதா என்றும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களின் தோல்களை உரித்துத் தங்களது அலங்கார விளக்குகளுக்கு மேல் அதை ஒட்டி அழகுபடுத்திப் பார்த்தார்கள்.

இதையெல்லாம் கண்ட பிளாத் தன்னை ஒரு யூதப் பெண் என்று பகிரங்கமாக இந்தக் கவிதையில் பிரகடனப்படுத்திக்கொள்கிறார். தான் வதை முகாமில் இருப்பதாகவும் தன் சாம்பலைக் கிளறினால் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை என்றும் ஆனால் தான் அவர்களுக்கு மரணத்தைப் பரிசளிக்க மீண்டு எழுந்து வரப்போவதாகவும் தெரிவிக்கிறார். அதுமட்டுமல்ல நாஜிக்களின் மருத்துவர் பணியாளர்கள் அவர்களின் கடவுள் சாத்தான் என்று அத்தனை பேரையும் பார்த்துக் குற்றவாளிக்கூண்டில் நிற்க வைத்துக் கேள்விகளால் துளைத்தெடுக்கிறார்.

மேலோட்டமாகப் பார்த்தால் தற்கொலையைக் கொண்டாடுவது போல் இந்தக் கவிதை தோன்றினாலும் ஆண் ஆதிக்கத்திற்கும் அவலமான சமூகத்திற்கும் எதிர்வினையாகப் பெண்மையின் உணர்ச்சிக் கொந்தளிப்பான குரலாக இந்தக் கவிதை இங்கே ஒலிப்பதைக் காணலாம். இனி கவிதை..

பெண் லாசரஸ்

- சில்வியா பிளாத்

பத்து வருடங்களுக்கு ஒருமுறை
அதை நான் வெற்றிகரமாக
பரீட்சித்துப் பார்த்துவிடுகிறேன்

நான் ஒரு நடக்கும் அதிசயம்
நாசிக்களின் அலங்கார விளக்காக மாறி
இருக்கிறது
எனது அங்கத்திலிருந்து உரித்தெடுக்கப்பட்ட
மேல் தொலி

என் வலது கால்
ஒரு காகித எடை தாங்கி
களையற்ற என் முகமோ
உடல்களின் மீது போர்த்தும்..
யூதர்களின் சவத்துணி

ஓ என் எதிரியே!
என் முகத்தைப் போர்த்தியிருக்கும்
சவத்துணியை அகற்று
நான் உன்னைப் பயமுறுத்துகிறேனா?

என் மூக்கு
விழிகள் இருந்த இடத்தில்
இப்போது தென்படும்
கண்குழிகள்
பற்களின் முழுத் தொகுப்பு
யாவும் யாவும் ஓரிரு நாட்களில்
காணாமல் போய்விடும்

கல்லறைக் குழிகள்
தின்ற என் தேகத்தின் சதைகள்
விரைவில் என்னுடன் வீட்டிலிருக்கும்

நான் ஒரு மகிழ்ச்சியான பெண்!
என் வயது முப்பதுதான்
ஒரு பூனையைப் போல
ஒன்பது முறை நான் இறக்க வேண்டும்

இது மூன்றாம் முறைதான்
ஆனாலும் என்ன?
குப்பைதானே இந்த வாழ்க்கை
பத்தாண்டுகளுக்கு ஒருமுறை
அழித்துவிட வேண்டியதுதானே

கோடி கோடி இழைகளால்
நெய்யப்பட்டது காட்சிப்படுத்தப்பட்ட
இந்த என் உடல்!
பாருங்கள்
இதை வேடிக்கை பார்க்க
நெருக்கியடித்துத் தள்ளுகிறது கூட்டம்

கேளிக்கையென
வேடிக்கை பார்க்க வந்த கூட்டமே!
மரியாதைக்குரிய ஆண்களே பெண்களே!
என் ஆடையை அவிழ்த்தெறியுங்கள்

பாருங்கள்
இதுதான் என் கரங்கள்...
இது என் முழங்கால்...
இது என் எலும்புகள் இது என் தோல்
எல்லாம் சேர்த்ததுதான் நான்

நான் ஒரு பெண்
பழைய அதே பெண்

அது முதல் முறை நடந்தபோது
அது ஒரு விபத்து
அப்போது எனக்குப் பத்து வயது

இரண்டாம் முறை அது நடந்தபோது
அதை நீட்டிக்கவே விரும்பினேன்
அதனிடமிருந்து திரும்பி வரவே மனதில்லை
ஒரு சிப்பியைப்போல
பலவந்தமாய் அதில் என்னை மூடிக்கொண்டேன்.

அவர்கள் என்னை
அழைத்துக்கொண்டே இருந்தார்கள்
சிப்பியில்
ஒட்டிக்கொண்ட முத்துக்களை
பிய்த்தெடுப்பதைப்போல
என் உடலில் இருந்து புழுக்களைப்
பிய்த்தெடுத்தார்கள்

யாவற்றையும் போல
இறப்பும் ஒரு கலையே!
அதை நான் மிக அற்புதமாக
அரங்கேற்றினேன்

நான் ஏன் அவ்விதம் செய்தேன்?
ஏனென்றால் இங்கே நான்
நரகம் போல் உணர்ந்தேன்
நான் ஏன் அவ்விதம் செய்தேன்?
ஏனென்றால்
அதை உண்மையென உணர்ந்தேன்

எனக்கொரு அழைப்பு வந்திருக்குமென்று
நீங்கள் யூகிக்கலாம்

ஒரு அறையில் அமர்ந்துகொண்டு
இதை நிறைவேற்றுவது எளிது
நிறைவேற்றிவிட்டு
அமர்ந்திருப்பது அதனினும் எளிது

மறுபடியும் அரங்கேறும் காட்சிகள்
விடியல் வெளிச்சத்தில்
அதே இடம் அதே முகம்
அதே விலங்குகள்
அதே கூச்சல்

அது அதிசயம்தான்
ஆனால் கட்டற்ற கூச்சல்தான்
என்னைச் சாய்க்கிறது

வாருங்கள் இறந்து மீண்டவளைப் பார்வையிட!
ஆனால் பார்வையிட ஒரு கட்டணமுண்டு
ஒவ்வொரு அங்கத்திற்கும்
ஒரு பிரத்யேகக் கட்டணம்
முதலில் வடுக்களுக்கு,

பிறகு இதயத்தின் துடிப்போசைகளை
கேட்பதற்கு

ஒரு வார்த்தைக்கு
ஒரு தொடலுக்கு
என்னுடைய ஒரு துளி ரத்தத்தைத்
தொடுவதற்கும்
மிகப்பெரும் கட்டணமுண்டு

வாருங்கள் கட்டணமுண்டு
என்னுடைய ஒற்றைத் தலைமுடிக்கு
உடைகளுக்கு
மிகப்பெரும் கட்டணமுண்டு
ஆகையால்
திரு மருத்துவர் அவர்களே!
திரு எதிரி அவர்களே!

இன்று நான் உங்கள் இசை விருந்து
இன்று நான் உங்களுக்கு
ஒரு விலைமதிப்பற்ற பொருள்
ஒரு தங்கக் குழந்தை
ஒரு அலறலுக்கு உருகிப்போவேன்

என்னை நானே மீண்டும் எரிப்பேன்
ஆனால் நானே

மரியாதைக்குரியவர்களே!
என்னுடல் மீதான
உங்கள் அக்கறையை
ஒருபோதும் குறைத்து மதிப்பிடுவேன்
என்று எண்ணாதீர்கள்

என்னுடைய சாம்பலை என்ன செய்வாய்?
சாம்பலை என்ன செய்வாய்?
குச்சியால் கிளறிப்பார்ப்பாய்
தசைகள் எலும்புகள் எலும்புகள்
வேறேதும் இல்லை அங்கே

ஒரு கேக் சோப்
ஒரு திருமண மோதிரம்
சில தங்கத் துணுக்குகள்
வேறேதும் இல்லை

திருவாளர் கடவுளே!
திருவாளர் சாத்தானே!
ஜாக்கிரதை
எச்சரிக்கையாக இருங்கள்

சாம்பலிலிருந்து
என் சிவப்பு நிறத் தலைமுடியுடன்
நான் மீண்டும் எழுவேன்
பிறகு மனிதர்களைக் காற்றைப் போல
உண்டுவிடுவேன் ■

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..